இனப்படுகொலை என்பதனை ஏற்றுக்கொண்டு அதற்கு பரிகாரம் தேடும் விடயத்தில் தமிழ் அரசியல் அமைப்புகளிடையே ஒருமித்த கருத்து நிலவவில்லை என்பது விடுதலை வேண்டி நிற்கும் இனம் என்றவகையில் அரசியல் ரீதியான பின்னடைவு நிலை என்பதனை தமிழ் மக்கள் கவனத்திற் கொள்ள வேண்டும். குறிப்பாக, ஈழத்தமிழ் மக்களிடையே செயற்படும் அரசியல் அமைப்புகள் ஓரணியில் நின்று செயற்படவேண்டும் என ஒற்றுமையை வலியுறுத்துபவர்கள், இதுபோன்ற முதன்மையான விடயங்களில் ஒரு இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதனை விடுத்து, தேர்தல்களில் வாக்குகள் சிதறாமல் இருக்க வேண்டும் எனக் கரிசனம் கொள்வது விவேகமான நடவடிக்கையாக அமையாது.

வடமாகாணசபையில், தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் இனப்படுகொலை தொடர்பாக தீர்மானம் ஒன்றினை கொண்டுவருவதற்காக தீர்மான நகல் ஒன்றை அண்மையில் மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் சமர்ப்பித்திருந்தார். அதனைத்தொடர்ந்து அவ்வாறான தீர்மானம் எதனையும் தமிழ்தேசியக்கூட்டமைப்பின் ஆதிக்கத்தில் உள்ள சபைகளில் கொண்டுவரவேண்டாம் என அறிவுறுத்தி கூட்டமைப்பின் தலைமைப்பீடம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தது. இது தொடர்பில் தமது நிலைப்பாட்டினை விளக்குவதற்காக யாழ் ஊடக அமையத்தில் செய்தியாளர்களுடனான சந்திப்பு ஒன்றை கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. இச்சந்திப்பில் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்த சுமந்திரன், நடைபெற்றது இனப்படுகொலை என்பதனைத் தாம் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், சிறிலங்கா பாராளுமன்றத்தில் இதுபற்றி பேசியிருப்பதாகவும், ஆனால் ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளரின் விசாரணைகளுக்கு குந்தகம் ஏற்படாதிருப்பதற்காகவே இத்தகைய தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டாம் என தாம் கோரியிருப்பதாகவும் கூறியிருக்கிறார். அதாவது நடைபெற்றது இன்படுகொலைதான் என வடமாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றினால் அது நடைபெறும் விசாரணைகளையும் விசாரணையின் பின்னர் வெளியிடவிருக்கும் தீர்ப்பினையும் பாதிக்கும் என்பது சட்டத்தரணி சுமந்திரனின் வாதமாகவிருந்தது. வடமாகாண சபை மேற்கொள்ளும் தீர்மானங்களை அச்சபையின் ஆளுனர் மட்டுமல்ல அதன் தலைமைச் செயலாளரே சட்டை செய்யாத நிலையில் ஐநா மனிதவுரிமைச்சபையும், சர்வதேசமும் இத்தீர்மானத்தைக் கவனத்தில் எடுத்துச் செயற்படும் என அவர் எதிர்பார்ப்பது அவருக்கே கொஞ்சம் அதிகமாகத் தெரியவில்லையா என பத்திரிகையாளர் சந்திப்பில் இருந்தவர்கள் யாரும் கேள்வி எழுப்பினார்களா என்பது தெரியவில்லை.

2013ம் ஆண்டு மார்ச் மாதம் இருபத்தியேழாம் திகதி தமிழ்நாடு சட்டசபையில் ஈழத்தமிழர்கள் தொடர்பாகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் இலங்கைத் தமிழர்கள் மீதான இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் பக்கசார்பற்ற பன்னாட்டு விசாரணை நடாத்தப்பட வேண்டும் என ஒரு தீர்மானம் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற்றபட்டது. தமிழ்நாட்டில் மாணவர் போராட்டங்கள் வலுப்பெற்றிருந்த ஒரு காலகட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றபட்டமை அவதானிக்கத்தக்கது. இவ்விடத்தில், தமிழ்நாடு சட்டசபையில் இத்தகையதொரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்ற முடியுமானால், வடமாகாண சபையில் ஏன் இத்தீர்மானத்தைக் கொண்டு வரமுடியாது எனக் கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது.

வடமாகாணசபையில் தீர்மானம் கொண்டு வருவது தொடர்பில், சர்வதேச நடைமுறைகளை மேற்கோள்காட்டி தமது நிலைப்பாட்டை விளக்கி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கும் தமிழ் சிவில் சமூக அமையம், சர்வதேச அரங்கில் முன்னுதாரணமாக நடைபெற்ற சில நகர்வுகளை பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறது.

- வடக்கு ஈராக்கில் ISIS அமைப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இனப்படுகொலையின் பாற்பட்டவை என ஈராக்கிய பாராளுமன்றம் 2014 ஒகஸ்ட் இல் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.
- காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் இனப்படுகொலையின் பாற்பட்டது என பாகிஸ்தான் பாராளுமன்றம் 2014 ஒகஸ்ட் இல் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.
- காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் இனப்படுகொலையின் பாற்பட்டது என பலஸ்தீன அதிபர் திரு. முகமட் அபாஸ் அவர்கள் 2014 செப்ரெம்பர் ஐ நா பொதுச்சபையில் ஆற்றிய உரையில் பதிவு செய்து இருந்தார்.
- சென்ற நூற்றாண்டின் ஆர்மீனிய இனப்படுகொலை குறித்து ஐரோப்பிய பாராளுமன்றம் உட்பட உலகின் பல்வேறு பாராளுமன்றங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இத்தீர்மானங்களில் சிலவற்றை, குறிப்பாக பலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலிய நடவடிக்கைகளை 'இனப்படுகொலை' எனக்குறிப்பிடுவதனை மேற்குலகம் ஏற்றுக்கொள்ளவில்லை. பலஸ்தீன அதிபர் அபாஸ் ஐ.நா. சபையில் இவ்வாறு கருத்து வெளியிட்டமையையும் அமெரிக்கா விரும்பவில்லை என்பதனையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும். இருப்பினும் தமது மக்களுக்கு நடைபெற்ற அவலத்தை, மற்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக வேறு ஒரு பெயர் சொல்லி அழைக்க பலஸ்தீனர்கள் உடன்படவில்லை. அவ்வாறாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் நீட்சியாகச் செயற்படும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் ஏன் இவ்வாறு செயற்படுகின்றன?

மேற்படி கேள்விக்கு பதில் காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அரசியலை புரிந்து கொள்ள வேண்டியது அவசியமானது. வெளித்தரப்புகளில் ஆலோசனையின்படி நடந்து கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தமது அதிகாரத்தை தக்க வைப்பதற்கு தமிழ் மக்களின் வாக்குகள் தேவைப்படுகிறது. ஆகவே தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள 'இனப்படுகொலை' என்றும் வெளித்தரப்புகளை திருப்திப்படுத்த அதுபற்றி பேசாதிருப்பதுமாக கூட்டமைப்பின் சந்தர்ப்பவாத அரசியல் தொடர்கிறது.

## இனப்படுகொலை விடயத்தை ஏற்றுக்கொள்வது தொடர்பில் வெளித்தரப்புகள் மத்தியில் உள்ள தயக்கம் புரிந்து கொள்ளக்கூடியதுதான்.

யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், இனப்படுகொலை தொடர்பான சர்வதேச நிலைப்பாட்டைச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், இனப்படுகொலை என்பதனை நிருபிப்பதற்கு, குற்றம் புரிந்தவர்களின் மனவெண்ணம் இனப்படுகொலை புரிவதாக இருந்தது என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். சுமந்திரனின் இக்கூற்று கவனத்திற்குரியது. ஏனெனில் மேற்கத்தைய சக்திகளும் சரி, இந்தியாவும் சரி இவ்வியடத்தில் ஓரே நிலைப்பாட்டிலேயே இருக்கின்றன. அதாவது பயங்கரவாத்திற்கு எதிரான போரில் சில போர்க்குற்றங்கள் அல்லது மீறல்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதனை ஏற்றுக்கொள்ளும் இத்தரப்புகள் இனப்படுகொலைக்கான எண்ணத்துடன் சிறிலங்கா அரசாங்கம் இருந்தது என்பதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதலால் இன நல்லிணக்கம், நல்லாட்சி, ஜனநாயகப்படுத்தல் போன்ற வழிமுறைகளினூடகப் பிரச்சனையைத் தீர்க்க முடியும் என அவை நம்பியிருக்கின்றன. இத்தரப்புகளைப்பின்பற்றி அவர்களது போதனைகளையே தமிழ் மக்களுக்கு போதிக்க கூட்டமைப்பும் அதன் புலம்பெயர் ஆதரவாளர்களும் முனைகிறார்கள்.

இதுவே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அடைவதற்கான முயற்சிகளுக்கும், மேற்கத்தைய நிலைப்பாட்டுக்கும் இடையிலான முதன்மையான முரண்பாடு. இந்த முரண் களையப்படாமல் தமிழரின் விடுதலை அரசியல் முன்னேற முடியாது என்பதே யதார்த்தமாக இருக்கிறது.

கருத்துக்களுக்கு @orupaper - facebook.com/orupaper

**ஒரு பேப்பர்**
**கிடைக்குமிடங்கள்**

**New Malden**
Ayngaran .......... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan .......... 020 8605 0434
Murugan Kovil ...... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House .......... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil ......... 020 8795 4258
Niru Con.Store ........ 020 8672 3200
Ayngaran .......... 020 8540 1500
Suvai Aruvi.......... 020 8543 6266
Adchaya .......... 020 8540 8192

**Croydon**
Best Foods.......... 020 8684 6269
Haran Bros.......... 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video.......... 020 8664 8351
Spice Land.......... 020 8667 1700

**Lewisham**
Chandra .......... 020 8333 8680
Eelam Shop .......... 020 8690 6545
Katpagam .......... 020 8694 8810
AJ Video .......... 020 8691 8888
Sivan Kovil .......... 020 8318 9844
KRS Supermarket ... 020 8297 9432
Best Food .......... 020 8692 9811

**Eastham**
Seelans .......... 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food .......... 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033
Anjappar .......... 020 8552 1155

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan .......... 020 8514 1744
Angels .......... 020 8553 0490
Sri store ltd .......... 020 8553 7737

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas .......... 020 8805 9529
Nagapoosani Temple 020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans .......... 020 7609 1912
Prabas .......... 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
Eelavan .......... 020 8863 6160
Prabhas .......... 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.......... 020 8423 9933
Sambal Express....... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods.......... 020 8900 0100
Vahizan Disc .......... 020 8795 0648

**Ealing**
Amman kovil.......... 020 8810 0835

**Greenford**
Ambiha .......... 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Duvaraka C & C ...... 020 8813 9126
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C ......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret .......... 020 8571 4434

உ
கற்பகபதி

# வோல்தம்ஸ்ரோ
# ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

## எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.

### பணிநிலை – ஆலய சிவாச்சாரியார் (Minister of Religion)

தகைமைகள் – விண்ணப்பதாரி சிவாச்சாரியார் பட்டம் (குருக்கள்) பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும். இறுதி 5 வருடங்கள் ஆலயக் குருக்களாக பணி செய்திருக்க வேண்டும்.

கடமைகள் – ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூஜை செய்தல்.

வேதனம் – பிரித்தானிய வேதன முறைக்கமைவானது

**விண்ணப்ப முடிவு திகதி: 31-12-2014**

### பணிநிலை – உதவி சிவாச்சாரியார்கள் (Religion Workers)

தகைமைகள் – விண்ணப்பதாரி ஆகம விதிமுறைகளும் பூஜை முறைகளும் கற்றுத் தேறியிருக்க வேண்டும். குறைந்தது 2 வருடங்களாவது ஆலய பணிகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

கடமைகள் – ஆலய சிவாச்சாரியார்களுக்கு சகல உதவிகளும் செய்தல் வேண்டும்.

வேதனம் – பிரித்தானிய வேதன முறைக்கமைவானது

**விண்ணப்ப முடிவு திகதி : 31-12-2014**

### பணிநிலை – சமையலாளர் (Chief Cook / Cook)

தகைமைகள் – ஆலய வளாகத்தில் சமையல் செய்திருக்க வேண்டும். சகல விதமான சைவ உணவுகளும் சமைக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

கடமைகள் – பக்தர்களுக்கு சைவ உணவு தயார் செய்தல்.

வேதனம் – பிரித்தானிய வேதன முறைக்கமைவானது

**விண்ணப்ப முடிவு திகதி : 31-12-2014**

### பணிநிலை – நாதஸ்வர, தவில் கலைஞர்கள் (Religion Workers)

தகைமைகள் – நாதஸ்வர, தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதோடு 50 வயதிற்குட்பட்டவராகவும் தமது பிராய காலத்தில் இப்பணி செய்து வருபவராகவும் இருக்க வேண்டும்

கடமைகள் – பூஜை காலங்களில் மங்கள இசை வாசித்தல்.

வேதனம் – பிரித்தானிய வேதன முறைக்கமைவானது

**விண்ணப்ப முடிவு திகதி : 31-12-2014**

### பணிநிலை – சைவ சமய முறைப்படி இறுதிக்கிரியை செய்யக் கூடிய குருக்கள் (Religion Workers / Minister of Religion)

தகைமைகள் – சைவ சமய முறைப்படி இறுதிக் கிரியைகள் அந்தியேட்டி போன்ற செய்வதற்கு கற்றிருப்பதோடு ஆங்கில அறிவுள்ளவராகவும் இருக்க வேண்டும். (ஆங்கில அறிவுக்கமைய விண்ணப்பதாரியின் கால எல்லை நிர்ணயிக்கப்படும்

கடமைகள் – இறுதிக் கிரியைகள் செய்தல், அந்தியேட்டிக் கிரியைகள் செய்தல்.

வேதனம்– பிரித்தானிய வேதன முறைக்கமைவானது

**விண்ணப்ப முடிவு திகதி : 31-12-2014**

**SRI KATPAKA VINAYAGAR TEMPLE**

Charity Number : 1092252

2-4, Bedford Road, Walthamstow, E17 4PX, London.

TEL: 020 8527 3819 FAX:020 8523 4171

# நில உரிமையின் அவசியத்தை உணர்த்தும் "மீரியபெத்த" அவலம்



*'ஏனென்று கேட்க*

*நாங்கள் யார்?.*

*நாங்கள்*

*உழைக்கவும் சாகவுமே பிறந்தவர்கள்!'*

- மலையக கல்லறை ஒன்றில் பதியப்பட்டுள்ள பேருண்மை.

பதுளை மாவட்டத்திலுள்ள கொஸ்லந்த பிரதேசத்தில் மக்கள் புதையுண்டு போனார்கள் என்கிற செய்தி உலகத்தமிழினத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

அங்குள்ள மீரியபெத்தவில், லயன்களில் வாழ்ந்த தமிழ் தோட்டத்தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த 400 பேர் மண் சரிவில் மாண்டு போனதாக உடனடியாக வெளிவந்த செய்திகள் கூறின.

**தெளிவாகச் சொல்லப்போனால், 20-21 ஆம் நூற்றாண்டின் நவீன அடிமைகள் இம் மலையக மக்கள். இது கசப்பான, சாசுவதமான உண்மை. நிலமற்ற மனிதர்களை வேறெப்படி அழைக்கலாம்!.**

ஆயினும் அரச செய்தியோ, முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட மக்களின் எண்ணிக்கையை குறைத்துக் கூறியது போன்று , இங்கு புதையுண்டுபோன மக்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கூறுவதாக அப்பிரதேச மக்கள் விசனமடைந்துள்ளார்கள்.

தோட்ட நிர்வாகம், புவி ஆய்வுத் திணைக்களம், அரசு என்பன இதற்கு தாங்கள் பொறுப்பில்லை என்பதுபோல் நழுவல் அறிக்கைகளை வெளியிடுகின்றன.

தாம் விடுத்த எச்சரிக்கையை தோட்ட நிர்வாகம் செவிமடுக்கவில்லையென்று ஒரு தரப்பும், அப்படியாயின் அம்மக்களைக் குடியமர்த்தத் தேவையான நிலத்தினை அரசு ஒதுக்கித்தரவில்லையென்று மறுதரப்பும், மரணித்த உடலங்கள் மீது நின்று குதர்க்கம் பேசுகின்றன.

வட - கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களோ, சொந்த நிலத்தை பறிகொடுக்கின்றனர்.

மலையகத் தமிழரோ, வாழ்ந்த மண்ணில் புதையுண்டு போகின்றனர்.

இந்நிலை மாற வேண்டும்.

ஆனாலும் மலையக மக்களின் அடிப்படை வாழ்வுரிமைப் பிரச்சினை புதையுண்டு போகக் கூடாது. இது வெறுமனே நிவாரணப் பிரச்சினை அல்ல. நீண்டகாலமாகவே நிலவி வந்த, இம்மக்களுக்கும் நிலத்திற்கும் இடையிலான பிரதான முரண்பாடு, தொழிற் சங்கத் தலைவர்களால் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது என்பது தான் நிஜம்.

இந்தச் சரியான முரண்பாட்டினை முன்வைத்து, இதற்காகக் குரல் எழுப்பும் அரசியல் சக்தியாக, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் அவர்களையே சுட்டிக்காட்ட முடியும்.

இலங்கையிலுள்ள, நிறுவனமயப்படுத்தப்பட்ட ஒரு பெரும் தொழிலாளர் வர்க்கத்தைச் சார்ந்தவர்களே மலையக மக்கள்.

இவர்களுக்கு குந்தியிருக்க பாதுகாப்பான ஒரு நிலம் இல்லை.

அந்த மக்களுக்கு சொந்த குடிநிலம் வேண்டுமென்று குரல் எழுப்ப, அதற்காகப் போராட, அதே மக்களின் வாக்குகளைப் பெற்று மந்திரிகளாகும் எவருக்கும் அக்கறையில்லை இரண்டு வருடத்திற்கு ஒருமுறை, இம்மக்களின் 50 ரூபாய் கூலி (450 இலிருந்து 500 ஆக ) உயர்விற்காக அரசோடு பேரம்பேசுவதே அரசியலாகி, அதுவே இம்மக்களின் விதியாகி விட்டது.

பெருந்தேசிய இனவாத அரசுகளைப் பொறுத்தவரை, இம்மக்களை தூக்கி நிமிர்த்த வேண்டும்என்கிற அவசியம்எப்போதும்இருந்ததில்லை. அந்தத் தேவையும் அவர்களுக்கில்லை.

லால் பகதூர் சாஸ்திரியோடு ஒப்பந்தம் போட்டு, காடு மலைகளைக் களனிகள் ஆக்கிய அதிமானுடர்களைத் துரத்தியடிக்கும் வேலைகளையே சிறிமாவோ ஆட்சி அன்று முன்னெடுத்தது.

அம்மக்களின் வாக்குகளைப் பெறுவோர், நாடாளுமன்றில் தமக்கு ஆதரவாக இருந்தாலே போதும் என்பதுதான் பெருந்தேசிய இனவாத ஆட்சியாளர்களின் பெருவிருப்பு. அதற்கு இசைவாக பல மலையகத் தலைவர்கள் அரசோடு இணைந்து செயற்படுகின்றார்கள்.

தம்மைப்போல், வருகிற சனாதிபதித் தேர்தலில் அரசினை ஆதரித்து, காணியுரிமை, மாகாணசபை உரிமை போன்று சகல உரிமைகளையும் பெற்று பெருவாழ்வு வாழ, தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டுமென அறிவுரை வேறு கூறுகிறார் பிரபா கணேசன்.

முதலில் மலையக மக்களுக்கு குடியிருக்க நிலமும், வீடும் அரசிடமிருந்து பெற்றுத்தர பிரபா முன்வர வேண்டும்.

**அரசியல் பார்வை**

**இதயச்சந்திரன்**

அதனை விடுத்து விடுதலைப் புலிகள் போன்று சந்தர்ப்பங்களை தவற விடக்கூடாதென கூட்டமைப்பிற்கு ஆலோசனை வழங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

இராணுவச் சமநிலை நிலவிவந்த வேளையில்தான் போர்நிறுத்தத்தை பிரகடனம் செய்து, பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். இதில் எங்கே அவர்கள் சந்தர்ப்பத்தைத் தவற விட்டார்கள் என்று புரியவில்லை.

சிங்களம் தருவதை ஏற்றுக்கொண்டு ( அது எதையும் இதுவரை தந்ததில்லை என்பது வேறு கதை) போவது அரசியல் சந்தர்ப்பவாதம்.

அதற்கு, சொந்தமாக ஒரு அரசியல் கட்சி தேவையில்லை. அதைவிட சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியுடனோ இணைந்து விடுவது மிகவும் பொருத்தமான செயலாக இருக்கும்.

தெளிவாகச் சொல்லப்போனால், 20-21 ஆம் நூற்றாண்டின் நவீன அடிமைகள் இம் மலையக மக்கள். இது கசப்பான, சாசுவதமான உண்மை. நிலமற்ற மனிதர்களை வேறெப்படி அழைக்கலாம்!.

சாதி-மதங்களுக்கு அப்பால், ஒரு இனத்தின் 'தொழிலாளர் வர்க்கம்' மிகக் கொடூரமாக, 150 ஆண்டுகளுக்கு மேலாக ஒடுக்கப்படும் குரூரம், 'சோசலிசக் குடியரசு' என்று சுய தம்பட்டம் அடிக்கும் இலங்கையில்தான் நடக்கிறது.

துயர் பகிர்ந்து, பத்தோடு பதினொன்றாகக் கடந்து செல்லும் நிகழ்வல்ல இம் மண் சரிவும், மனிதர்களின் இழப்பும்..

இம்மக்களின் நிரந்தர விடிவிற்காக, அனைத்து ஒடுக்கப்படும் மக்களும் ஓரணியில் திரள வேண்டும். இந்தப் பூவுலகில் இன ஒடுக்குமுறைக்கும், வர்க்க ஒடுக்குமுறைக்கும் ஒரே நேரத்தில் முகம் கொடுப்பது மகா கொடுமை.

இனியாவது ( !) இந்த அதியுன்னத, பெருவலி சுமக்கும் மானுடர்களுக்காக என்ன செய்யப் போகிறோம்?.

**சாதி-மதங்களுக்கு அப்பால், ஒரு இனத்தின் 'தொழிலாளர் வர்க்கம்' மிகக் கொடூரமாக, 150 ஆண்டுகளுக்கு மேலாக ஒடுக்கப்படும் குரூரம், 'சோசலிசக் குடியரசு' என்று சுய தம்பட்டம் அடிக்கும் இலங்கையில்தான் நடக்கிறது.**

சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்கள் அடிக்கடி கொழும்பிற்கு வருவதால், படைத்துறைத் தளபதிகளும், பாதுகாப்பு செயலாளர்களும் அங்குமிங்கும் ஓடுப்பட்டுத் திரிகிறார்கள். இவர்களுக்கு மலையக மக்களின் உயிர்வாழும் உரிமைப்பிரச்சினை குறித்து சிந்திப்பதற்கு நேரமிருக்காது. ஜனவரியில் தேர்தல், மார்ச்சில் ஐ.நா.வில் கண்டம் என்பதுதான் சிங்களத்தின் தலையாய பிரச்சினை.

அதேவேளை சென்ற வருடம் அந்தமான்-நிக்கோபார் தீவுகளுக்கு அண்மையில் ஓடிப்பிடித்து விளையாடிய சீன நீர்மூழ்கிகள், இப்போது நேரடியாகவே கொழும்பில் தலை காட்டுவதால், பெரும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ள இந்தியத் திருநாட்டிற்கு, மீரியபெத்த பற்றிய அக்கறை இருக்காது.

மியன்மாரில் (பர்மா) விட்ட இராசதந்திரத் தவறை , மீண்டும் இலங்கை விவகாரத்தில் விடக்கூடாதென திட்டமிட்டு செயல்படும் இந்தியா, மகிந்த அரசோடு மிகவும் நெருங்கிவரவே முயற்சிக்கும்.

தென் சீனக் கடலில் உள்ளது போன்று, நீர்மூழ்கிக் கப்பல்களை நிறுத்தும் சுரங்கத் தளங்கள் இலங்கையில் இல்லையென்று தெரிந்தாலும் இந்தியாவின் அச்சத்திற்கு வேறுசில காரணங்களும் உண்டு.

அது குறித்து, அடுத்த வாரம் பார்ப்போம்.

*கருத்துக்களுக்கு -*
*facebook.com/orupaper @orupaper*



# பிச்சைப் பாத்திரங்களும் பெருந்தகைகளும்



**சுகி**
*(ஒரு பேப்பருக்காக)*

ஒரு வீடு சொந்தமாக வைத்திருப்பனுக்கு, வீடு இல்லாதவனை விட ஒப்பீட்டு ரீதியில், வீட்டை எப்பிடிப் பராமரிப்பது, வெள்ளை அடிப்பது, சுவரை கொத்தி பூசுவது, ஓடு மாத்துவது, தோட்டத்தை கொத்துவது, பசளை போடுவது என பலவிடயங்கள் அக்கறையின் பேரில் தெரிந்திருக்கும். வீட்டை அழகாக பாதுகாத்து, பிள்ளை, பேரப்பிள்ளைக்கு கொடுக்க வேண்டும் என்ற அவாவில், அல்லது வீட்டின் விலையை பாதிக்காத வகையில், எதைச் செய்தாலும், ஒரு துார நோக்கோடு, குறைந்தது 40,50 வருடத் திட்டத்தோடுதான் எதனையும் செய்வார்கள். அத்தோடு வீடு உள்ளவனுக்குத்தான் அதை புயல், காற்று, வெள்ளம், தீ என்ற அனர்த்தங்களில் இருந்து எப்பிடி பாதுகாப்பது, அதற்குரிய பாதுகாப்புறுதியை எடுப்பது, வீட்டுக்கடனை எப்படிக்கட்டுவது, அயலவரை எப்பிடி அனுசரணையாக வைத்திருப்பது என்பன பற்றிய சிந்தனைகள், திட்டங்கள் இருக்கும்.

வீடு இல்லாதவனுக்கு வாடகையை மாதம் மாதம் கட்டினோமா ? வீட்டில் ஏதும் பிரச்சனை என்றால் வீட்டுக்காரனுக்கு ஒரு போன் போட்டோமா என்று காலம் போகிவிடும், நடுத்தெருவுக்கு வராமல் இருக்க வாடகையை ஒழுங்காக கட்டுவதோடு சரி. எவ்வளவு குறைந்த வாடகையில், கூடப்பேர் சிக்கனமாக இருந்து சேமிக்கலாம் என்று பார்ப்பதில் தான் பொதுவாக கவனமாக இருப்பார்கள். சாமான்கள் அளவுக்கு அதிகமாக இருந்து சுவர் பூஞ்சனம் பிடித்திருந்தாலும், சுவரின் மேல் ஒட்டிய பேப்பர் உரிந்திருந்தாலும் அவர்களுக்கு அவ்வளவாகக் கவலை கொள்ள மாட்டார்கள். ஏதோ அப்பப்ப வாற பிரச்சனைகளை பார்த்தால் சரி என்ற மனப்பாங்கில் தான் அதிகம் பேர் உள்ளார்கள். ஒரு சிலர் விதிவிலக்கு.

இந்த ஒப்பீடு நாட்டுக்கும் பொருந்தும். எமக்கென்று ஒரு நாடு இருந்திருந்திருந்தால், அந்த நாட்டுக்கு என்னென்ன வேண்டும் என்று சிந்தித்து, இயல்பாகவே அதற்குரியவற்றை உருவாக்கி பேணிப் பாதுகாத்திருப்போம். இப்போ நாம் ஏற்கனவே துார நோக்கம் உள்ளவர்கள் உருவாக்கியவற்றைக் கூட, பாதுகாக்கும் அளவிற்கும், அதன் அவசியத்தை விளங்கிக் கொள்ளும் அளவிற்கும் சிந்தனை செழுமையானவர்களாக இல்லை. அதற்கு காரணம் எமக்கென்று ஒரு நாடு இல்லாமையால் தான்.

உதாரணமாக அங்கு பசி பட்டினி யால் எம்மவர்கள் வருந்தும் போது இரு கை நீட்டி அரவணைத்து உதவ முன்வருகிறார்கள். அதே நேரம் ஒரு தேசிய இனத்திற்கு தேவையான மற்றைய விடயங்களை விளங்கிக் கொள்ள கடினப்படுகிறார்கள். எமக்கென ஒரு மொழி உள்ளது. அதை அழிய விடாமல் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளதோடு அதை பாதுகாப்பாக அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவேண்டிய கடமைப்பாடும் உள்ளது. அதனால் தமிழ் பாடசாலை வளர்ச்சி, தமிழ்கல்வியின் வளர்ச்சி என்ற இரண்டும் அவசியமானதாகின்றது.

அத்தோடு தொடர்பாடலுக்குரிய கருவிகளான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்பனவும் ஒரு தேசிய இனத்திற்கு மிகவும் அவசியமானதொன்றாகும், அது இல்லாவிட்டால் நாம் நாக்கிருந்தும் பேசத்தெரியாத ஒரு இனமாகப் போய்விடுவோம். எமக்காக மற்றவர்கள் பேச, ஊமைகளாக இருக்க வேண்டியவர்களாகி விடுவோம், காலப்போக்கில் உண்மைக்கு புறம்பான செய்திகளை உண்மை போன்று மற்றவர்கள் சொல்லவும், எமக்கு அவசியம் இல்லாததொன்றை அவர்கள் அவசியம் ஆனது போல திரிபு படுத்தி, இவர்களுக்கு இதுதான் இப்போது தேவையானது என்று திணிக்கவும் வழிவகுத்துக் கொடுத்தவர்கள் ஆகுகின்றோம்.

அரசியல் சம்பந்தப்பட்ட மகாநாடுகள், கூட்டங்கள், கலந்துரையாடல்கள், விவாதங்கள் போன்றன ஒரு இனத்தை செழுமைப்படுத்தும், அத்தோடு அதில் கலந்து கொள்ள என்று நாம் வேற்று நாட்டில் வாழும் எம்மவர்களையோ, அல்லது பிற நாட்டவர்களையோ அழைக்கும் போது அவர்களுக்கும் எமக்கும் இடையேயான புரிந்துணர்வு, பரஸ்பரம் என்பன அதிகரிக்கிறது. எதிர்காலத்தில் சில விடங்களை இலகுவாக்க அது உதவும்.

இவற்றுடன் காலத்தின் கண்ணாடி என்று சொல்லப்படுகின்ற இலக்கிய புத்தங்கள், சிறுகதை, குறும் படம், நாடகம், நடனம், கலை வடிவங்கள் என இவை எல்லாமே பல விதத்தில் ஓரே தொழிலையே, அதாவது ஒரு இனத்தை செழிமைப்படுத்தவும், அதன் செழிமையை வெளி உலகுக்கு காட்டும் கருவிகளாக இவை அனைத்தும் அமைகின்றன.

இங்கு வரிசைப்படுத்தப்பட்டுள்ள எல்லாம் ஓர் இனத்திற்கு தேவையான, அவசியமான, ஒரு நாட்டை கட்டியெழுப்ப அத்திவாரங்களாக அமையும் விடயங்களாகும். ஆனால் நாம் இவையெல்லாம் கட்டியெழுப்ப போதிய ஆட்பலம், பணபலம் என்பன அவசியமாகிறது. ஆட்பலத்தை நிவர்த்தி செய்ய சிலர் முன்வந்தாலும், பணபலம் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

ஆனால் பணபலம் உள்ள பெருந்தகைளும், அவர்கள் சாாந்த பணபலம் உள்ள நிறுவனங்களும், நாட்டில் பசி பட்டினியாக இருக்கும் நம்பவர்களுக்கு உதவுவதோடு நின்று விடுகிறார்கள். அவர்களிடம் மற்றையவற்றுக்கும் உதவுவதற்கு பணம் இருந்தாலும், அவர்களால் அதற்கு உதவுவதால் வரும் பலாபலன்களை புரிந்து கொள்ள முடியவில்லை. இதற்கு பணத்தை கொடுப்பதை விட, அங்கு அன்றாடம் அல்லல் படுகின்ற மக்களுக்கு உதவும் போது, அதன் பலாபலன்களை நேரடியாக பார்க்க, கேட்கக் கூடியதாக இருக்கின்றது. அதனால் தொடர்ந்தும் அதையே செய்து வருகிறார்கள்.

பசியான இருப்பவனுக்கு மீனைக் கொடுப்பதை விட, மீன் பிடிப்பதற்கு கற்றுக்கொடுத்து அதற்காக கருவியைக் கொடு என்று சொல்வது போல, உணவு உறைவிடம் என்பது நீண்ட கால பிரச்சனைக்கு நிரந்தர தீர்வாக விடாது. அது வாடகை வீட்டில் இருப்பது போன்றது.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper






# லைக்கா மோபைல் உரிமையாளர் கொழும்பு விமான நிலையத்தில் கைதாம் !



**முல்லை இரங்கன்**

“லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வரும் லைக்கா மொபைல் நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் ‘கத்தி’ படத்தின் தயாரிப்பாளருமான சுபாஷ்கரன் அல்லிராஜா மற்றும் அவரது சகா பிரேம் ஆகியோர் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப் படாத தகவல்கள் வெளியாகியுள்ளன.

கத்தி படம் வெற்றி பெற்றதனை அடுத்து, லைக்கா படத்தயாரிப்பு குழுவினர் இந்தியா சென்று பின்னர், அதனைக் கொண்டாட மாலை தீவுகள் சென்று தங்கியுள்ளார்கள். பின்னர் மாலைதீவில் இருந்து இன்று காலை லண்டன் திரும்ப இருந்துள்ளனர். இந்த நிலையில் அவர்களது விமானம் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையம் சென்று அங்கிருந்து லண்டன் புறப்பட தயாராக இருந்துள்ளது.

சுபாஷ்கரனின் பாஸ்போட் படத்தை, கையில் எடுத்துக்கொண்டு விமானத்தினுள் வந்த 10 பேர் அடங்கிய குழு ஒன்று, பிசினஸ் கிளாஸ் இருக்கையில் அமர்ந்திருந்த சுபாஷ்கரனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கப் படுகிறது. இதனை தொடர்ந்து விமான நிலைய அதிகாரிகளுக்கும் சுபாஷ்கரன் குழுவினருக்கும் இடையே தகராறு ஏற்பட்டதை தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.”

இப்படியான செய்தியைக்கொண்ட ஒரு மின்னஞ்சல் பல இணையத்தளங்களுக்கு 2014-10-29 காலை 10:36ற்கு லைக்காவின் ஒரு அடிவருடியினால் ranjith1977a@gmail.com என்ற போலி மின்னஞ்சலிலிருந்து அனுப்பட்டிருந்தது. செய்தியின் நம்பகத்தன்மை குறித்து அக்கறை கொள்ளாத சில 'cut & paste' இணையதளங்கள் சில மணி நேரங்களுக்குள்ளேயே இதை வெளியிட்டிருந்தன. அதைவிட லைக்காவின் ஆதவன் தொலைக்காட்சியும் ஆதவன் இணையத்தளமும் இந்த செய்தியை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதைப் பார்த்ததும் சீமானின் ‘நாம் டம்ளர்’ ஆட்கள் உட்பட சிலர் “பார்த்தியா லைக்கா உரிமையாளருக்கு நடந்ததை, அவரும் சுத்தத் தமிழன் தான்” என்பது போல சமூக வலைத்தளங்கள் எல்லாம் கருத்துரைக்கத் தொடங்கினார்கள். மக்களும் அதிர்ச்சிக்கு ஆளானார்கள் காரணம் இந்தியாவில் புள்ளிராஜாவிற்கு எயிட்ஸ் வராது என்று எப்படி மக்கள் நம்புகிறார்களோ அதுபோல இலங்கையில் அல்லிராஜாவுக்கு அரஸ்ட் வராது என்றும் மக்கள் நம்பியிருந்தார்கள்.

இத்தனைக்கும் இது ‘உறுதிப்படுத்தப்படாத செய்தி’ என்றே வெளியிடப்பட்டிருந்தது. ஏதோ லைக்கா என்பது 1957ல் விண்ணுலகுக்கு அனுப்பட்ட நாய் போல தொடர்பில் இல்லை அதனால் நாங்களே கேட்காமல் வெளியிட்டோம் என்பது போலத்தான் இரு நாட்களாய் கதை அளக்கப்பட்டிருந்தது.

லைக்கா நிறுவனம் என்பது சின்னப் பெட்டிக் கடை கிடையாது. அது மகாராணிக்கு ஒரு மில்லியன் பவுண்ட்களை அன்பளிப்பாக வழங்கிய நிறுவனம். இலங்கையின் பொது நலவாய நாடுகளின் மாநாட்டிற்கு பிரதான அனுசரணை வழங்கிய நிறுவனம். அதைவிட இன்றைய அரசுக்கு மூன்றாவது பெரிய நிதி வழங்குனராக உள்ள நிறுவனம் (மூண்டு வருசம் கோர்ப்பறேட் வரி கட்டேல எண்டது வேறு பிரச்சனை) அப்படிப்பட்ட ஒரு சர்வதேச நிறுவனத்தின் தலையைத் தூக்கிடாங்களாம் ஆனால் எந்த சர்வதேச ஊடகமும் இன்று வரை செய்தி போடவில்லை என்றால் எப்படி? லைக்காவின் அடிவருடி அவர்களுக்கு மின்னஞ்சல் போட மறந்து விட்டாரா ? சரி தமது ஆதவன் தொலைக்காட்சியில் வெளியிட்ட லைக்கா ஏன் சர்வதேச ஊடகங்களுக்கு செய்தி அனுப்பவில்லை. “என்னடாப்பா சர்வதேச ஊடகத்துக் அனுப்ப அவர் என்ன ‘மெடலே’ வாங்கினவர்” எண்டு நீங்க கேக்கலாம். அதுவும் சரிதான் !

இதில் இன்னுமொரு நகைச்சுவை என்னவென்றால் சுபாஷ்கரனின் பாஸ்போட் படத்தை, கையில் எடுத்துக்கொண்டு விமானத்தினுள் பத்துப் பேர் வந்திருக்கிறார்களாம். இலங்கையில கோடிக்கணக்கில வியாபாரம் செய்கிற அமைச்சர்களோடும் ராணுவத்தோடும் பழக்கமுள்ள ஒரு மில்லியனரைத் தெரியாமல் அவரைப் பிடிக்க பாஸ்போட் படத்தைக் கொண்டு வந்து நீயா நீயா எண்டு தேடியிருப் பாங்களோ ? சரி ஒரு Smart Phone அல்லது iPad கொண்டு வந்து பாத்தார்கள் என்றாவது சுத்தியிருக்கலாம் ஆனால் பாஸ்போட் படத்தை..., நம்பிற மாதிரி இல்லையேப்பா...?

ஆனால் இது குறித்து இலங்கையிலிருந்து வெளியாகிற சண்டே ரைம்ஸ் என்ன சொல்லுதென்றால்...

மாலை தீவில இருந்து திரும்பின அலிபாபாவும் ச்சீ... அல்லிராஜாவும் 31 பரிவாரங்களும் Barல் நல்லாத் தண்ணியடிச்சு குடிபோதையில உரக்கப் பேசி பண்டார நாயக்கா விமான நிலையத்தின் Business Class Lounge ஐ மீன் சந்தையாக்கினார்கள் என்கிறது. அதுவல்ல இங்கே செய்தி. முக்கியமான செய்தி என்னவெனில் குடிவெறியில் இருந்த இவர்கள் UL Flight 503 விமானத்தில் ஏறி அங்கும் சில துஸ்பிரயோகங்களினைச் செய்திருக்கிறார்கள். மற்றப் பயணிகளிலும் அக்கறை கொண்ட அந்த விமானத்தின் கப்டன் செந்தூர்குமரன் கோபம் கொண்டு இந்த வெறிக்குட்டிகளோடு நான் பயணிக்க மாட்டேன் என்று அறிவித்திருக்கிறார். தமது பணம் பாதாளம் வரை பாயும் என்ற நம்பிக்கையில் இவர்கள் இலங்கையிலுள்ள பெருந்தலைகளுக்கு தொலை பேசியிருக்கிறார்கள் (SriLankan Airlines hot-shots & VVIPs) அதன்படி பெரிய இடத்திலிருந்து கப்டனுக்கு விமானத்தோடு கிளம்பிச் செல்லுமாறு அறிவித்தல் வந்திருக்கிறது. ஆனால் (bunch of sozzled rowdies) குடிவெறியிலுள்ள இந்த ரௌடிகளை நான் விமானத்தில் ஏற்றி பிரயாணத்தினை சிரமத்திற்குள்ளாக்க மாட்டேன் என்று அவர் மறுத்து விட்டார்.

தமது பணம் எல்லா இடமும் பாயாது என்று அறிய வைக்கப்பட்ட பின் அல்லிராஜாவும் பரிவாரங்களும் தமது பொதிகளுடன் இறக்கப்பட்டு அடுத்த விமானத்திற்காக காக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் இந்த செயலால் UL Flight 503 விமானம் இரண்டு மணி நேர தாமதத்திற்கு உள்ளாகி இருக்கிறது. என்று அந்தப்பத்திரிகை கிழி கிழி என்று கிழித்திருக்கிறது. ஆக விளக்கமாகச் சொல்வதென்றால் தமிழ் மக்கள் மடையர்கள் என்ற நினைப்பில், Anti Social Behaviourனை Anti Sri Lankan Behaviour போல மாத்தி செய்தி வெளியிட்டிருக்கிறது இந்தக்கூட்டம் !

இலங்கையில் வெளியான இந்த செய்தியினை இங்குள்ள எவரும் பெரிதாய்க் கண்டு கொள்ளவில்லை. இருப்பினும் ஒரு சிலர் இந்தக் கைதினை வதந்தியென்று சமூகவலைத் தளங்களில் எழுதிக்கொண்டிருந்தார்கள். அதைவிட சில காலங்களாக பல்தேசியக் கம்பனிகளினது, முக்கியமாக லைக்காவினது லீலைகளை அம்பலப்படுத்தி அவர்களைக் கழுவிக் காயப் போட்டபடி இருந்தது இனியொரு டொட் காம் என்ற இணையத்தளம்.

இனியொரு விதி செய்வோம் என்று கிளம்பியவரை உமக்கு மேலால சதி செய்வோம் என்று அந்த இணையத்தளத்தினை இரண்டாவது முறையாக சில தினங்கட்கு முதல் `Hacked' செய்து அகற்றி இருக்கிறது ஒரு கூட்டம். அதற்கு முதல் நாள் ஒருவர் இனியொருவில் லைக்கா பற்றிய பதிவுகளை நீக்குமாறு கேட்டு பின் திடீரென செந்தமிழில் பிளிறி விட்டு தொடர்பினைத் துண்டித்திருக்கிறார் (ஆங்கிலத்தில கதைக்காம செந்தமிழில கதைக்கிறது எங்களுக்குப் பெருமைதானே). பின் மறுநாள் ஒருவர் தன்னை சர்வதேச சட்ட வல்லுனர் என்று அறிமுகப் படுத்தி லைக்கா குறித்த பதிவுகளை நீக்க வேண்டும் அல்லது வழக்குப் போடப்போவதாகச் சொல்லியிருக்கிறார். இனியொருக்காரர் போடுங்கள் என்று சொல்லி சில மணி நேரத்தில் பனங்கொட்டையை மாடு சூப்பிய கணக்கில் முழுவதுமாக துடைத்தெறியப்பட்டிருக்கிறது இனியொரு இணையத்தளம்.

**லைக்கா நிறுவனம் என்பது சின்னப் பெட்டிக்கடை கிடையாது. அது மகாராணிக்கு ஒரு மில்லியன் பவுண்ட்களை அன்பளிப்பாக வழங்கிய நிறுவனம். இலங்கையின் பொது நலவாய நாடுகளின் மாநாட்டிற்கு பிரதான அனுசரணை வழங்கிய நிறுவனம். அதைவிட இன்றைய அரசுக்கு மூன்றாவது பெரிய நிதி வழங்குனராக உள்ள நிறுவனம் (மூண்டு வருசம் கோர்ப்பறேட் வரி கட்டேல எண்டது வேறு பிரச்சனை)**

அதன் பின் லைக்காவிற்கு எதிராக எழுதிய லங்காநியூஸ்வெப் (lankanewsweb.net) மற்றும் ஜே.விபினியூஸ் (jvpnews.com) போன்ற இணையத்தளங்களும் அழிக்கப்பட்டிருக்கின்றன. இது போல லைக்கா நிறுவனம் பற்றி எழுதிய வேளைகளில் எல்லாம் ***ஒரு பேப்பர்*** பிரதிகளும் Vanல் வந்த சிலரால் கொத்துக் கொத்தாக எடுத்துச்செல்லப் பட்டிருக்கிறன. இம்முறை அந்த வாகனங்களின் இலக்கத்தினை தருபவர்களுக்கு சன்மானம் வழங்கத்திட்டமிட்டு வருகிறோம் என்று ***ஒரு பேப்பர்*** காரர் கூறுகிறார்கள்.

மற்றப்படி இதை தற்போது நீங்கள் வாசித்துக் கொண்டிருந்தீர்கள் என்றால் நீங்கள் அதிஸ்டக்காரர். நாட்டில என்ன நடக்கிறது என்கிற விடயத்தினை உங்களுக்கு வாசிக்கக் கிடைத்திருக்கிறது.

இவ்வளவு நேரமும் எழுதிய விசயத்தை சுருக்கி திருப்பி எழுதினால் இப்படி வரும் தமிழ் மக்கள் மடையர்கள் என்ற நினைப்பில Anti Social Behaviour ரினை Anti Sri Lankan Behaviour போல மாத்தி செய்தி வெளியிட்டிருக்கிறது இந்தக்கூட்டம் !

*புகைப்படம் - jaffnajet.com*

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

**Expert in Criminal Defence Services.**
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

**Contractual Disputes**
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

**Immigration Law Specialists**
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

**Civil Litigation**

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

**அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்**

Criminal Defence Service | Community Legal Service | The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY | Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk
Emergency 079 4764 1876 079 1225 3418

# மும்பையில் மோதும் இந்துத்துவாவும் சிவசேனாவும்



**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

2014-ம் ஆண்டு மே மாதம் நடந்த இந்தியப் பாராளமன்றத்தின் மக்களவைக்கான தேர்தலில் வெற்றி பெற்று நரேந்திர மோடி தலைமையில் ஆட்சியமைத்த பாரதிய ஜனதாக் கட்சியின்(பா.ஜ.க) முக்கிய பிரச்சனைகளாக அமைந்தவை:- 1. காங்கிரசுக் கட்சி பதவியில் அமர்த்திய குடியரசுத் தலைவரும் ஆளுநர்களும், 2. இரு நூற்று ஐம்பது உறுப்பினர்களைக் கொண்ட மாநிலங்களவையில் பா.ஜ.கவிற்கு 43 உறுப்பினர் மட்டுமே இருப்பது, 3. இருபத்தெட்டு மாநில சட்ட மன்றங்களில் நான்கு மட்டுமே பா.ஜ.கவின் கட்டுப்பாட்டில் இருந்தமை. பா.ஜ.கவினர் தொடர்ந்து பல ஆண்டுகள் ஆட்சி தடையின்றிச் செய்வதாயின் அது பல சட்ட மன்றங்களைக் கைப்பற்ற வேண்டும். அப்போது தான் அடுத்த குடியரசுத் தலைவர் தேர்தலில் பா.ஜ.கவினர் நிறுத்தும் வேட்பாளர் வெற்றி பெற முடியும் அத்துடன் மாநிலங்களவையில் பெரும்பான்மை வலுவைப் பெறமுடியும்.

## ◆ மோடிக்குத் தேவையான மஹாராஸ்ட்ரா

நரேந்திர மோடியின் பொருளாதாரத் திட்டங்களையும் அவர் வாக்குறுதியளித்த பொருளாதாரச் சீர்திருத்தங்களையும் முன்னெடுக்க இந்தியாவின் பொருளாதாரத் தலைநகரான மும்பாயைக் கொண்ட மஹாராஸ்ட்ரா மாநிலத்தை அவர் எப்படியும் கைப்பற்ற வேண்டும் என்பதற்கான திடசங்கற்பத்துடன் மோடி செயற்பட்டு ஒக்டோபர் மாதம் 15-ம் திகதி நடந்த தேர்தலில் 288 தொகுதிகளில் 122 தொகுதிகளைக் கைப்பற்றினார். அதே நாளில் ஹரியானா மாநிலத் தேர்தலில் பா.ஜ.கவினர் வெற்றி பெற்றனர்.

## ◆ மதவாதமும் இனவாதமும்

பாரதிய ஜனதாக் கட்சியும் சிவசேனாவும் இந்து மத மேலாண்மையை ஏற்றுக் கொண்டாலும் சிவசேனாவின் மராத்தியப் பிராந்தியவாதத்தை பா.ஜ.க விரும்பவில்லை பா.ஜ.கவின் இந்திப் பேரினவாதத்தை சிவசேனா விரும்புவதில்லை. இரு தரப்பினரும் மற்ற மதங்களையிட்டு ஏறக்குறைய ஒரே கொள்கையை உடையவர்கள். பாபர் மசூதி இடிப்பில் ஒரே கொள்கையுடையவர்கள். பால் தக்கரேயால் 1966-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சிவசேனை அவரது மறைவின் பின்னர் இரண்டாகப் பிளவு பட்டது. ராஜ் தக்கரே மஹாராஸ்ட்ர புனரமைப்புச் சேனையை 2006-ம் ஆண்டு ஆரம்பித்தார். ராஜ் தக்ரே சிவசேனாவிற்குள் இருந்து அந்தக் கட்சியை தனதாக்கிக் கொள்ளும் அளவிற்கு அவருக்கு கட்சிக்குள் செல்வாக்கு இருந்தது. இருந்தும் சகோதரப் போரைத் தவிர்க்க அவர் தனிக் கட்சி ஆரம்பித்தார். இந்தப் பிளவால் சிவசேனா வலுவிழந்து விட்டது என இந்தியத் தலைமை அமைச்சர் மோடியும் அவரது தளபதி அமித் ஷாவும் உணர்ந்து கொண்டு செயற்படுவதாக உதவ் தக்கரே கருதுகின்றார். 2014-ம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் இந்திய மைய அரசில் சிவசேனா கேட்ட அமைச்சுப் பதவிகளை வழங்காமை இரு கட்சிகளிற்கும் இடையிலான மோதலை உருவாக்கியிருந்தது.

## ◆ சிவசேனாவுடன் கூடாத கூட்டணி

மே மாதம் நடந்த பாராளுமன்றத் தேர்தல் கூட்டணி சட்ட மன்றத் தேர்தலிலும் போட்டியிட வேண்டும் என இரு கட்சிகளும் விருப்பம் தெரிவித்தன. இந்தியாவின் பொருளாதாரத் தலைநகர் 'மண்ணின் மைந்தர்களுக்கே' என்ற கொள்கையுடையது சிவசேனா அமைப்பு. மும்பாயில் வேலை தேடியும் வர்த்தகம் செய்யவும் வேறு மாநிலத்தவர்கள் வருவதை எதிர்த்து சிவசேனா அமைப்பு 1966-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சிவ சேனா மராத்தியப் பிரதேச வாதத்தையும் இந்துத் தேசிய வாதத்தையும் தனது இரு கண்களாகக் கொண்டுள்ளது எனச் சொல்லலாம். இந்துத் தேசியவாதக் கொள்கை சிவசேனாவையும் ப.ஜ.கட்சியினரையும் நெருங்கிச் செயற்பட வைத்தது. ஆனால் 2014 ஒக்டோபர் 15-ம் திகதி நடந்த மஹாராஸ்ட்ரா சட்ட மன்றத் தேர்தலில் இருகட்சிகளும் தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடு எட்டாமையினால் தனித் தனியே போட்டியிட்டன. இதனால் 288 சட்ட மன்றத் தொகுதிகளுக்கான நடந்த தேர்தலில் நான்கு முனைப் போட்டி நடந்தது. பா.ஜ. கட்சி சிவசேனைக்கு 130 தொகுதிகள் வரை கொடுக்க உடன்பட்டிருந்தது. சிவசேனா அதிலும் அதிகமான தொகுதிகள் கேட்டது. ஆனால் தேர்தல் முடிவு பா.ஜ.கவிற்கு சாதகமாக அமைந்தது. பா.ஜ.க 122 தொகுதிகளிலும் சிவசேனா 63 தொகுதிகளிலும் காங்கிரசுக் கட்சி 41 தொகுதிளிலும் தேசியவாதக் காங்கிரசுக் கட்சி 41 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. அறுதிப் பெரும்பான்மையை பா.ஜ.க பெற்றிராத நிலையில் சிவசேனா ஒரு பேரம் பேசக் கூடியதாக இருக்கும் என்று அனைவரும் எதிர்பார்த்த நிலையில் தேசியவாதக் காங்கிரசுக் கட்சியின் தலைவர் சரத் பவார் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். பா.ஜ.கட்சி ஆட்சி அமைக்க தான் நிபந்தனை அற்ற ஆதரவை வழங்கப் போவதாக அறிவித்தார். 25 ஆண்டுகளாக ஒன்றாக இருந்த பாஜகவும் சிவசேனாவும் ஒன்றுடன் ஒன்று முரண்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

## ◆ விரோதத்தை பெரிதாக்கும் விதர்ப்ப தேசம்

மஹாராஸ்ட்ராவின் ஒரு பகுதியாக விதர்ப்ப தேசம் இருக்கின்றது. விதர்ப்ப தேச மக்களில் பலர் தாம் மஹாராஸ்ட்ராவில் இருந்து பிரிந்து செல்ல வேண்டும் என விரும்புகின்றனர். சிவசேனாவின் பிராந்தியவாதத்தை வலுவிழக்கச் செய்ய பேரினவாதக் கட்சியான பாஜக விதர்ப்ப தேசப் பிரிவினையை ஆதரிக்கின்றது. இது இரு கட்சிகளிடையே பேதத்தை 2014-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தீவிரமடையச் செய்தது. 2014-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15-ம் திகதி நடந்த மஹாராஸ்ட்ரா மாநிலத் தேர்தலில் பாஜகவிற்கும் சிவசேனாவிற்கும் இடையில் தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடு எட்டாமல் தனித்துப் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்ட பின்னர் பா.ஜ.க விதர்ப்ப தேசப் பிரிவினைக்கான தனது ஆதரவைத் தீவிரப்படுத்தியது.

## ◆ குஜராத்திடம் மண்டியிட்ட மராத்தி

தேர்தலின் போது எதிரும் புதிருமாக நின்று போட்டியிட்ட பாஜகவிற்கும் சிவசேனாவிற்கும் இடையில் மீண்டும் இணைந்து ஆட்சி அமைப்பது பற்றிய பேச்சு வார்த்தை ஆரம்பித்தவுடன் குஜராத்திடம் மண்டியிட்ட மராத்தி என சிவசேனாவின் எதிரிகள் விமர்சிக்கத் தொடங்கி விட்டார்கள். மும்பாயில் குஜராத்தியர்கள் பலர் உயர் பதவிகளிலும் வர்த்தகத்திலும் இருக்கின்றார்கள். இதை சிவசேனா விரும்பவில்லை. மோடியும் ஒரு குஜராத்தியர் என்பதால் பாஜகவிற்கும் சிவசேனாவிற்கும் இடையில் விரோதம் மேலும் மோசமடைந்துள்ளது.

## ◆ விதர்ப்ப தேசத்துப் பார்ப்பனர் மஹாராஸ்ட்ராவின் முதலமைச்சர்

இந்தியாவிலேயே அதிக அளவு விவசாயிகள் தற்கொலை செய்யும் பிரதேசமமக விதர்ப்ப தேசம் இருக்கின்றது. விதர்ப்ப தேசத்தைச் சேர்ந்த நிதின் கட்காரி பாரதிய ஜனதாக் கட்சியின் முன்னாள் தலைவரும் தற்போது இந்திய மைய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராகப் பணி புரிகின்றார். இதுபோதாது என்று மஹாராஸ்ட்ரா சட்ட மன்றத்தின் முதலமைச்சராக விதர்ப்ப தேசத்துப் பார்ப்பனரான தேவேந்திர பட்னவீஸ் தேர்தெடுக்கப் பட்டுள்ளார். சிவசேனையைப் பொறுத்தவரை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலாகும்.

## ◆ பிந்திச் சென்ற பதவியேற்பு வைபவம்

2014-ம் ஆண்டு ஒக்டோபர் 31-ம் திகதி பாரதிய ஜனதாக் கட்சியின் தேவேந்திரப் பட்னவீஸ் மிகவும் ஆடம்பரமாக மஹாராஸ்ட்ராவின் முதலமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில் தாமும் பங்கேற்கப் போவதாக சிவசேனா அறிவித்தது. புதிய முதல்வருக்கு சிவசேனாவின் பத்திரிகை ஆலோசனையும் வழங்கியுள்ளது. பஜகாவின் முதல்வரும் மஹாராஸ்ட்ரா மக்களும் மருமகளும் மாமியும் போன்றவர்கள். திருமணத்தில் அன்று அன்பாகத்தான் இருப்பார்கள். ஆனால் பின்பு மருமகள் தவறு செய்தால் மாமியார் மருமகளின் காதைப் பிடித்து முறுக்குவார் என்கின்றது சிவசேனனவின் ஊடகம். சிவசேனா மஹாராஸ்ட்ராவைப் பொறுத்தவரை ஒரு சண்டியர் கும்பல் எனச் சொல்லலாம். சிவசேனாவை ஆட்சியில் இணைக்காமல் வெளியில் எதிர்க் கட்சியாக விடுவது ஆபத்து என்பதை பாரதிய ஜனதாக் கட்சியினர் நன்கு அறிவர். இதனால் இருதரப்பினருக்கும் இடையில் உடன்பாடு ஏற்படுத்தும் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றது. பாரதிய ஜனதாக் கட்சியினர் தாம் ஒரு தேசியக் கட்சி என்றும் சிவசேனா ஒரு பிராந்தியக் கட்சி என்றும் தமது நிகழ்ச்சி நிரலுக்கு சிவசேனா உடன்பட்டு வர வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். ஆனால் சிவசேனா மஹாராஸ்ட்ரா நம்ம 'ஏரியா' இதனுள் எம்முடன் மோதவேண்டாம் என்ற நிலைப்பாட்டில் உள்ளது. இது இந்தியாவின் பேரினவாதிகளுக்கும் பிராந்தியவாதிகளுக்கும் இடையில் உள்ள முறுகல் நிலையாகும். இதே மாதிரியான முறுகல் நிலை தமிழ் நாட்டிலும் உண்டு. மஹாராஸ்ட்ரா அமைச்சரவையில் மூன்றில் ஒரு பங்கு பிரதிநிதித்துவம் கொடுத்தால் சிவசேனா உடன்பட்டு வரும் எனத் தெரியவருகின்றது. பிரதி முதலவர், உள்துறை, வலுத்துறை, பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை ஆகிய அமைச்சுப் பதவிகளை சிவசேனா தமது கட்சியினருக்குத் தரும்படி கேட்கின்றது.

## ◆ மாநிலங்களைப் பிடிக்க நீண்ட தூரம்

காங்கிரசு ஆட்சியில் பெரும் தொல்லையாக இருந்த உலகச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பு தற்போது தலைகீழாக மாறிவிட்டது. உலகச் சந்தையில் எரிபொருள் விலைகள் அடையும் வீழ்ச்சி மோடியில் ஆட்சிக்கு பெரும் வாய்ப்பாக உள்ளது. பாஜக ஆட்சியின் கீழ் தற்போது மஹாராஸ்ட்ரா, ஹரியானா, குஜராத், ராஜஸ்த்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களும் கோவா என்னும் ஒன்றியப் பிரதேசமும் இருக்கின்றன. இவற்றின் பொருளாதார உற்பத்தி இந்தியாவின் மொத்தப் பொருளாதார உற்பத்தியின் 37 விழுக்காடாகும். இதை வைத்துக் கொண்டும் சில மாநிலங்களில் ஆட்சியில் இருக்கும் ஒத்துழைக்கக் கூடிய பிராந்தியக் கட்சிகளின் ஆதரவுடனும் நரேந்திர மோடியால் தனது பொருளாதாரத் திட்டங்களையும் சீர்திருத்தங்களையும் முன்னெடுக்க முடியும்.

**கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ… வியாபாரமோ…**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க…
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க…
- வியாபாரத்தை பலப்படுத்த…
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற…

BBK PARTNERSHIP

R3

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

www.bbkca.com

Email: admin@bbkca.com



Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Bookkeeping

BARNET-LONDON 020 8216 2520 MR. ANANDAN

CROYDON 020 8150 9950 MR. SIVA RANJAN

CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

SOUTHGATE 020 8886 9589 MR. KANDEE

# Cosmetic Fixes: Sri Lanka's Poor Progress on Human Rights



By Tylor Dibbert

Sri Lanka's twenty-six-year civil war was a brutal conflict that pitted the Sri Lankan government forces against the Tamil Tigers, a group that fought for a separate state in the country's northern and eastern provinces. Though the government defeated the Tamil Tigers in May 2009, Sri Lanka's post-war situation is headed in the wrong direction. Since that time, the international community's engagement with the island nation has been variegated. Unfortunately, much of the criticism Sri Lanka has received about 'accountability' for alleged atrocities committed during the civil war and an end to ongoing human rights abuses on the island has not made the situation any better.

One could also argue that the situation in Sri Lanka would be worse in the absence of outside pressure on the regime, which is led by President Mahinda Rajapaksa. Rajapaksa heads the Sri Lanka Freedom Party, the most powerful political party in the ruling United People's Freedom Alliance, a political alliance that was first formed in 2004. Rajapaksa has been president since 2005.

Is this an authoritarian regime that simply does not care about the court of public opinion? History suggests the reality is more complex. While the regime is fearful of enacting meaningful reforms, it is also reluctant to show absolute intransigence on the international scene. Sri Lanka does have vulnerabilities – particularly related to trade, investment, and economics. Furthermore, the regime craves international legitimacy, including from Western nations that tend to be most vocal about human rights concerns. Yet numerous countries, including the United States, have chosen not to push Sri Lanka too hard in spite of rhetoric suggesting otherwise.

Notable examples of the Rajapaksa regime's attempts to deflect international criticism include the regime's lifting of theEmergency Regulations (2011), the creation of the Lessons Learnt and Reconciliation Commission (LLRC) (2010), the government's release of the LLRC final report in its entirety (2011), and the holding of the Northern Provincial Council elections (2013).

Nevertheless, these actions did nothing to stop the regime's relentless consolidation of power, its intimidation of the press, the judiciary, and independent NGOs, its tacit support for growing extremist nationalist elements amongst the Sinhala-Buddhist majority, and the perpetuation of impunity throughout the country. Consider the Emergency Regulations, for example. Despite their lifting, the government still maintains broad powers to search, arrest and detain people through the Prevention of Terrorism Act, a piece of legislation that is wholly incompatible with democratic governance. The LLRC, purported to be Sri Lanka's homegrown accountability mechanism, is a presidentially-appointed commission of inquiry that was created in the wake of widespread concerns about violations of international humanitarian and human rights law, which allegedly occurred during the end of the civil war. While it deserves notice that the LLRC completed its work, the Commission's final report does not even begin to address well-founded concerns surrounding alleged wartime atrocities committed by Sri Lankan government forces and the need for accountability – an essential part of any comprehensive plan to promote peace and reconciliation in Sri Lanka.

Another instance of Sri Lanka's faint-hearted international appeasement efforts includes the crafting of false narratives surrounding the implementation of the actionable LLRC recommendations. These are wide-ranging reforms, which, if properly implemented by the government, would make Sri Lanka less authoritarian and promote a just, lasting peace. Even the most essential LLRC recommendations – pertaining to governance, demilitarization, reconciliation, land, and human rights – have been largely ignored by the regime. Additionally, the Northern Provincial Council elections last September resulted in a resounding victory for the opposition Tamil National Alliance (TNA). This remains the only provincial council not controlled by the United People's Freedom Alliance. However, nearly all the power remains with the governor of the northern province, a former major general and presidential appointee. More generally, the regime still shows virtually no interest in negotiating a reasonable power-sharing arrangement with the TNA.

After the passage of three U.N. Human Rights Council resolutions – intended to promote reconciliation, human rights and accountability – and the commencement of an investigation into wartime atrocities by the U.N. Office of the High Commissioner for Human Rights (OHCHR), the regime has again turned to cosmetic changes with the hopes of assuaging the concerns of international observers.

Recently, Sri Lanka announced it is expanding the mandate of its Presidential Commission to Investigate into Complaints Regarding Mission Persons, and will include five international experts to help with the country's own war crimes inquiry. The commission – already arguably another disingenuous attempt to appease international observers – was originally designed to look into disappearances of people residing in the northern and eastern provinces, which occurred from 1990 to 2009. Now, the period under examination will go from 1983 to 2009. In what is a significant move, the commission's mandate also includes violations of international human rights and humanitarian law. The commission has now been given until February 2015 to complete its work. This may sound like a positive step, but there are several reasons for concern with this development.

About 20,000 complaints have been made, but only around 1,000 have actually been heard.

Furthermore, the regime has not picked these experts at random. Indeed the past record of the three experts, which were appointed initially, suggests that these individuals will interpret and apply the law in a manner, which (at the very least) helps to defend the regime from war crimes allegations. While regime supporters may claim the more recent appointment of an Indian human rights activist and a lawyer from Pakistan gives the five-member group more balance, the independence and impartiality of this commission remains highly questionable.

It is true that bilateral relations between any two countries are about much more than human rights. Nonetheless, foreign direct investment, visa and travel bans for senior government officials, the possibility of trade and economic sanctions, and a more serious rethinking of military cooperation and future weapons sales are all things likely to get Rajapaksa's attention.

Essentially, the broader debate at this juncture should not focus on whether international pressure can force Sri Lanka to change its behavior. At what point do human rights violations and institutionalized impunity in Sri Lanka become so egregious that Western countries lose their patience with Sri Lanka and decide to act more decisively? If there is a tipping point, what might it be?

Sri Lanka has learned that condemnation in multilateral forums like the Human Rights Council can be managed as long as its bilateral ties with key countries do not deteriorate completely. Relatedly, geopolitical concerns in the region mean that Washington and its allies are unlikely to prioritize issues relating to governance or human rights over matters pertaining to security and economics – particularly when it comes to bilateral ties, where it really counts.

So what has happened lately, and what can we expect going forward? For one, the regime lacks the popularity it once had. The results of the recent Uva Provincial Council election (Uva) further underscore this point. Nonetheless, President Rajapaksa is likely to win the next round of presidential elections, which will be held in January 2015. And future parliamentary elections would likely result in a United People's Freedom Alliance win as well, especially if Rajapaksa were elected to a third term beforehand. That being said, the results from Uva suggest a resurgent United National Party, Sri Lanka's principal opposition party. The United People's Freedom Alliance would still be favored to win national level elections early next year, although victory is by no means assured.

As far as international criticism is concerned, the Obama administration has spearheaded all three resolutions at the Human Rights Council. If sustained pressure on Rajapaksa is to move beyond multilateral fora, it looks like Washington would need to take the lead again.

Rajapaksa has had plenty of time to show he is serious about human rights, justice, and accountability. Unfortunately, his administration has consistently done the bare minimum, opted for cosmetic changes and glossed over an increasingly worrisome human rights record – embracing impunity at every turn. If nothing else, the past five years have proven that Sri Lanka's domestic institutions are still not capable of adhering to acceptable standards of governance, accurately accounting for the past or punishing perpetrators for their crimes.

For any long-term strategy to promote human rights, organic change and local solutions will be paramount. However, other countries can still help. That being said, lukewarm diplomacy and an agenda that puts human rights on the back burner of policy concerns is short-sighted, unhelpful, and a disservice to those living on the island who are trying so hard and risking so much to make it a more democratic place – not just with their words, but, more importantly, with their actions too.

*Courtesy: Foreign Policy*



✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# Review: 'Sri Lanka's Secrets: How the Rajapaksa Regime Gets Away with Murder'




By Arani Kumaran

'Sri Lanka's Secrets: How the Rajapaksa Regime Gets Away with Murder' by Trevor Grant, is a powerful book, containing many details that will inform, energise and enrage even those who are familiar with Sri Lanka, let alone those who are new to understanding the issues that continue to fester on this island. Trevor Grant's contribution to the literature on Sri Lanka should be compulsory reading for everyone interested in Sri Lanka. His extensive research, access to individuals willing to talk, and ability to tie individual stories back to a bigger argument make this a very powerful book.

The layout of the book – as a visual and verbal presentation of the evidence of the crimes committed in Sri Lanka – is compelling. Though the pictures and facts will be familiar to many, the presentation and their gathering together in one place is a valuable contribution. But even more compelling is the personal stories of those who lived through the horrors – and continue to suffer the effects. Part 2 should be compulsory reading for everyone – even those who think they know everything about Sri Lanka. Grant's ability to extract detail from his interviewees and then present it back factually is profound. And the factual presentation only reinforces the horrors suffered by Thomas, Anna, Maravan, Kumar, Sugi and Selvan. Their courage in sharing their personal horrors, combined with Grant's ability to convey their pain in a few words, make these three chapters a powerful testament to both the human ability to carry on, and the human capacity for one person or a group to inflict unimaginable suffering on another.

The structure of the book is well thought out and engaging. The combination of individual case studies in part 2, focus on the war zone in part 3 and thematic focus on children, women and the elderly in part 4 combine to provide multiple entries into the individual and real experiences of the Tamil population. These, combined with the focus on the Australia-Sri Lankan relationship in parts 1 and 5 which serve as bookends to these horrors, makes for a book that makes its case strongly.

Written from Australia, the book has a very strong focus on the relationship between the two countries. It is highly influenced by the circumstances at the time of writing such as Australia's response to 'the boats', the internment of asylum seekers off-shore and the powerful domestic frame within which turning the boats away is more important to Australia than concerns about human rights. This makes a contribution to the literature on Sri Lanka as the bilateral relationship is rarely examined.

There are a few issues with the book that also need to be acknowledged. In seeking to make some of the broader arguments, the author relies on the language of assertion rather than the data at hand. Though there is very compelling data, it is sometimes overwhelmed by the assertions made.

In seeking to cover a vast expanse relating to the island and suffering, the book could be in danger of losing a compelling presentation by attempting to tie it to a bigger argument. In places the book is a documentation of events and experiences. In other places it is a polemic against the atrocities of the Sri Lankan state. This may prove to be a deterrence for those who want to learn about Sri Lanka. Thus the book may end up preaching to the converted – to those actively engaged in Sri Lanka and already aware of most of the facts. This is not to argue that even those very actively engaged in Sri Lanka cannot gain from reading this book, but rather to suggest that a wider audience may be missed.

Also, while the focus on Australia, and the relationship between Australia and Sri Lanka makes this a unique book, this too may impact on the readership. To those familiar with Australian life and politics, the discussions about Packer, Gillard, Carr, etc. are detailed and provide fascinating insight into the domestic and corporate concerns in Australia's policy towards Sri Lanka. But to those unfamiliar with Australia – who perhaps read it from a Sri Lanka perspective – these passages could prove hard to grasp due the author's presumptions that the reader is familiar with these personalities. But on the other hand, the failure to make it clear that Australia too is a central concern of the book – there is only a reference in the last sentence on the back cover – means that a readership mainly interested in Australia might pass over the book thinking it is about Sri Lanka.

In other places it is a polemic against the atrocities of the Sri Lankan state.

These small criticisms however should not detract from that fact that this book contains many new pieces of information put together in a compelling manner. It serves as testimony to the fact that many witnesses survived the 'war without witnesses' and that all they are looking for is the opportunity to share their stories and assistance in moving on. Some might see it as incumbent on the West to at least now begin to make reparations for the decisions of those times. It is certainly incumbent on all of us to at least listen to their stories – if they are willing to relive their horrors, can we be so inhuman as to turn away? And in this, Grant makes a strong contribution to giving all of us the opportunity to hear their stories.



KIDS பேப்பர்

## ஆச்சரியப்பட வைக்கும் ஒற்றுமைகள்

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து கொல்லப்பட்ட ஆப்ரஹாம் லிங்கன், மற்றும் ஜான் கென்னடி இருவருக் குள்ளும் இருந்த ஆச்சர்யப்பட வைக்கும் ஒற்றுமைகள்.

• ஆப்ரகாம் லிங்கன் 1860 ஆம் ஆண்டும், ஜான்கென்னடி 1960 ஆம் ஆண்டும் அமெரிக்க ஜானாதிபதி யானார்கள். சரியாக நூறு வருட இடை வெளி.

• இருவரும் வெள்ளிக்கிழமை அன்று, தத்தம் மனைவிகளின் அருகில் இருக்கும்போது சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

• இருவர் மனைவிகளும் வெள்ளை மாளிகையில் வாழும் போது பிள்ளை பெற்றனர். பிறந்தவுடன் குழந்தை இறந்தும் போனது.

• இருவரும் தலையின் பின்பகுதி யில் குண்டுதுளைத்து இறந்தார்கள்.

• இருவரும் இறந்த பின், ஜான்சன் என்ற பெயருள்ளவர்கள் உடனே ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார்கள். (ஆண்ட்ஷரூ ஜான்சன், லிண்டன் ஜான்சன்)

• ஆண்ட்ஷரூ ஜான்சன் பிறந்தது 1808. லிண்டன் ஜான்சன் பிறந்தது 1908. சரியாக அதே நூறு வருட இடை வெளி.

• இருவரையும் கொன்றவர்கள் பிறந்த வருடங்கள் கூட நூறு வருட இடைவெளிகள். ஜான் வில்க்ஸ் பூத் பிறந்தது 1839. லீஹார்வி ஆஸ் வால்டு 1939.

• இருகொலைகாரர்களும் பிடி பட்டு வழக்குத்தொடுப்பதற்கு முன் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

• பூத் லிங்கனை ஒரு தியேட்டரில் கொன்று விட்டு ஒரு கிடங்குக்கு ஓடி னான். ஆஸ்வால்டு ஒரு கிடங்கிலி ருந்து கொன்று விட்டு தியேட்டர் நோக்கி ஓடினான்.

• லிங்கனின் செயலாளரின் முன் பெயர் ஜான். ஜான் கென்னடியின் செயலாலரின் பின் பெயர் லிங்கன்.

*- Ayshvaan Thevarajah*

"January cold and desolate;
February dripping wet;
March wind ranges;
April changes;
Birds sing in tune
To flowers of May,
And sunny June
Brings longest day;
In scorched July
The storm-clouds fly,
Lightning-torn;
August bears corn,
September fruit;
In rough October
Earth must disrobe her;
Stars fall and shoot
In keen November;
And night is long
And cold is strong
In bleak December."

## Colouring - 229



**Issue 228 Winner**
**Jathu Kulan**



Jathu Kulan



R.Sobiinii



Rehasan Ashokan



A. Vigaashan



Jusitha Sivachelvam



Vigashan - Rehasan

## Around the World

### - Egypt -



Full name: Arab Republic of Egypt

Language: Arabic

Population: 83.9 million

Capital: Cairo

Currency: Egyptian Pound

Main Religion: Islam, Christianity

Main exports: Petroleum, petroleum products and cotton

Life expectancy: 72 years

Politics: President Hosni Mubarak

Economy: The Egyptian economy is the second largest in the Arab world after Saudi Arabia

### - Nigeria -



Population: 166.6 million

Capital: Abuja

Largest city: Lagos

Area: 923,768 sq km

Major language: Ibo, Hausa, English (official), Yoruba

Major religion: Islam, Christianity

Main exports: Petroleum, petroleum products, cocoa, rubber

Monetary unit: Nigerian naira

Life expectancy: 52 years

## நாள் ஒரு குறள்

*அன்புஅகத்து இல்லா*
*உயிர்வாழ்க்கை வன்பாற்கண்*
*வற்றல் மரந்தளிர்த் தற்று.*

விளக்கம்:

உள்ளத்தில் அன்பு இல்லாமல் வாழும் வாழ்க்கை, கொடிய பாலை வனத்தில் பட்ட மரம் தளிர்ப்பதைப் போன்றது.

A life bereft of the bond of kindness in love is like a sapless desert bloom.

## IF I WERE GOD

If I were God I wouldn't
let it rain.
The snow would fall in
summer when it's hot.
If I were God there'd be
No school ever
Chocolate forever
and teeth that never rot
If I were God - but I'm not.

## Don't look down

*The following story of nearly 100 words is one among the stories written by children of 12 years. In this issue we are giving it.*



I've never been much of a climber; it's harder than you think. I lost my footing and I nearly fell down, down below.

I was there: the top.I clambered on and stood there. Do I do this? There's no going back now. I wiped my sweaty brow, my hand trembling, shaking, quivering in fear. Alright, no more procrastinating. This is it! I have to do this. It's now or never. Ahhhh! I an falling. I am going to die and no one can save me. No one. What? I'm alive and safe? Then again, I may have overreacted about the slide.

Kishnavi

உ

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்

THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K

200A Archway Road, London N6 5BA, Tel: 020 8348 9835 | Fax: 020 8482 6508
Web: www.sivafedaration-uk.org | Email: admin@saivafedaration-uk.org
Correspondence: 2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX
Tel: 0208 527 3819

**Chairman**
Mr. M. Gopalakrishnan
**Secretary**
Mr. T.Selvaratnam
**Treasurer:**
Mr. K. Nagarajah
**Vice Chairman**
Mr.S. Ramachandran
**Asst. Secretary**
Mr. K.V. Kanesamoorthy
**Asst.Treasurer:**
Mr. R. Kunasingam
**Committee**
Mr.S.Selvarajah, Mr.D. Rabindramohan
Dr. S. Maheswaran, Mr. K. Baskeran
Mr. M. Perinpanathan, Dr. T.G.V. Sritharan
Dr. T. Sriskandarajah, Mr. M. Mohanadas
Mr. E. Suntharalingam, Mrs. R. Surenthiran
Mr.S.Anandathiyagar

**AFFILIATED TEMPLES**
**SRI GHANAPATHY TEMPLE**
LONDON SW19 8PU.
**SRI KANAGA DURKA AMMAN KOVIL**
LONDON W13 9AE.
**HIGHGATEHILL MURUGAN TEMPLE**
LONDON N65BA.
**SRI RAJARAJESWARI AMMAN TEMPLE**
SURREY, KT17 2NE.
**LONDON SIVAN KOVIL**
LONDON SE13 5ES.
**CRAWLEY SRI SWARNA KAMADCHI AMMAN TEMPLE**
WEST SUSSEX, RH10 1TN.
**SRI KATPATGA VINAYAGAR TEMPLE**
LONDON E17 4PX.
**ARULMIGU SRI SIVAGAMI SAMETHA**
LONDON E12 6AB.
**LONDON SRI SELVAVINAYAGAR TEMPLE**
ILFORD IG1 4BN.
**SRI SITHI VINAYAGAR THEVASTHANAM**
MIDDLEX HA1 2TY.
**SHREE SAKTHY GHANAPATHY TEMPLE**
Surrey CR 7 7JJ.
**EELA PATHEESWARAR TEMPLE**
Middlesex HA0 4AU.
**NEW MALDEN MURUGAN TEMPLE**
Surrey KT 3 4NE.
**SRI MERUPURAM MAHA PATHIRAGALI AMMAN DEVASTHANAM**
London E17 4PX
**COVENTRY SHREE MAHA SITHI VINAYAGAR,** Coventry CV14HT
**LONDON SREE AYYAPPAN TEMPLE**
Middlesex HA3 5AR
**EELA KANTHAN TEMPLE**
Coventry CV6 6FC
**Liverpool Ganesh Temple**
Liverpool L32 8TN
**Sri Thurkkai Amman Temple**
Nottinghamshire NG9 1QE
**MEENAKSHI TEMPLE**
Bucks HP12 3BW
**SRI KATPAGA VINAYAHAR TEMPLE**
Port Talbot SA126HZ

## ஆலயங்களில் விரத நாட்கள் உரிய தினங்களில் செய்வோம் முழுப் பலன் பெறுவோம்

பொதுவாக நட்சத்திரம் .திதி என்பவற்றின் அடிப்படையில் விரதங்கள் அமைந்திருக்கும் அநேகமான விரதங்கள் திதியை முதன்மைப்படுத்தி அமையும் திதி அமையும் கால எல்லைகளைப் பொறுத்து விரத நிர்ணயம் செய்வர். சூரிய உதயம்.அஸ்தமனம் என்பன இதில் முக்கிய கவனம் எடுக்கப்படும். இந்தியா இலங்கை போன்ற நாடுகளுக்கும் ஏனைய வெளி நாடுகளுக்கும் விரத நாட்கள் வேறுபடுவதின் காரணம் சூரிய உதய அஸ்தமன நேர அளவு வித்தியாசம் என்பதை நாம் அறியலாம்.

எந்த எந்த தேசத்தில் நாம் இருக்கிறோமோ அந்த அந்த பகல்மான அளவு கணிப்பில் கொள்ளப்படும். பகல் மானம் என்பது சூரிய உதயத்திற்க்கும் சூரியன் மறைவிற்கும் இடைப்பட்ட காலம் ஆகும்.

இது ஒருநாட்டிற்குள் அமைந்திருக்கும் வேறு பிரதேசங்களுக்கு இடையிலேயே வேறுபாடு உண்டு என்பதை பஞ்சாங்கங்கள் குறிப்பிடும். அவ்வாறாயின் ஆசிய நாடுகளுக்கும் ஏனைய மேல் நாடுகளுக்கும் எவ்வளவு வேறுபடும் என்பது பொது அறிவு.

எனவே தேச கால வர்த்தமானம் அவசியம் உண்டு.

அத்துடன் ராகு காலக் கணிப்பும் சிராத்த திதிகளும் பகல் மான அளவைப் பொறுத்து கூடும் அல்லது குறையும் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்த மட்டில் கோடை காலத்தில் பகல் மானம் கூடியும் குளிர் காலத்தில் பகல் மானம் குறைந்தும் இருக்கும்.எனவே இலங்கை இந்தியாவில் ராகு கால அளவு ஏறத்தாழ ஒன்றரை மணித்தியாலங்கள் என்றால் மேலை நாடுகளில் ஒரே மாதிரி இருக்காது. கோடை காலத்தில் கூடியும் குளிர் காலத்தில் குறைந்தும் வரும்

இங்கிலாந்தில் பல ஆலயங்கள் உண்டு அதிகமான ஆலயங்கள் லண்டனுக்கு எனக் கணிக்கபட்ட திருக்கணித பஞ்சாங்கத்தை உபயோகம் செய்கின்றனர் என்பது மிக மகிழ்ச்சியாகும். இந்திய இலங்கை நேரத்திற்கு கணிக்கப்பட்ட பஞ்சாங்கங்களை அப்படியே நாம்இங்கு பாவிப்பது பிழை என்பது வெளிப்படையான உண்மை ஆகும்.ஒரு சில அன்பர்கள் தாய் நாட்டின் மோகத்தால் அங்கு உள்ள நாட்காட்டிஅல்லது அந்த நாட்டிற்குரிய பஞ்சாங்கங்களை இங்கு கொண்டுவந்து விரத நாட்கள் அல்லது பண்டிகைகள் சில தினங்களில் மேலை நாடுகளில் முதல் நாளும் தாய் நாடுகளில் அடுத்த நாளும் வரும்போது குழப்பமடைகின்றனர்.

இங்கிலாந்து நாட்டில் இந்நாட்டுக்கென கணிக்கப்பட்ட ஒரே ஒரு பஞ்சாங்கமாக திருக்கணிதம் மட்டும் வெளிவருகிறது .நாட்காட்டிகள் பல வருகின்றனஇந்நாட்டிற்கு என கணிக்கப்பட்ட திருக்கணித நாட்காட்டி ,சிவசக்தி வாக்கிய நாட்காட்டி இந்நாட்டிற்கு கணிக்கப் படும் வாக்கிய நாட்காட்டி தாய் நாட்காட்டி .இவற்றைவிட இலங்கை இந்திய நாட்டுக்கலண்டர்கள்.

இவற்றுள் எதை நாம் பயன்படுத்தலாம் எந்த நாட்காட்டிஅல்லது பஞ்சாங்கம் மூலம் ஒரே நாளில் விரதங்கள் பண்டிகைகள் பின்பற்றலாம்.என்ற கேள்வியில் இருந்து மக்கள் நல்லதீர்வுஅடையவேண்டும்.இங்கிலாந்தில்உள்ளஅதிகமானகோவில்கள்ஒரேநாளில்அதேவேளையில் சரியானமுறையில்விரதங்களைபண்டிகைகளைபின்பற்றஇந்நாட்டிற்கு என்றுகணிக்கப்பட்டுகடந்தஇருபத்தியொருவருடங்களாகவெளிவரும்திருக்கணிதபஞ்சாங்கத்தைஏற்றுள்ளன.இப்பஞ்சாங்கம்இந்தியபஞ்சாங்கசீர்திருத்தசபையினால்அங்கீகரிக்கப்பட்டதாகும்.இப்பஞ்சாங்கம்இந்தியஅரசினர்பஞ்சாங்கம்,லாகிரிபஞ்சாங்கம்,கும்பகோணத்துமடத்துபஞ்சாங்கம்,பாரத்கணிதபஞ்சாங்கம்,இங்கிலாந்தில்வெளிவரும்றபேல்ஸ் எபிமெரிஸ்,அமெரிக்கன்நாட்டிக்கல் அல்மனக் முதலியவற்றில் உள்ள திதி முதலியவற்றுடன் ஒத்திருப்பதை அறிஞர்கள் அறிவார்கள்.

குறிப்பாகதைப்பொங்கல்சிவராத்திரிசித்திரைப்புத்தாண்டுபௌர்ணமிஅமாவாசைசதுர்த்திசங்கடஹரசதுர்த்திஎன்பவைசிலதினங்களில்ஆசியநாட்டிலும்மேலைநாடுகளிலும் திதிப் பிரமாணம் ஒன்றாக இருந்தால் ஒரே நாளில் வரும்.சில தினங்கள் முதல் நாள் மேலை நாடுகளிலும் அடுத்தநாள் ஆசிய நாடுகளிலும் வரலாம்.

ஒருசிலவிரதஅல்லதுபண்டிகைகளுக்குஉரியபிரமாணத்தைநாம்தெரிந்துகொண்டால்அவற்றைநாம்சரியாகச்செய்யவேண்டும்என்றமனத்துணிவோடுஎந்தநாட்டில்வசிக்கிறோமோ அந்த நாட்டு கணிப்புடன் புறக்கணிக்காமல் பின்பற்றலாம்.

இன்னுமொரு விடயம் பஞ்சாங்க கணிப்பாளர்களே விரத பிரமாணத்தின் அடிப்படையில் சில விரதங்களை முதல் நாள் மேல் நாட்டிற்கும் மறுநாள் ஆசிய நாட்டிற்கும் கணிக்கிறார்கள்.

உதாரணமாக மகர சங்கிராந்தி அதாவது தைமாத பிறப்பு தைப்பொங்கல் என்பதற்கு பிரமாணம் சூரியன் மகர ராசிக்குள் எந்நாளில் பிரவேசம் செய்கிறாரோ அந்த நாள் தைப் பொங்கலாகும். சூரியன் அன்றைய தின சூரிய மறைவுக்குள் பிரவேசம் செய்தால் அன்றைய தினம் பொங்கல்.அதாவது தை மாதப்பிறப்பு.சூரிய அஸ்தமனத்திற்கு பின் பிரவேசம் செய்தால் மறுநாள் மாதப்பிறப்பு பொங்கல் செய்யவேண்டும்.

இங்கு உற்று நோக்கினால் ஒரு உண்மை புலப்படும்.இங்கிலாந்து நேரத்திற்கு மாலை நான்கு மணிக்கு சூரியன் மகரப் பிரவேசம் செய்கிறார் என்றால் அன்றைய தினம் சூரிய அஸ்தமனம் நான்கு மணி ஐம்பது நிமிடம் என்றால் அன்று காலையே தைமாதப் பிறப்பு பொங்கல் செய்ய வேண்டும்.அதேநாள் இங்கு நான்குமணி என்றால் ஆசிய நாட்டில் சூரிய அஸ்தமனம் ஆகிவிடும் எனவேதான் அவர்கள் மறுநாள் செய்ய வேண்டும்.இதுவே சித்திரைப்புத்தாண்டிலும் வரும் விதிமுறையாகும்.

அதேபோல் சிவராத்திரி மாசி மாத அபரபக்க (தேய்பிறை) சதுர்த்தசி திதி நள்ளிரவில் இருக்க வேண்டும் இங்கிலாந்து நாட்டில் சதுர்த்தசி இரவு பத்து மணிக்கு ஆரம்பித்து மறுநாள் இரவு பத்து மணிக்கு முடிவடைவதாக வைத்தால் அதேநாள் ஆசிய நாட்டில் அதிகாலை நான்கு மணிக்கு ஆரம்பமாகி அதற்கும் அடுத்தநாள் நான்கு மணி வரைக்கும் இருக்கும். எனவே ஆசிய நாட்டில் மறுநாள் இரவுதான் சதுர்த்தசி கூடும்.

எனவே முதல் நாள் சிவராத்திரி இங்கும் மறுநாள் ஆசிய நாட்டிலும் நடைபெறும்.

அதேபோல் சங்கட ஹர சதுர்த்தி அன்று சதுர்த்தி திதி சந்திர உதயத்துடன் இருக்க வேண்டும் இங்கு சந்திர உதயம் ஐந்து மணியாக இருந்து சதுர்த்தி நான்கு மணிக்கு ஆரம்பித்தால் எமக்கு அன்றைய தினம் சங்கட ஹர சதுர்த்தி எமக்கு ஐந்து மணி எனின் ஆசிய நாடுகளுக்கு பதினோரு மணியாகிவிடும்.எனவே சந்திர உதயம் அவர்களுக்கு இருக்கும் போது சதுர்த்தி திதி இருக்காது மறுநாள் செய்வார்கள் இவ்வாறே அமாவாசை பௌர்ணமி நாட்களும் வேறுபடுவதற்கு காரணமாகும்.

இவ்வாறு விரத நாட்களை சரியான முறையில் கணிப்பிடும் இந்நாட்டிற்குரிய திருக்கணித பஞ்சாங்கத்தையும் திருக்கணித நாட்காட்டியையும் பின்பற்றும் ஆலயங்கள்

பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியம்

ஆர்ச்வே உயர் வாசற்குன்று முருகன் ஆலயம், விம்பிள்டன் பிள்ளையார்கோவில், லூசியம் சிவன்கோவில்.ஸ்ரோன்லி ராஜராஜேஸ்வரி அம்மன் கோவில்,வோல்தம்ஸ்ரோ கற்பகபதி கற்பகவிநாயகர் கோவில் மேருபுரம் பத்திரகாளி அம்மன் கோவில்.என்பீல்ட் நாகபூசணி அம்மன்கோவில்,இல்போர்ட் செல்வவிநாயகர் கோவில், சைவ முன்னேற்ற சங்க நடராஜர் கோவில், ஹரோ சித்தி விநாயகர் கோவில் ஹரோ ஐயப்பன் கோவில்,எட்ஜ்வெயர் ஆஞ்சநேயர்கோவில் குரோய்டன் சக்தி விநாயகர் கோவில்,வெம்ப்ளி ஈழ பதீஸ்வரர் கோவில்,குறோளி சுவர்ண காமாட்சி அம்மன் கோவில், நியூமோடன் திருத்தணிகை முருகன் கோவில், வேல்ஸ் கல்பக விநாயகர் கோவில், நொட்டிங்கம் துர்க்கையம்மன் கோவில், கொவேன்றி ஈழக்கந்தன் கோவில், கொவென்றி சித்தி விநாயகர் கோவில், லிவபூல் முத்துமாரியம்மன் கோவில், லிவபூல் பிள்ளையார் கோவில், அத்துடன் பேர்மிங்காம் பாலாஜி கோவிலும் இந்நாட்டிற்குரிய கணிப்பின் படி பின்பற்றுகின்றனர்.

குறிப்பாக பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியத்தில் இருக்கும் ஈலிங் கனக துர்க்கை அம்மன் கோவில் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக திருக்கனித பஞ்சாங்க மரபை கைக்கொண்டு வந்துள்ளனர் கடந்த சில ஆண்டுகளாக இந்நாட்டிற்குரிய கணிப்பாக வாக்கிய கலண்டரை பின்பற்றி வருகின்றனர் ஆனால் இதில் குறிப்பிடப்படும் ராகுகாலம் குளிர் காலத்திலும் கோடை காலத்திலும் சமமான அளவில் இருப்பது முழுத் தவறு என்பதை பஞ்சாங்க வல்லுனர்கள் நிரூபித்துள்ளனர்.எனவே ராகு கால கணிப்பே தவறாக இருக்கும்போது ஏனையவையும் இந்நாட்டிற்கு உரியனவா என்ற சந்தேகம் எழுவது இயற்கையே.


மற்றுமொரு இந்நாட்டிற்குரிய வாக்கிய கலண்டரான சிவசக்தி வாக்கிய கலண்டர் அனேகமாக இந்நாட்டிற்கு உரிய முறையில்கணிப்பு அமைந்துள்ளது. குறிப்பாக ராகு கால நேர அளவுகள் திருக்கணித அளவுடன் சரியாக இருப்பதும் விரத அனுஷ்டானங்கள் அவர்களது கணிப்பும் முறையாக அமைந்துள்ளது.

ராகு காலம் இணையத்தளங்களில் இந்நாட்டிற்குரிய கணிப்பும் சோதிட ளழகவறயசந கூறும் கணிப்பும் குளிர்கால கோடைகாலங்களில் இந் நாட்டிற்குரிய திருக்கணித பஞ்சாங்கத்துடன் ஒத்து வருகிறது.ராகு கால அளவு ஊரில் ஒன்றரை மணித்தியாலம் என்றால் இங்கும் அதே அளவு ஒன்றரை மணித்தியாலம் என்ற வாக்கிய கொள்கை முழுப் பிழையானது. இவ்வாறுதான் ஏனைய திதி நட்சத்திர பிரமாணங்களும் எனவே அனைவரும் அதிகமான கோவில்கள் பயன்படுத்தும் திருக்கணித பஞ்சாங்க கணிப்பின் படி விரதங்களையும் பண்டிகைகளையும் ஒரே நாளில் பின்பற்ற வேண்டுமென அன்புடன் வேண்டுகிறோம். குறிப்பாக இந்திய நாட்டிற்காக கணிக்கப்பட்ட பாம்பு பஞ்சாங்கம் அல்லது இலங்கை நேரப்படி கணிக்கப்பட்ட வாக்கியம் அல்லது திருக்கணித பஞ்சாங்கம் இங்கு பாவிப்பது பாரிய பிழையாகும்.

அன்புடன்

பிரித்தானிய நேரப்படி திருக்கணித பஞ்சாங்க கணிப்பை பின்பற்றும் கோவில்கள்

விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே




பார் ஒவ்வொரு நாளும் பார்

VAAVAA

For Advertisement

Birthday
Wedding

Obituary

விளம்பரதிற்கு

பிறந்தநாள்
திருமணம்

மரண அறிவித்தல்

**Official Grand Opening Cermony of**

VAAVAA

**www.vaavaa.co.uk**

**on**
**09 Nov 2014**

**Look Everyday Look**





VAAVAA

vaavaa.co.uk

Tel : 0203 640 8110

E-mail : info@vaavaa.co.uk

# கேள்வி முயல்

கேளுங்கள் கொடுக்கப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் என கேள்விப்பட்டிருப்பினும், எம்மில் எத்தனை பேர் இதில் மறைந்திருக்கும் உண்மையை அறிந்துள்ளோம்.கேட்பது செவிகள் மூலம் கிடைக்கும் ஒரு புலன், இப்புலனை சரிவரப் பயன்படுத்தினால், வாழ்க்கையில் பல நன்மைகளை அடையலாம். இயற்கையாக எமக்குக் கிடைத்த இப்புலன் வசதி மூலம் நாம் அதிக பயனை அடைய முயற்சி செய்ய வேண்டுமென்பதே ஔவையாரின் அறிவுரை.

பசிக்கு பால் வேண்டி அழுதிட்ட, 3 வயது நிரம்பிய பாலகன் (பின்னர் திருஞானசம்பந்தர்) தனக்குத் தேவைப்பட்ட பாலைக் கேட்டதினால் தான் அவருக்கு ஞானப்பால் கிடைத்தது. எமக்கு 386 தேவாரப் பதிகங்கள் கிடைத்தது. கி.பி.7 ஆம் நூற்றாண்டில் எழுந்த கேள்விதான், இன்றும் அழியாமல் ஒவ்வொரு இந்து ஆலயங்களிலும் ஒலிக்கும் திருமுறைகளில் ஒன்றாகும்.

பசியோ, பட்டினியோ, தமது பிள்ளைகள் படிக்க வேண்டும். கல்வியறிவு அடையவேண்டுமென ஒவ்வொரு பெற்றோரும் கல்விக் கூடத்துக்கு தமது பிள்ளைகளை அனுப்பி வைப்பது, பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் அறிவை கேள்வி மூலம் அறிந்து கொள்வதற்காக எடுக்கும் முயற்சியே கல்வி கற்பதற்கான, நூல்கள் இருப்பினும் அதனை இலகுவில் கிரகிக்கக் கூடிய வழிமுறை ஆசிரியர்களின் வழிகாட்டுதலாக இருப்பதினால்தான் கல்விக் கூடங்கள் உருவாகின.

கல்விக்கூடங்களுக்கே செல்லாத சித்தர்கள், அறிஞர்கள், செவி மூலம் கேட்டு அறிந்தவற்றை வாய் மூலம் மக்களுக்கு உபதேசிக்கும்போது அவற்றைறக் கேட்பதற்கு முயல வேண்டும். இதனால்தான், பிரசங்கங்கள், பட்டிமன்றங்கள், மேடைப் பேச்சுகள் அன்று தொட்டு இன்று வரை பிரபல்யமாக இருந்து வருகின்றன. ஒரு நூலின் வடிவில் வெளியாகும் கருத்துக்களை சில நிமிடங்களில் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கேட்பதினால் கிடைக்கும் இலாபம்.

இசையில் மேதாவியாகப் போற்றப்படும் பல விற்பன்னர்கள், முறைப்படி ஒரு குருவின் கீழ் படிந்து பயிற்சி பெறாவிட்டாலும், கேள்வி ஞானத்தால் உயர்ந்தவர்கள் பலர் இருப்பதை இன்னும் அறிகிறோம். விஞ்ஞானம் வளர்ந்து விட்ட நிலையில் மக்களுக்குத் தேவையான பொது அறிவை வளர்க்கவும், பரப்பவும், ஏராளமான தொழில்நுட்ப சாதனங்கள் பெருகிவிட்ட இக்காலகட்டத்தில் அறிவையும் ஞானத்தையும் கேள்வி மூலம் அறிய முயற்சிக்க வேண்டுமென்பதே ஔவையாரின் கனவாகும். எனவே கேட்பதற்கு முயலுங்கள், அறிவு தானாகவே வளரும்.

# படிக்க வேண்டிய பாடங்கள்

முற்பகலில் முதலமைச்சராக இருந்தவர் பிற்பகலில் சிறைக் கைதியாக அடைக்கப்பட்டது எதனால் என்பதை செல்வி ஜெயலலிதாவின் மனச்சாட்சியே தீர்ப்புக் கூறும். இவரைச் சுற்றியிருந்த கூட்டம் இவருடைய இழகிய மனதை நன்கு பயன்படுத்தி நட்டாற்றில் விட்ட கதையை எவரும் மறுக்க முடியாது. ஏனெனில் இவர் பெயரில் குவிக்கப்பட்ட சொத்து இவருக்கு அவசியம் தேவைப்பட்டதல்ல. இவருடைய பதவியையும், செல்வாக்கையும் நன்கு பயன்படுத்தி இவரிடம் நட்பாசையை வளர்த்து இறுதியில் இவரது நல்ல மதிப்பையும், மக்கள் செல்வாக்கையும் இடித்துத் தள்ளிவிட்ட நம்பிக்கைக்குரியவர்கள், இத்தகைய ஒரு சரிவு செல்வி ஜெயலலிதாவின் வாழ்க்கையில் வருமென கனவு கூட கண்டிருக்கமாட்டார்கள். ஏனெனில் அவர்களுடைய பேராசை, கண்களையே மறைத்துவிட்டன. கல்வியில் அறிவும், கண்டிப்பான குணமும், அரசியல் அனுபவமும் கொண்ட ஒரு புத்திசாலியான பெண்மணி வருவாய்க்கு மீறிய சொத்துக்களைச் சேர்ப்பதற்கு எவ்வாறு உடந்தையாக இருந்தார் என்பதை அவர் மீது பற்றுள்ளவர்களால் ஜீரணிக்க முடியாமல் உள்ளது.

ஈழத்தமிழ் மக்களின் உரிமைக்காகவும், சுயகௌரவத்துக்காகவும், வாழ்வாதாரத்துக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்த ஜெயலலிதா சொத்துக் குவிப்பு ஊழலில், குற்றவாளியாக இந்திய நீதிமன்றத்தினால் காணப்பட்டது வேதனைக்குரியது. நீயுமா ஜெயலலிதா என்று சேக்ஸ்பியர் பாணியில் கேட்கத் தான் தூண்டுகிறது. அவருக்கெதிராக வழங்கப்பட்ட தீர்ப்பு, நீதியானதோ இல்லையோ, ஆதாரங்களின் அடிப்படையில் விதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இவ்வாதாரங்கள் பொய்யாகப் புனையப்பட்டதாக கூறவும் வாய்ப்பில்லை. எனவே இழைக்கப்பட்ட குற்றத்திற்கு சட்டத்தை மதித்து நீதியை நிலைநாட்டுவதே நல்ல இந்தியக் குடிமகளுக்கு உகந்த வழியாகும்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

சொத்துக் குவிப்பு வழக்கில் தீர்ப்பு வழங்கியதின் பின் நடந்த அசம்பாவிதங்கள் மரணங்கள், சேதங்கள் அத்தனையையும் தமிழக மக்களின் அதிக அபிமானத்தைப் பெற்றவரான ஜெயலலிதா ஒரு உரத்த அறிக்கையின் மூலம் இலகுவாக தவிர்த்திருக்கலாம். அந்தச் சாணக்கியத்தை தவறவிட்ட ஜெயலலிதா, பிணை வழங்கிய உயர்நீதிமன்றத்தின் நிபந்தனையின் பிரகாரம் தமிழக மக்களை அமைதி காக்கும்படி வேண்டுகோள் விடுத்தது நகைப்புக்குரியது.

வருவாய்க்கு மிஞ்சிய சொத்துக் குவிப்புக்கான தண்டனை தற்காலிகமாகவே நிறுத்தப்பட்டு இருப்பதினால், நிரந்தரமானதல்ல. எனவே, ஜெயலலிதாவின் அரசியல் எதிர்காலம் அவர் படித்த பாடங்களின் அடிப்படையில் எடுக்கப் போகும் முடிவைப் பொறுத்தே அமையும்.

# மீளப் பெறும் மின்சக்தி

ஐ போன் பாவனை அதிகரித்துவிட்ட நிலையில், அதன் மின்சக்தியை அடிக்கடி மீளப் பெற வேண்டிய (recharge) தேவையும் அதிகரித்து விட்டது. எவ்வளவு தான் சிக்கனமாக ஐ போனை பாவித்தாலும் சில சமயங்களில் மின்சக்தி அடியோடு இல்லாமல் போவதை அனேகர் அவதானித்திருப்பீர்கள். மின்சக்தியை மீளப் பெறும் வசதிகள் அனேக இடங்களில் காணப்பட்டாலும், இதற்குத் தேவையான சார்ஜிங் பாட்டையும் (charging pad) கையோடு கொண்டு செல்வது சில சமயங்களில் தவறப்படுவதினால், மாற்று வழி தேடி ஆராய்ச்சிகள் முடுக்கிவிடப்பட்டன.

தொழில்நுட்ப ஆராய்ச்சிகளில் பிரசித்தி பெற்ற மசச்சுசெற்ஸ் (Massachusetts) கல்வி நிலையத்தில் பணியாற்றும் டயானா கற்றபி என்பவரும் அவரது தோழியான ஜோயா ஜதியனும் சேர்ந்து எடுத்த முயற்சியினால் கம்பியில்லாத (wireless) சார்ஜரை கண்டுபிடித்துள்ளனர். இதற்கு ஆதாரமாக அமைந்தது wifi router தொழில்நுட்பம் தான் என்பதை மறைக்காமல் கூறுகின்றனர். இதில் உள்ள வேறுபாடு என்னவெனில் கணனிக்குத் தேவைப்படும் சமிக்ஞைகளை எவ்வாறு wifi router கம்பியில்லாத் தொடர்பு மூலம் தருகிறதோ அதேபோல ஐ போனுக்கு தேவைப்படும் மின்சக்தியை மீளப் பெற MAG MIMO என்ற காந்தத் தொடர்பு மூலம் தருகிறது.

MAG MIMO எனப்படும் காந்தத் தொடர்பு, 30 சென்ரிமீற்றர் தூரம் வரை தனது இணைப்பை தொடர்புபடுத்தக் கூடிய வல்லமை இருப்பதால் இதன் சக்தியை விரிவுபடுத்த ஆராய்ச்சிகள் தொடரப்படுகிறது.

முற்றாக மின்சக்தியை இழந்துவிட்ட ஐபோன் 4 எஸ் ரகத்தைச் சேர்ந்த போனை 5 மணித்தியாலத்துக்குள் மீண்டும் பாவனையில் முழுதாகப் பயன்படுத்த முடியுமெனக் கூறும் ஆராய்ச்சியாளர்கள், இதன் அறிக்கையை சர்வதேச ஆய்வரங்கில் சமர்ப்பித்துவிட்டதாக கூறப்படுகிறது.

சட்டைப் பைக்குள் வைத்திருக்கும் ஐபோனை கையில் எடுக்காமலே recharge செய்யக் கூடிய வசதி மிக விரைவில் வந்துவிடுமென நம்பலாம். பிறகென்ன ஐபோன் பாவனையாளர்கள் பேசலாம், பேசலாம், தொடர்ந்து பேசலாம்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

sarasas
SOUTH INDIAN RESTAURANT

* தென்னிந்திய, இலங்கை, வட இந்திய, செட்டினாட் மற்றும் சைனீஸ் உணவின் ருசியை அனுபவியுங்கள்.
* உங்கள் வீட்டுத் தோட்டத்தில் அல்லது நீங்கள் விரும்பும் இடத்தில் எமது தோசை தயாரிக்கப்படும்.
* சகல பாத்திரங்களும் நாம் கொண்டு வருவோம்.
* நீங்கள் எமது உணவை ருசித்து மகிழவேண்டியது மாத்திரமே




* Outdoor catering * Function hall * Party orders

புதிய விழாக்களுக்கான மண்டபம் Bar வசதியுடன் திறக்கப்பட்டுள்ளது






SARASAS CATERING

எமது சேவை, கற்பனை, ருசியான உணவு, சிறந்த சமையல் ஆகியவற்றின் வெளிப்பாடாகும்

We make 30 different Types of Dosa

630-634 Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RY
TEL : 020 8561 8188 for further enquiries please contact : 07939 246 552
Email: raj@sarasasrestaurant.com www.sarasasrestaurant.com

FREE CAR PARKING UPTO 100 CARS

Opening Times 12.00 noon to 11.00pm (7 days a week)

# ஐ. எஸ் அமைப்பிற்கு எதிரான போரின் துருப்புச் சீட்டு துருக்கியின் கையில்




**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

அண்மைக்காலங்களாக இரசியாவிற்கு இணையாக அல்லது ஒரு படி மேலாக மேற்கு நாட்டு ஊடகங்களில் கடுமையாக விமர்சிக்கப்படும் ஒரு நாடாக துருக்கி இருக்கின்றது. மேற்குலகப் பத்தி எழுத்தாளர்கள் துருக்கி நேட்டோக் கூட்டமைப்பில் இருந்து விலக்கப்பட வேண்டும் என்றும் துருக்கி குர்திஷ் மக்களைக் கைவிட்டு ஐ. எஸ் தீவிரவாதிகளுடன் இரகசியமாகக் கை கோர்ப்பது வெட்கக் கேடான செயல் என்றும் எழுதித் தள்ளுகின்றனர்.

### ◆ நடுவில் இருந்து நடுநிலை தேடும் துருக்கி

துருக்கி ஐரோப்பா, ஆசியா ஆகிய நாடுகளுக்கு நடுவில் இருக்கின்றது. அங்கு ஒரு மக்களாட்சி நிலவினாலும் அது மக்களாட்சி, படைத்துறை, இசுலாமியவாதம் ஆகிய மூன்றின் நடுவில் இருக்கின்றது. துருக்கியில் நிலப்பரப்பில் 97 விழுக்காடு ஆசியாக் கண்டத்தில் இருக்கின்றது. ஓர் இசுலாமிய நாடான துருக்கி மேற்கு நாடுகளுடன் இணைந்துள்ளது. நேட்டோவினது ஓர் உறுப்பு நாடாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தினது இணண உறுப்பு நாடாகவும் இருப்பதால் மத்திய கிழக்கு நாடுகளுடன் துருக்கியின் உறவு மேற்கு நாடுகளைப் பொறுத்தவரை முக்கியமானதாகும். முன்பு மத்திய கிழக்கிலுள்ள எல்லா நாடுகளுடனும் நல்ல உறவை வைத்திருந்தது துருக்கி. ஈராக் போரின் போது துருக்கிக்கும் ஈராக்கிற்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. 1979-இல் ஈரானில் நடத்த மதவாதப் புரட்சிக்குப் பின்னரும் துருக்கியும் ஈரானும் நல்ல உறவைப்பேணின. துருக்கிக்கும் தற்போது ஈரான் எனப்படும் பாரசீகத்திற்கும் இடையில் புரதான காலம் தொட்டே நல்ல உறவு இருந்து வருகின்றது. ஐரோப்பா, அரபு நாடுகள், ஈரான் ஆகிய மூன்றின் மத்தியில் துருக்கியின் வெளிநாட்டுக் கொள்கை தடுமாறுகின்றது. துருக்கி ஐரோப்பிய ஒன்றியத்தில் முழுமையான உறுப்புரிமை பெறவிரும்புகிறது ஆனால் அது இழுத்தடிக்கப்படுவதால் இரசியாவின் யூரோ ஏசியன் கூட்டமைப்பில் அல்லது பிரேசில், இரசியா, இந்தியா, சீனா ஆகியவற்றைக் கொண்ட பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணைவது குறித்து கருத்தில் கொள்கின்றது. இங்கும் ஐரோப்பிய ஒன்றியமா யூரோ ஏசியனா பிரிக்ஸா என்பது துருக்கியின் தடுமாற்றம்.

### ◆ அமெரிக்காவும் துருக்கியும்

அமெரிக்காவிற்கும் துருக்கிக்கும் இடையிலான உறவு 1950-ம் ஆண்டு கொரியப் போரில் மலர்ந்தது. இதில் முதல் விரிசல் துருக்கி 1973-ம் ஆண்டு சைப்பிரசை ஆக்கிரமித்த போது உருவானது. 2003-ம்ஆண்டு சதாம் ஹுசேயினிற்கு எதிராக அமெரிக்காவும் பிரித்தானியாவும் படை எடுத்த போது இரண்டாவது விரிசல் உருவாகியது. துருக்கியின் கேந்திர நிலை ஈராக் மீதான தாக்குதலுக்கு அமெரிக்காவிற்கு மிகவும் தேவைப்பட்டது.

துருக்கியை தளமாக வைத்து ஈராக் மீது தாக்குதல் நடாத்த அமெரிக்கா விரும்பியது ஆனால் துருக்கியப் பாராளமன்றம் அதை நிராகரித்து விட்டது. தற்போது ஐ. எஸ் போராளிகளுக்கு எதிராக சிரியாவிலும் ஈராக்கிலும் தாக்குதல் நடாத்த துருக்கியைத் தளமாகப் பாவிக்க அமெரிக்கா விரும்புகிறது. ஆனால் துருக்கிய விமானத் தளங்களில் அமெரிக்காவின் வேவு பார்க்கும் ஆளில்லா விமானங்கள் மட்டும் பாவிக்க துருக்கி அனுமதி வழங்கியுள்ளது. எகிப்த்தில் முஹமட் மோர்சியின் ஆட்சி தொடர்வதை துருக்கி விரும்பியது. அதை சவுதி அரேபியா கடுமையாக எதிர்த்ததுடன் படைத்துறையினரின் ஆட்சி மீண்டும் அமைய சவுதி அரேபியாவும் வேறு அரபு நாடுகளும் விரும்பின. அமெரிக்கா எகிப்திய விவகாரத்தில் விலகி இருப்பது போலக் காட்டிக் கொண்டது. ஈரானுக்கு எதிராக கடுமையான பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதித்தது. துருக்கி திரைமறைவில் ஈரானின் எரி பொருள் விற்பனைக்கு உதவி செய்கின்றது. 2012 மார்ச் மாதத்தில் இருந்து 2013 ஜுலை மாதம் வரை 13 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான தங்கம் துருக்கியில் இருந்து ஈரானுக்கு அனுப்பப் பட்டுள்ளது. இவை ஈரானிடமிருந்து துருக்கி பெற்ற எரிவாயுவிற்கான விலையாகும்.

### ◆ நேட்டோவும் துருக்கியும்

சோவியத் விரிவாக்கத்திற்கு எதிராக உருவாக்கப் பட்ட நேட்டோப் படைத் துறைக் கூட்டமைப்பில் 1952-ம் ஆண்டு துருக்கி இணைந்து கொண்டது. ஆனால் தற்போது நேட்டோவின் முக்கிய பணிகளில் ஒன்றாக இசுலாமியத் தீவிரவாத ஒழிப்பு உருவெடுத்து விட்டது. லிபியாவில் மும்மர் கடாஃபியின் ஆட்சியைக் கவிழ்த்தது போல சிரியாவில் பஷார் அல் அசாத்தின் ஆட்சியை நேட்டோ கவிழ்க்க வேண்டும் என துருக்கி எதிர்பார்த்தது. சிரியக் கிளர்ச்சிக்காரர்களுக்கு நேட்டோப் படைகள் படைக்கலங்கள் வழங்க வேண்டும் என துருக்கி எதிர்பார்த்தது. ஆனால் இரண்டையும் நேட்டோ செய்யவில்லை. வேல்ஸில் நடந்த நேட்டோக் கூட்டமைப்பின் மாநாட்டில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா ஐ. எஸ் தீவிரவாதிகளின் பணம் கடத்தல், இரகசிய எரிபொருள் விற்பனை போன்றவற்றைத் தடுக்குமாறு துருக்கியை வேண்டியிருந்தார். துருக்கி தனது ஏவுகணை எதிர்ப்பு முறைமையை சீனாவிடம் வாங்க முடிவு செய்தமை பல நேட்டோ நாடுகளை அதிருப்திக்கு உள்ளாக்கியது.

### ◆ ஐ.எஸ் இற்கு எதிரன தாக்குதலும் துருக்கியும்

துருக்கி ஈராக்குடனும் சிரியாவுடனும் 780 மைல் நீளமான எல்லையைக் கொண்டுள்ளது. மத்திய கிழக்கில் ஒரு உறுதியான அரசியல் சூழ்நிலை உருவாக துருக்கியின் உதவி தனக்கு அவசியம் என அமெரிக்கா கருதுகின்றது. துருக்கியின் அடானா மாகாணத்தில் உள்ள விமானப் படைத்தளத்தில் இருந்து ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடாத்துவது மிகவும் இலகுவானதாகும். ஆனால் துருக்கி இதை அனுமதிக்கவில்லை. இந்த அனுமதியைப் பெறுவதற்கு அமெரிக்காவின் ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிரான நாடுகளின் கூட்டமைப்பை உருவாக்குவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் நியமிக்கப்பட்ட அமெரிக்கத் தூதுவர் ஜோன் அலன் துருக்கிகுப் பயணத்தையும் மேற் கொண்டிருந்தார். அமெரிக்கப் படைத்துறையின் உச்சத் தளபதி மார்டின் டிம்செ துருக்கி உட்பட இருபது நாடுகளின் படைத்துறைத் தளபதிகளின் கூட்டம் ஒன்றை 2014-10-13-ம் திகதி வாஷிங்டனின் கூட்டியிருந்தார். துருக்கியப் படைத்தளபதி இதில் பங்கேற்கவில்லை. ஐ. எஸ் அமைப்பிற்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்கும்படி அமெரிக்கா துருக்கிய அதிபரை வலியுறுத்தியது ஆனால் துருக்கியின் அதிபர் ஐ. எஸ் அமைப்பிற்கும் இஸ்லாமிய மதத்திற்கும் தொடர்பில்லை எனக் கூறியதுடன் நிறுத்திக் கொண்டார். சிரியாவில் செயற்படும் குர்திஷ் மக்களின் மக்களாட்சி ஒன்றிய கட்சியினருக்கு அமெரிக்கப் படையினர் விமானத்தில் இருந்து படைக்கலன்களைப் போட்டது துருக்கிக்குப் பிடிக்கவில்லை. குர்திஷ் மக்களாட்சி ஒன்றியக் கட்சி என்பது துருக்கியில் தடை செய்யப்பட்ட குர்திஷ்த்தான் தொழிலாளர் கட்சியின் சிரியக் கிளை என்பதால் துருக்கி இதை விரும்பவில்லை. குர்திஷ்த்தான் தொழிலாளர் கட்சி அமெரிக்காவிலும் ஐரோப்பிய ஒன்றியத்திலும் கூட ‘பயங்கரவாத’ அமைப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது. ஐ.எஸ் அமைப்பினருக்கு எதிரான போரில் துருக்கி செய்த பேருதவி ஈராக்கில் இருக்கும் குர்திஷ் அமைப்பான பெஸ்மேராப் போராளிகளை சிரியப் பிரதேசமான கொபானிக்கு துருக்கியூடாகச் சென்று அங்குள்ள குர்திஷ் அப்பாவிகளை ஐ.எஸ் தீவிரவாதிகளின் கொலையில் இருந்து பாதுகாக்க அனுமதித்தமையாகும்.

### ◆ துருக்கியும் டென்மார்க்கும்

டென்மார்க்கைச் சேர்ந்த பசில் ஹசான் என்னும் ஐ.எஸ்சின் ‘புனிதப் போராளி’ லார்ஸ் ஹெடெகார்ட் என்னும் இசுலாமிய தீவிரவாதத்திற்கு எதிராக எழுதும் ஒரு ஆய்வாளரைக் கொலை செய்ய முயன்றார். இவர் துருக்கியில் பிடிபட்டிருந்த வேளை அவரை நாடுகடத்தும்படி டென்மார்க் அரசு துருக்கிய அரசைக் கோரியிருந்தது. பசில் ஹசானை நாடு கடத்தாமல் துருக்கி விடுவித்தது. ஐ. எஸ் அமைப்பினர் ஈராக்கில் பெரு நிலப்பரப்பைக் கைப்பற்றிய போது துருக்கிய இராசதந்திரிகள் 39 பேரைப் பணயக் கைதிகளாக பிடித்திருந்தனர். இவர்களை விடுவிக்க துருக்கி பசில் ஹசானை விடுவித்தது.

### ◆ குர்திஷ் போராளிகளா ஐ.எஸ் போராளிகளா?

சிரியாவின் துருக்கிய எல்லையை ஒட்டிய பிரதேசமான கொபானியில் அப்பாவி குர்திஷ் மக்களை ஐ.எஸ் திவிரவாதிகள் கொன்று குவித்த போது துருக்கியால் ஒரு சில நாட்களில் கொபானியின் வாழும் குர்திஷ் மக்களைப் பாதுகாக்க முடியும். நேட்டோ நாடுகளில் எண்ணிக்கை அடிப்படையில் துருக்கிய படைகள் இரண்டாவது பெரிய படைகளாகும். துருக்கியப் பாராளமன்றம் 2014-10-02-ம் திகதி துருக்கியப் படைகள் ஐ. எஸ் அமைப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை அனுமதிக்கும் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. ஐ. எஸ் போராளிகளை அழித்து குர்திஷ் மக்கள் ஈராக்கில் வலுப்பெறுவதை துருக்கி விரும்பவில்லை. ஈராக்கில் குர்திஷ் மக்கள் வலுவடைந்தால் அது துருக்கியில் வாழும் குர்திஷ் மக்களை வலுவடையச் செய்யும் என துருக்கி அஞ்சுகின்றது.

### ◆ துருக்கியின் கையில் துருப்புச் சீட்டு

ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக மாதக் கணக்காகச் செய்து வரும் விமானத் தாக்குதல்கள் அவர்கள் மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. அமெரிக்கப் படைத்துறை நிபுணர்கள் ஆரம்பத்திலேயே ஒருதரை வழிப் படை நகர்வு செய்யாமல்ஐ.எஸ் தீவிரவாதிகளை அழிக்க முடியாது என எச்சரித்திருந்தனர். ஐ. எஸ் போராளிகளுக்கு எதிரான தக்குதல் தொடர்த் தொடர மேற்கு ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் இருக்கும் இசுலாமியத் தீவிரவாதிகளை இனம் காணுவதும் இலகுவாகிக் கொண்டே போகின்றது. அந்த அளவிற்கு அங்குள்ள இசுலாமியர்களில் தீவிரவாதப் போக்குள்ளவர்கள் ஐ.எஸ் அமைப்பினருடன் இணைந்து கொண்டே இருக்கின்றனர். இது வட அமெரிக்காவையும் மேற்கு ஐரோப்பாவையும் சுத்தப்படுத்த உதவுகின்றது. ஐ. எஸ் அமைப்பினருக்கு எதிரான போர் விரைவில் முடியுமா அல்லது இழுபடுமா என்பது துருக்கியின் கையில்தான் இருக்கின்றது.




We offer a
one-stop-shop
for all of your
Telecoms needs
Saving you
Time & Money

Our Products and Services:
→ Phone Systems
→ SIP Trunks
→ Next Gen Broadband
→ Landlines

Communication System
for Businesses
❖ Easy to control
❖ Lower call costs
❖ Lines from £9.95
❖ No need for a costly PBX
❖ No maintenance charges
❖ Free Installation on Fibre/Ethernet*
*subject to Survey

MONEX TELECOM
Exclusively for Businesses
0207 402 2900
www.monextelecom.co.uk
We offer
24/7 Technical Support

# ஹரோ தமிழ் மூத்தோர் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழா







ஹரோ தமிழ் மூத்தோர் சங்கத்தின் 8ம் ஆண்டு நிறைவு கலாச்சார விழா கடந்த 18-10-2014 சென். அன்ரூஸ் தேவாலயமண்டபத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களான அழைக்கப்பட்டிருந்த ஹரோ மேயர் அஜே மரூ, அவரது மனைவி டீனா மரூ, கவுன்ஸிலர் சுரேஸ் கிருஸ்ணா, சசிகலா சுரேஸ் அவர்கள், பிரித்தானியத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் கிளையின் பொறுப்பாளர் கந்தையா இராஜமனோகரன், மருத்துவர் சசிகலா இராஜ மனோகரன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். விருந்தினர்களை மூத்தோர்கள் சால்வை அணிந்தும், பூச்செண்டு வழங்கியும் கௌரவித்தனர்.

கலாச்சார நிகழ்வுகள் யாவும் தமிழரின் கலாச்சாரம், பின்னணி, சமயம் ஆகிய அம்சங்களோடு பின்னிப்பிணைந்திருந்தன. ஆண்கள் மேடையேற்றிய 'தெய்வங்களின் நாம மகிமை' என்னும் நாடகம் சபையோரின் பெருமதிப்பைப் பெற்றது. திரு பவளராஜா அவர்களின் உடை அலங்காரம், ஒப்பனை நாடகங்களுக்கு மெருகூட்டின. பெண்கள் 'பெண்ணின்பெருமை' என்னும் கருவை நான்கு காட்சிகளில் நடைச்சித்திரமாக மேடைக்குக் கொண்டுவந்தனர். அவர்களில் பலருடைய நடிப்பு சபையோரைக் கவர்ந்தன. இடையிடையே பாட்டுக்களும் நகைச்சுவையும் கலந்திருந்தன. ஒட்டுமொத்தமாகக்கூறின் சபையோர் சுமார் இரண்டு மணிநேரம் தம்மையே மறந்திருந்து காட்சிகளைக் கண்டு ரசித்தனர்.

விசேட விருந்தினர் திரு கந்தையா இராஜமனோகரன் பேசுகையில் சமூதாயத்தில் மூத்தோரின் பங்கு மிக முக்கியமானது என்பதை நிலை நிறுத்தி, சங்கம் எடுத்திருக்கும் செயற்பாடுகள் யாவும் மிகப் பயன் தரக் கூடியவை என்றும், தாமும் வசதிவரும்போது நிலையத்திற்கு வந்து தம்மாலான தொண்டுகளைச் செய்யத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு சங்க நிகழ்வுகள் யாவும் வரவேற்கத்தக்கமுறையில் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்குக் காரணம் திறமை வாய்ந்த தலைவரின் ஈடுபாடும் வழி நடத்தலும் என அறியக்கிடக்கின்றது எனவும் குறிப்பிட்டார். கூறினார். டாக்டர் திருமதி சசி இராஜமனோகரன் அவர்கள் திறமையாக நடித்த நடிகர்களைப் பாராட்டிப் பரிசில்கள் வழங்கினார் நிகழ்ச்சிகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் தொகுத்து வழங்கிய அறிவிப்பாளர்கள் திரு லோகன், திருமதி அனுஜா ஆகியோர் நிகழ்வுகளுக்கு ஆங்காங்கே உயிர் கொடுத்தனர்.

## கிளிநொச்சி

# பொது நூலகத்திற்கு நூல் சேகரிப்பு

போர்க்காலத்தில்கூட மிகச் சிறப்பாக இயங்கிய கிளிநொச்சி பொது நூலகத்திற்கு 25,000 புத்தங்களைச் சேர்க்கும் நோக்குடன் லண்டனில் இயங்கும் கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பு செயற்திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே பிரித்தானியா, ஓஸ்ரேலியா, கனடா போன்ற நாடுகளிலிருந்து பலரும் இத்திட்டத்திற்கு உதவ முன்வந்துள்ளதாக மேற்படி அமைப்பு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்தவகை நூல்களே அதிகம் தேவைப்படுவதால் நூல்களை அன்பழிப்புச் செய்வோர் இதனைக் கவனத்தில் எடுக்குமாறும் புலம் பெயர்நாடுகளில் பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல்களை தவிர்க்குமாறும் வேண்டப்படுகிறார்கள். தேவைப்படும் நூல்கள்:

- அகராதிகள் (தமிழ் மற்றும் பிற மொழிகள்)
- வரலாறு, அரசியல் நூல்கள்
- புனை கதைகள்
- இலக்கிய நூல்கள்
- பல்கலைக்கழக மாணவர்களுக்கான நூல்கள்
- தொழில்நுட்ப நூல்கள், தகவல் தொழில்நுட்ப நூல்கள்
- மழலைகள் மற்றும் சிறுவர்களுக்கான நூல்கள்

தமிழ், ஆங்கில நூல்களே வேண்டப்படுகிறது.

மேலதிக தொடர்புகளுக்கு: kilipeople2011@gmail.com

*சதா: 079 8568 6487, சுரேஸ்: 079 5184 7840, மதி: 078 0829 9044, இரவி: 075 7898 9826 விஜயன்: 079 5712 2472, துறைவன் : 077 9906 4825, சண்: 079 7976 7485, நாதன்: 079 4900 2526*


நடந்த நிகழ்வுகள் மற்றும் நடக்க இருக்கும்
நிகழ்வுகள் எவையாயிருந்தாலும்
பிரசுரிப்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள்

அனுப்பவேண்டிய முகவரிகள் -
www.facebook.com/orupaper
Email: info@orupaper.com
தொலைபேசி இலக்கம்: 020 7043 4314.





THE MORTGAGE ORGANISATION

AUTHORISED BY THE FINANCIAL CONDUCT AUTHORITY

RESIDENTIAL MORTGAGES & COMMERCIAL MORTGAGES

Contact:

**David Eva**
OR
**Ernest Sri**

258- High Street North
Manor Park, London E12 6SB

Tel: **020 8475 0755**
Fax: **020 8470 4755**
Mob: **07803 600 543**

Commercial Loans
- Petrol Stations
- Hotels, Restaurants & Takeaways
- Convenience Shops
- Pharmacies, Development Finance
- Dentist & GP Surgeries
- Vehicle Finance

Residential Mortgages
- Re-Mortgages
- Buy to Let
- Bridging Loans
- Right to Buy
- Help to Buy



Loans can be arranged for leasehold and freehold businesses

MORTGAGES AVAILABLE FOR NON UK CITIZENS

How will a 'YES' make you feel ?

YOUR HOME MAY BE REPOSSESSED IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON YOUR MORTGAGE

# மாவீரர் எழுச்சி நாளின் நிகழ்வுகளும் நடைமுறை ஒழுங்குகளும்



1989 ஆம் ஆண்டில் நவம்பர் 27ஆம் நாள் மாவீரர் நாளாகவும், 1990 ஆம் ஆண்டிலிருந்து 1994 ஆம் ஆண்டுவரை நவம்பர் 21 ஆம் நாளில் இருந்து 27 ஆம் நாள்வரை மாவீரர் வாரமாகவும் தமிழீழ மக்களால் எழுச்சி நிகழ்வாக நடைபெற்றுவந்த தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் 1995 ஆம் ஆண்டிலிருந்துநவம்பர் 25 ஆம் நாளிலிருந்து 27 ஆம் நாள் வரை மூன்று நாட்கள் தமிழீழ மாவீரர் எழுச்சி நாட்களாக கடைப்பிடிக்கப்படவிருக்கின்றன.

தமிழீழ தேசியக்கொடி ஏற்றலுடன் மாவீரர் எழுச்சி நாள் ஆரம்பமாகும்

### நினைவு நிகழ்வொழுங்கு முறைகள்

- பொதுச் சுடரேற்றல்
- தேசியக்கொடி ஏற்றல்
- திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடர் ஏற்றல்
- திருவுருவப் படத்திற்கான மலர்மாலை அணிவித்தலும் மலர் வணக்கமும்
- அகவணக்கம்
- உறுதியுரை
- மாவீரர் வணக்கம் (நடனம்/கவிதை)
- வரவேற்புரை
- தலைமையுரை
- தலைவரை வாழ்த்தும் நடனம் / கவிதை
- நினைவுரை
- பொதுவான கவிதை/சிறிய நிகழ்ச்சி
- சிறப்புரை
- கலைநிகழ்ச்சிகள்
- நன்றியுரை
- கோசப்பாடல்
- தேசியக்கொடி கையேற்றல்
- நிறைவு

### குறிப்பு :–

நினைவு நிகழ்வின் போது காலை நிகழ்வுகள் செய்பவர்கள் பொதுச்சுடரேற்றல்

- தேசியக்கொடி ஏற்றல்
- ஈகைச்சுடர் ஏற்றல்
- மலர்மாலை அணிவித்தல்
- அகவணக்கம்
- உறுதியுரை

என்பனவற்றை மேற்கொண்டு மாலையில் அகவணக்கத்துடன் நிகழ்வுகளை ஆரம்பிக்கலாம்.

### நிறைவு நிறைவெழுங்கு முறைகள்

- பொதுச்சுடரேற்றல்
- தேசியக்கொடி ஏற்றல்
- அகவணக்கம்
- உறுதியுரை
- மாவீரர் வணக்கம் (நடனம் /கவிதை)
- வரவேற்புரை
- தலைமையுரை
- தலைவரை வாழ்த்தும் நடனம்/கவிதை
- பொதுவான கவிதை/சிறிய நிகழ்ச்சி
- பரிசில் சான்றிதழ் வழங்குதல்
- சிறப்புரை
- நன்றியுரை
- கோசப்பாடல்
- தேசியக்கொடி கையேற்றல்
- நிறைவு

என்பன மேற்படி வரிசை ஒழுங்கில் மேற்கொள்ளப்படும் தொடக்க நிகழ்வுகள் மாவீரர் எழுச்சி நாட்களான மூன்று நாட்களிலும் நடைபெறும்.

### தேசியக் கொடியேற்றல்

மாவீரர் எழுச்சி நாட்களுக்கான நிகழ்வுகள் நவம்பர் 25 ஆம் நாள் அன்று காலை 08.30 மணிக்கு தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பமாகும். மாவீரர் துயிலுல்லங்களில் 25ஆம் நாள் காலை 08.30 மணிக்கு ஏற்றப்படும் தேசியக் கொடி நவம்பர் 27 மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்த பின் இறக்கப்படும்.

இயக்கப்பணிமனைகள், தளங்களில் முதல் இரண்டு நாட்களிலும் மாலை 6.00 மணிக்கு கொடி இறக்கப்பட்டு மறு நாள் காலை ஏற்றப்படும். 27ஆம் நாள் மாவீரர் நிகழ்வுகள் நிறைவடைந்த பின் இறக்கப்படும்.

பொது நிறுவனங்களிலும், பள்ளிகளிலும் ஒவ்வொரு நாளும் பணி முடிந்த பின் பகல் 12.01 இன் பின்பாகவும் மாலை 6.00 மணிக்கு முன்பாகவும் தேசியக்கொடி இறக்கப்பட்டு மறுநாட் காலை ஏற்றப்படவேண்டும்.

### நினைவொலி எழுப்பலும், சுடரேற்றலும்,

27 ஆம் திகதி சுடரேற்றலும் நேரத்தை தமிழீழ மக்கள் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். மாலை 6.05 மணிக்கு தமிழீழமெங்கும் சம காலத்தில் அனைத்து ஆலய தேவாலய மணிகளும் ஒரு மணித்துளி நேரம் ஒலி எழுப்பும் அந்த நேரத்தை தொடர்ந்து எல்லா மக்களும் அகவணக்கம் செலுத்துவார்கள்.

துயிலுமில்ல மைதான நடுவில், பீடத்தில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப்பட்டிருக்கும், மக்கள் வெள்ள உணர்வு கொந்தளிப்போடு மைதானத்தைச் சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திடத் தீச்சுடர் ஏற்றப்படும். அமைப்பின் முதன்மையானவர்கள் மத்திய சுடரை ஏற்ற மாவீரரின் பெற்றோர் உரித்துடையோர் தீச் சுடரை சமகாலத்தில் ஏற்றுவர். சமகாலத்தில் ஒவ்வொரு இல்லங்களிலும், வாசலிலும் மாவீரரின் சுடர் ஒளியை அனைவரும் ஏற்றுவர்.

சுடரானது சுவாலை விட்டெரியும் ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்கள் பிரகாசிக்கும். தமிழீழம் முழுவதும் சுடரொளி ஓங்கிப்பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியாகிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழீழ மக்கள் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடரேற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாகவேநினைவுகூரப்படவேண்டும். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல தமிழீழமெங்கும் மாவீரர் சுடர்கள் இந் நேரத்தில் எங்கும் ஒளிரவேண்டும். சிட்டி விளக்கேற்றக்கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகளை ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீபங்கள் எரியும் போது இடங்களில் பெரிய சுடர்களை ஏற்றியும் நினைவுகூரவேண்டும்.

இந்த சுடரேற்றும் நிகழ்வானது விடுதலைப் பாதைக்கு உறுதியையும், உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.

### நவம்பர் 27 இரவு நிகழ்வுகள்

தேசியத்தலைவர் அவர்களின் மாவீரர் நினைவுரை மாலை 6.05 மணிக்கு ஒலி எழுப்பும் நிகழ்வு தொடங்கக்கூடியதாக தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் நினைவுரை நிகழ்வு இடம்பெறும்.

### நினைவொலி எழுப்புதல். (06.05 மணி)

தேசியத்தலைவர் அவர்களின் மாவீரர் நினைவுரை நிறைவடைந்தவுடன் உடனடியாக 6.05 மணிக்கு அனைத்து வழிபாட்டிடங்களிலும் மணி ஒலி ஒரு மணித்துளி நேரம் எழுப்பப்படும் உயிர்காப்பு பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்றவகையில் நிறுத்தப்பட்டு அமைதிபேணப்படல்வேண்டும்.

### அகவணக்கம் (6.06மணி)

மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன் 06.06 மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்தப்படும் இந் நேரம் இல்லங்களிலும், ஏனைய இடங்களிலும் இருக்கும் தமிழீழ மக்கள் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி அகவணக்கம் செலுத்தல் வேண்டும்.

### ஈகைச்சுடரேற்றல் (06.07 மணி)

அகவணக்கம் நிறைவுற்றதும் 06.07 மணிக்கு ஈகைச்சுடர் ஏற்றப்படல்வேண்டும் (மாவீரர்களின் பெற்றோர் அவரவர் சுடர் ஏற்றவேண்டிய கல்லறைகள், நினைவுக்கற்களுக்கு முன்னால் 5.15 மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.)

மாவீரர் துயிலுமில்லங்களிலுள்ள மாவீரர் கல்லறைகள், நடுகற்கள் முன் மாவீரர்களின் பெற்றோர், குடும்பத்தினர் அதேநேரம் மாவீரர் துயிலுமில்லங்களில் இடம்பெயர்ந்த மாவீரர் பெற்றோர்கள் அவர்களுக்கென ஒழுங்குசெய்யப்பட்ட இடங்களில் ஈகைச்சுடர் ஏற்றுவர்.

இவை தவிர துயிலுமில்லங்களுக்கு வராத பொது மக்கள் தமது இல்லங்களில், பொது இடங்களில், அலுவலகங்கள், விளையாட்டு இடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் உரிய நேரத்தில் உரியமுறைப்படி ஈகைச்சுடர் ஏற்றுவர் ஈகைச்சுடர் ஏற்றும்போது மாவீரர் பாடல் ஒலிக்கப்படும் (மாவீரர் ஈகைச்சுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கத்தைப்புரிந்து கொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அல்லது வேறுவகையில் ஒலி, ஒளி உருவாக்குவதோ தவிர்க்கப்படல்வேண்டும்.)

### அலங்காரம் (சோடனை)

எமது அமைப்பைச் சார்ந்த வீரச்சாவு, வீரவணக்கக்கூட்டம், துயிலுமில்ல, மாவீரர் விசேட நிகழ்வு வேறு அனைத்து நிகழ்வுகளுக்கான அலங்காரங்கள், சமூக சமய, வேறு அரசியல் சார்ந்ததாக இருக்காமல், எமது தேசியக்கொடி நிறங்களைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டும்

### எமது அலங்கார முறையும், நிறங்களும்

சிவப்பு, மஞ்சள், கறுப்பு-தேசியக்கொடியைப் பிரதிபலிக்கும், கறுப்பு கரும்புலிகள் தினத்திற்கும் கரும்புலிகள் சம்பந்தமான நிகழ்வுகட்கு மட்டும் கலந்து சோடிக்கலாம்.வீரச்சாவு கல் நாட்டலுக்கு சிவப்பு, மஞ்சள் துணிகளைப் பாவித்தல் வேண்டும்.மேசைவிரிப்பு, பீட விரிப்புகளும் சிவப்பு, மஞ்சள் துணியாகவே இருத்தல் வேண்டும் வெள்ளை விரித்தலைத் தவிர்த்தல் நன்று.

இச்சோடனைகள் தனித்துவமாக மாவீரர்களின் தற்கொடைத் தியாகம், அமைப்பு இலட்சியங்களை மக்கள் மனங்களில் தேன்றிப் பதிந்து எமது போராட்டத்தின் பால் இணைந்து செயற்பட வழிசமைத்தல்வேண்டும்.

### கடைப்பிடிக்க வேண்டிய சில நடைமுறைகள்.

எமது மாவீரர் நிகழ்வுகள் அமைப்பு நிகழ்வுகள் அனைத்திலும் ஈகைச்சுடர் ஏற்றுதல் கட்டாயமாகும். மங்கள விளக்கு ஏற்றக்கூடாது.

அகவணக்கத்துக்கு நேரம் குறித்தல் கூடாது.

### தவிர்க்கவேண்டியவை

அஞ்சலி, மௌனவணக்கம், மலரஞ்சலி, மங்கள விளக்கு, அஞ்சலியுரை, அஞ்சலிக்கூட்டம், அகவணக்கம், ஒருநிமிடம் இருநிமிடம் எனக் குறித்துக் கூறுதல்.

மாவீரர்களின் நிகழ்ச்சிகள், எமது அமைப்பு தொடர்பான ஏனைய (தமிழீழ விடுதலைப் புலிகள்) நிகழ்வுகளில் மலர்மாலை, ஈகச்சுடர், ஏற்றி வைப்பவங்களுக்கு நன்றி கூறுவது தவிர்க்கப்பட வேண்டும்.

உதாரணம்:- ‘மலர்மாலை அணிவித்து வைத்த திரு.காந்தன் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொண்டு’ என்று கூறுதல் தவிர்த்தல் வேண்டும்.

ஏனெனில் மாவீரர்களின் நனைவுநிகழ்வு அல்லது எமது எழுச்சி நிகழ்வுகளில் நாம் பங்கேற்பது, அதில் நிகழ்வு செய்தல் என்பது மாவீரர்கள் செய்த பெருந்தியாகத்தின், அற்பணிப்புக்களின் நிமித்தம் கிடைத்த வாய்ப்பு ஆகும் இவை சார்ந்த நிகழ்வுகளில் பங்கெடுப்பது நம் நாட்டிற்கும், தேசத்திற்கும் செய்ய வேண்டிய கடப்பாடு. இது ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உரியது அதைவிட்டு நிறைவில் நன்றி கூறுவது தவிர்க்கப்பட வேண்டும்.

### சேர்க்கப்படவேண்டிவை

வீரவணக்கம், அகவணக்கம், மலர் வணக்கம், ஈகைச்சுடர், வீரவணக்கவுரை, வீரச்சாவுவீர வணக்கக்கூட்டம்.

### முக்கியவிடயம்.

தேசியக்கொடியை ஏற்றப்படும்போது அனைவரும் எழுந்து வணக்கம் செலுத்த வேண்டும்.

தேசியக்கொடியிலுள்ள புலி கொடிக்கம்பத்தைப் பார்த்தவாறு பறக்கவிடக் கூடாது. புலியின் பார்வை கொடிக்கம்பத்துக்கு எதிர்ப்புமாக கொடி பறக்கும் பக்கமாக இருக்கும் வகையில் பறக்கப்பட வேண்டும்.

தேசியக்கொடியை ஏற்றுபவர் கொடி வணக்கம் செலுத்த அணிவகுத்து நிற்கும் மக்களுக்கும் கொடிக்கம்பத்துக்கும் இடையில் நின்று கொடியை ஏற்றுதல் கூடாது.

மாலை 6.00 மணிக்குப் பின்னர் எந்த நிகழ்விற்கும் தேசியக்கொடிஏற்றுதல் தவிர்க்கப்பட வேண்டும் இரவில் நிகழ்வுகள் தொடர்ந்து நடை பெறுமானால் நிகழ்வு முடிய இறக்குதல் வேண்டும். இரவில் தேசியக்கொடிக்கு வெளிச்சம் இருத்தல்வேண்டும்.

### போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்.

எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் தேசியநாட்களில் மாவீரர் நாள் மிக முக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது, தமிழீழத்தின் விடிவுக்காகவும், உயர்வுக்காகவும், உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து, இந்த மண்ணிற்கே உரமாகி விட்டவர்களினதும் எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும். உங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளும், எமது சகபோராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சியதாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகும். புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்படவேண்டியவையாகும்.

இம் மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழி நடத்தும் உந்து சக்தியாக என்றும் இருக்கும் மாவீரர்களினது இத்தகைய கூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்து விடாது எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக் குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும்.

இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்து வார்த்தமாகவும், உணர்வு பூர்வமாகவும்நிலை நாட்டு வதற்காக எமது தமிழீழ மக்கள் அனைவரின தும் மனமுவந்த, ஒருங்கிணைந்த பங்களிப்புகளை வேண்டி நிற்கின்றோம்.

# ஜனாதிபதி முறைமையும் தமிழர்களும்

பாகம் 164

இங்கு, முதற்கண் சமீபத்தில் பாரிய மண்சரிவினால் பாதிக்கப்படடுத் தமது இன்னுயிர்களை இழந்த கொஸ்லாந்தை, மீரியப்பொத்தைக் கிராமமக்களின் ஆத்மசாந்திக்காகப்பிரார்த்திப்பதோடு அவர்களைச் சார்ந்த குடும்பங்கள் உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை அலசுவாரம் வாசகர்கள் சார்பாகத் தெரிவிக்கிறேன்.

மிக விரைவில் இலங்கைக்கான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கான தேர்தல் இரண்டு வருடங்கள் முன்கூட்டியே நடைபெற இருப்பதாகச் செய்திகள் அடிபடுகின்றன. அதிலும் இரண்டுமுறை பதவி வகித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ போட்டியிடக்கூடுமென்று ஊகங்கள் அடிபடுகின்றன. ஆரம்பத்தில் இலங்கையில் ஜனாதிபதியொருவரின் பதவிக்காலம் ஆறாறாறு ஆண்டுகளாக இரண்டு தடவைகளுக்கே மட்டுப்பட்டிருந்தது. அரசியலமைப்புச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட 18வது திருத்தத்தின்படி ஒருவர் இரண்டு தடவைகள் மட்டுமே ஜனாதிபதியாக இருக்க முடியுமென்ற நிபந்தனை நீக்கப்பட்டுள்ளது. ஆயினும் அந்தத் திருத்தம் தற்போதைய ஜனாதிபதிக்குப் பொருந்தாது, இனிவரப்போகும் ஜனாதிபதிகளுக்கே பொருந்துமென்ற வாதங்களும் உள்ளன. ஆயினும், இந்தச் சட்டச்சிக்கல்களைச் சமாளித்து பெரும்பாலும் தற்போதைய ஜனாதிபதியே போட்டியிடுவாரென்று ஊகங்கள் அடிபடுகின்றன.

அமெரிக்கா போன்ற ஜனநாயக விழுமியங்களை மதித்து நடக்கும் நாடுகளில் இத்தகைய அடிப்படை அரசியலமைப்பில் திருத்த யோசனைகள் கொண்டுவரப்பட்டுத் தனிநபர்களின் பதவிக்காலங்கள் அடிக்கடி நீடிக்கப்படுவதில்லை. அங்கு நான்கு நான்கு வருடங்களாக இரண்டு தடவைகள்தான் ஜனாதிபதிக்கான பதவிக்காலம். இலங்கையிலோ அரசியலமைப்பு கிட்டத்தட்ட வாராந்த மாதாந்த இதழ்களைப் போல பதிது புதிதாய் செய்திகளோடு மாறிக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் மக்கள் தான். அவர்களின் அரசியல் அணுகுமுறை தனிநபர் வழிபாட்டிலேயே பெரிதும் தங்கியிருப்பதால் ஒரு குறித்த காலத்திற்குப் பிறகு அடுத்த தலைமைக்குச் சந்தர்ப்பத்தை வழங்கும் பாரம் பரியமும் மனோதிடமும் மக்களுக்கு இல்லாமற் போய்விட்டது. அதைச் சந்தர்ப்பமாக்கி அரசியற் தலைமைகள் அரசியலமைப்பையே மாற்றி தாங்கள் ஆட்சியை நிறுத்தலின்றித் தொடர்கிறார்கள்.

தற்போது உள்ள நிலைமையின்படி, ஜனாதிபதி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு மீண்டும் ஜேஆர் ஜெயவர்த்தனாவின் காலத்திற்திற்கு முன்பிருந்ததுபோன்ற கூடுதல் அதிகாரம் கொண்ட பிரதமர் ஆட்சியைக் கொண்டுவரவேண்டுமென்ற கோஷம் வலுத்து வருகின்றது. இலங்கை ஜனாதிபதியும் தன்னால் அடுத்த முறை பதவியைப் பெறமுடியாது போகும் நிலைமை ஏற்பட்டால் யாராவது ஆண்டுவிட்டுப் போகட்டும் என்று கருதியோ என்னவோ! ஓர் முன் நிபந்தனையுடன் ஜனாதிபதி முறைமையை ஒழித்துக்கட்டி மீண்டும் பிரதமரின் தலைமையிலான அரசியலமைப்பைக் கொண்டு வருகிறேன் என்று வாக்களித்திருக்கிறார். நிபந்தனையோ சற்றும் பொருத்தமில்லாதது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈழக் கோரிக்கையைக் கைவிட வேண்டுமாம். இந்த உறுதி எந்த அளவு கனமானது என்பது வேறு விடயம். ஆனால் அதற்குள்ளும் தானே மீண்டும் நாட்டுக்குத் தலைமை தாங்கும் உள்நோக்கு இருப்பதை மறுக்க முடியாது. அப்படியொரு நிலைமை உருவாகுமானால் தற்போதைய ஜனாதிபதியின் தலைமைத்துவம் அவரது கட்சி ஆட்சியிலுள்ளவரை தொடர்ந்து இருக்கப் போவதை யாரும் தவிர்க்க முடியாது. ஜனாதிபதியின் இந்த வாக்குறுதியயைப் பெரிதாக எடுத்துக்கொண்டு பிபிசி சம்பந்தர் ஐயாவிடம் கேள்வி கேட்டிருக்றது. அதனைக் கேலிக்குரிய கோரிக்கையாக சம்பந்தர் ஐயா விமர்சித்திருக்கிறார்.

தமிழர் தேசியத்தின் ஈழக்கோரிக்கை இந்த அளவுக்குப்பேரம்பேசக்கூடியதாகப்போய்விடவில்லை. ஒரு தனிமனிதரின் தலைமைத்துவத்தை ஒளித்துக் கட்டுவதற்காக தமிழ் மக்களின் நெஞ்சில் நீங்கா இடம்பெற்றுவிட்ட ஆத்மதாகமாம் தமிழீழத் தாயகமென்னும் கனவை இனி வேண்டாமென்று விட்டுக்கொடுப்பதோ அரசியற் பேரமொன்றில்? விற்றுவிடுவதோ நடக்கக் கூடிய செயலா?

சிங்கள மக்களின் தலைமைத்துவத்தை மாற்றி அவர்களின் ஆட்சியதிகாரத்தை வேறு தலைமைகளிடம் கையளித்து விடுவதற்காகத் தமிழீழ தேசியம் ஏன் பேரத்திற்குள்ளாக வேண்டும்? இதனால் யாருக்கு லாபம்? ஜனாதிபதி முறைமை மாறினாற்கூட தமிழர் உரிமைகள் வழங்கப்பட்டு விடவா போகின்றது? இவற்றைப் பற்றிய எந்தச் சிந்தனைகளுமில்லாமல் ஈழக்கோரிக்கையைக் கைவிடுகிறோம் ஜனாதிபதி முறைமை நீக்குங்கள் என்று தமிழர்கள் சரணடைந்து விடவா போகிறார்கள் ? ஆரம்பத்திலிருந்தே தமிழுரிமைகள் - சுயநிர்ணய உரிமை உட்பட- முழுமையாகத் தரப்பட்டால் கூட ஈழக்கோரிக்கையை இலகுவில் கைவிடத் தயங்கியவர்கள் நாம். தற்போது தம்மினத்தை உதறித்தள்ளிவிட்டுச் சிங்கள மக்களின் நன்மைக்காக, ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டால் ஈழக்கோரிக்கையைக் கைவிடுகிறோமென்று தமிழர்கள் இறங்கி வருவார்கள் என்று ஜனாதிபதி நினைக்கிறாரா? ஒன்றும் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் புரிகிறது. அவ்வளவு இளக்காரம் நாட்டின் தலைமையிடத்தில் தமிழர் தொடர்பாக இருக்கிறது. அத்தோடு தெளிவற்ற சிந்தனையும் நிறையவேயிருக்கிறது. அது இலங்கை மக்களின் துரதிஸ்டம்.

உண்மையில் இந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமைபற்றியோ அல்லது ‘சமமானவர்களுக்குள் முதலானவர் (பஸ்ட் அமங் ஈக்குவல்ஸ்)’ என்று பொதுவாக அரசியல் மொழியில் கூறப்படும் பிரதமர் பற்றியோ தமிழ் மக்கள் கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லை. நமக்கு மிகவும் பரிச்சயமான மோதகமும் கொழுக்கட்டையும் போலத் தான் இவ்விரு பதவிகளும் இருக்கும். நாம் தனி நபரின் நிறைவேற்று அதிகாரமில்லாத முழுமையான பாராளுமன்ற ஜனநாயகத்தையும் அதன் பாதிப்புகளையும் அறியாதவர்களல்ல. இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு எண்பது வீத பெரும்பான்மையின் பிடியிற் சிக்கி இந்த இரண்டு ஆட்சி முறைமைகளாலும் எமது உரிமைகள் அனைத்தையும் இழந்திருக்கிறோம். ஆட்சியில் எவ்வித பங்களிப்பும் எமக்கு இன்றுவரை கிடைக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் அரசியல் ரீதியாக ஜனாதிபதி முறைமையின் கீழடைந்த பாதிப்புகளோடு ஒப்பிடுகையில் பிரதமர் முறைமையின் கீழடைந்த பாதிப்புகளே மிகவும் அதிகமானவை. எமது வாக்குரிமையே பறிக்கப்பட்டது. தனிச்சிங்களச் சட்டம் எம்மவரின் வேலை வாய்ப்புகளையும், இருந்த உத்தியோகங்களையும், பதவியுயர்வுகளையும் பறித்தெடுத்தது. தரப்படுத்தலால் தமிழ் மாணவ சமுதாயத்தின் கல்வியே பறிபோனது. பலரை நாட்டைவிட்டே துரத்தியடித்தது. அப்படியிருக்க மீண்டும் அந்த முறைமைக்காக வக்கலாத்து வாங்கி நாம் என்ன பயனைப் பெறப் போகிறோம்?

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

ஒரு நாட்டின் பிரதமரும் சர்வாதிகாரியாக முடியும், மாறாக, ஜனாதிபதியின் அதிகாரங்களும் மட்டுப்படுத்தப்பட முடியும். எல்லாமே நாட்டு மக்கள் எடுக்கும்? முடிவில் தான் தங்கியுள்ளது. எண்பது வீத பெரும்பான்மையைக் கொண்ட சிங்களமக்கள் நினைத்தால் ஆனையைப்பூனையாக்கலாம் பூனையை ஆனையாக்கலாம். அவர்களை நம்பி அவர்களுக்குப் பின்னாற்போய் ஏதோ நமக்கும் ஏதாவது கிடைத்து விடுமென்று நப்பாசைப் படுவதில் எதுவித அர்த்தமுமில்லை. சிறிமாவின் காலத்தில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்தினால் அரசியலமைப்பை மாற்றியபோது இதே தமிழ்த் தேசிய அமைப்பின் பிதாமகர் தந்த செல்வா இனித் தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென்று கையறு நிலையில் விரக்தியுடன் கூறினார். ஆனால், தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் அந்தக் கையறு நிலைக்குப் போய்ப் பார்த்தாலென்ன என்று யோசிக்கிறது. அதாவது, ஜனாதிபதி முறையை ஒளித்துவிட்டு மீண்டும் பிரதமர் முறைக்குப் போகும் முயற்சிகளுக்கு ஆதரவளித்தாலென்ன என்று யோசிப்பது போலத் தெரிகின்றது.

பாராளுமன்றத்தில் எமது பிரதிநிதித்துவத்தால் எதையும் சாதிக்க முடியாத நிலையில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட தனிநபரான ஜனாதிபதியை எமது கணிசமான வாக்குகளால் ஆதரிப்பதன்மூலம் ஒரு சிறிதளவேனும் நன்மைகளைப்பெற்றுக்கொள்ள முடியும். அத்தனி நபரின் பிரத்தியேக கவனிப்பையும், பராமரிப்பையும் சிறுபான்மையினர் பெறுவது பிரதமர் முறைமையிலும் இலகுவானதாகும். ஜனநாயகமென்ற போர்வையின்கீழ் பாராளுமன்றத்தில் இனவாதிகளால் நிறைவேற்றப்படும் தமிழர்களுக்கெதிரான பாரபட்சமான சட்டங்கள் அனைத்தையும் தனது நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் தடுக்கவோ ஒத்திவைக்கவோ முழு நாட்டினதும் மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதிக்கு போதிய அதிகாரமுண்டு. இந்தநிலை அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்ட பிரதமருக்கு இல்லை.

ஒரு தொகுதியின் மக்களால் தெரிவு செய்யப்படும் பாராளுமன்றப் பிரதிநிதியான பிரதமர் ஆளுங் கட்சியாலேயே நாட்டின் தலைமையை ஏற்கத் தெரிவுசெய்யப்படுவார். ஜனாதிபதியோ சிறு பான்மையினருட்பட்ட முழு நாட்டினதும் மக்களால் தெரிவாகிறார். அதனால் அவருக்குத் தன்னைத் தெரிவு செய்யத் தம் வாக்குகளையளித்த சிறுபான்மையினரது நலன்களிலும் அக்கறையிருக்கும். அதற்கான அதிகாரமுமிருக்கும். பிரதமர் பதவிக்கோ அப்படியான கடப்பாடுகள் எதுவுமில்லை. அதிகாரமுமில்லை. பாராளுமன்றத்திடம் எல்லாவித பொறுப்புக்களையும் ஒப்புக் கொடுத்துவிட்டு இங்கு முன்பே சொன்னது போல சமமானவர்களுள் முதலானவராய்த் தானுண்டு தன்பாடுண்டு என்று இருந்துவிடலாம்.

### சிங்கள மக்களின் தலைமைத்துவத்தை மாற்றி அவர்களின் ஆட்சியதிகாரத்தை வேறு தலைமைகளிடம் கையளித்து விடுவதற்காகத் தமிழீழ தேசியம் ஏன் பேரத்திற்குள்ளாக வேண்டும் ? இதனால் யாருக்கு லாபம் ?

இதனைத் தமிழ் மக்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுவதா? அல்லது அடுப்புக்குள் இருந்து மீண்டும் சட்டிக்குள் போவதா என்பதுதான் இந்த விடயத்தில் எமது நிலையாயினும் உள்ளதில் எது சிறந்தது என்பதை அவ்வளவு இலகுவில் தீர்மானித்துவிட முடியாது. தற்போதைய அரசியல் தலைமை சர்வாதிகாரத்தையும், எம் மீதான இராணுவ அடக்கு முறையையும் தனது அரசியல் அணுகுமுறைகளாகக் கொண்டிருந்தாலும் காலப்போக்கில் இந்த நிலை மாற்றமடைந்து எமது முழு ஆதரவுடன் தெரிவாகும் ஜனாதிபதியொருவரால் எமது அரசியல் பிரதிநிதித்துவம் வலுவடையக் கூடிய நிலைமை ஏற்பட இடமுண்டு. இந்த நிலை பிரதமர் முறைமையில் ஏற்படுமா என்பது சந்தேகமே. நாம் ஒரு தேசிய இனத்தின் கட்சியாக இருந்து கொண்டு பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சியின் நட்பையும், நிறைவேற்று ஜனாதிபதியின் பிரத்தியேக கவனிப்பையும் ஒரு சேரப் பெற்றுக் கொள்ளக் கூடிய இருவழி நன்மையைச் சீரழித்து விட்டு, பிரதமர் முறைமைக்குத் தோள் கொடுப்பதன் மூலம் ஆளுங்கட்சியுடன் சேர்ந்தியங்கலாமென்னும் ஒருவழி நோக்கை முயற்சிப்பது சரிதானா என்பதை ஆழ்ந்து சிந்திப்பது முக்கியமானதாகும். இங்கே முன்வைக்கப்பட்ட வாதத்திற்கு மாற்றுச் சிந்தகைள் நிறைய உண்டு. தமிழ்மக்கள் அவற்றைச் சேர்ந்து சிந்தித்து முடிவெடுப்பார்களாக.

தொடருவம்...

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4310
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP



creative artwork from concept to design

# ‘பயங்கரவாதத்திற்கு எதிரான போர்’:

## செய்தி வெளியிடுவதில் எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள்

INTERNATIONAL ASSOCIATION OF TAMIL JOURNALISTS
சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம்

International Association of Tamil Journalists

**ANNUAL CONFERENCE 2014**

The media in post war Sri Lanka :

*Supporting democratisation in the era of the ‘War on Terrorism’*

## சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் மாநாடு

ஒக்ரோபர் பதினோராம் திகதி லண்டனில் சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாடு இலங்கைத் தீவில் போருக்கு பின்னரான காலத்தில் ஜன நாயகப்படுத்தல் முயற்சிகளில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பில் ஆராய்வதற்கான ஒரு களமாக அமைந்திருந்தது. இலங்கையிலிருந்தும், ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவிலிருந்தும் வந்திருந்த கல்வியாளர்கள், ஊடகவியலாளர்கள், மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள் இதில் கருத்துரை வழங்கியதுடன், கலந்துகொண்டவர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்கள்.

மேற்படி மாநாட்டின் காலை அமர்வுகள் பற்றிய விபரங்களை கடந்த ***ஒரு பேப்பர்*** இல் பிரசுரித்திருந்தோம். மாலை அமர்வு பிற்பகல் இரண்டு மணிக்கு ஊடகவியலாளர் தினேஸ்குமார் அவர்களது நெறிப்படுத்துகையில் நடைபெற்றது.

முன்னதாக காலை அமர்வின் கேள்வி நேரத்தின்போது, சபையிலிருந்து வந்த கேள்வியொன்றுக்குப் பதிலளித்த கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்கள் பதின்மூன்றாம் திருத்தச் சட்டமூலம் பற்றி குறிப்பிட்ட கருத்து கவனத்திற்குரியதாக அமைந்திருந்தது. பதின்மூன்றாம் திருத்தச்சட்ட மூலமான அதிகாரப் பகிர்வு பொருத்தமற்றது என்றும் அது போதுமானதானதாக இல்லை என்றும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

### உருணே ஒற்றசன்

மாலை அமர்வின் சிறப்புரையினை Oslo and Akershus University College of Applied Science என்ற உயர் கல்வி நிறுவனத்தில் ஊடகத்துறை பேராசியராக பணியாற்றும் உருணே ஒற்றசன் அவர்கள் நிகழ்த்தினார். சிறிலங்காவில் லசந்த விக்கிரமதுங்க உட்பட பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை பற்றிக் குறிப்பிட்ட ஒற்றசன் அவர்கள் சிறலங்கா ஆட்சியாளர்களினதும் இராணுவத்தினதும் கொடுமைகள் அதிர்ச்சியளிப்பதாக இருந்தன எனத் தெரிவித்தார். இலங்கைத்தீவில் எவ்விதமான சட்டரீதியான பின் விளைவுகளுகளும் ஏற்படாது என்ற உறுதிப்பாட்டில் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டார். ஊடகவியலாளர்களது குடும்ப அங்கத்தவர்கள் மீது தாக்குதல் நடாத்தப்படுவதும், அவர்கள் அச்சுறுத்தப்பட்டு வருவது பற்றியும் அவர் தனதுரையில் விபரித்தார். இஸ்லாமிய இராட்சியம் (ISIS) என்ற தீவிரவாத அமைப்பு தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஊடகவியலாளர்கள் செயற்படுவதற்கு விதித்துள்ள வரையறைகள் பற்றிய விபரங்களையும் அவர் வெளியிட்டார்.

### யூட் லால் பெர்னான்டோ

ஒற்றசனைத் தொடர்ந்து அயர்லாந்து றினிற்றி கல்லூரியில் உதவிப் பேராசியராகப் பணியாற்றும் கலாநிதி யூட் லால் பெர்னான்டோ உரையாற்றினார். டப்ளினிலும், ஜெர்மனி பிறேமன் நகரிலும் நடாத்தப்பட்ட நிரந்தர மக்கள் தீர்ப்பாயங்களை ஏற்பாடு செய்வதில் யூட்லால் பெர்னான்டோ பங்காற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜோர்ஜ் டப்ள்யூ புஸ் அவர்களது “நீங்கள் எங்களுடன் இருங்கள் அவ்வாறு இல்லாவிடில் பயங்கரவாதிகளின் பக்கம் இருக்கிறீரகள்” என்ற நிலைப்பாட்டையே சிறிலங்கா அரசாங்கமும் எடுத்திருந்ததாகவும் அரசாங்கத்தையும் அதன் போரையும் எதிர்த்தவர்கள் இந்த அடிப்படையிலேயே கொல்லப்பட்டதாகவும் குறிப்பிட்ட யூட் லால் இந்த வகையிலேயே ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையும் பார்க்கவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

கேடிஸ்தான் பிரதேசமான கோபேன் நிலவரம் பற்றிக் கூறிய யூட் லால், மிகச் சாதாரண ஆயுதங்களைக் கொண்டிருக்கும் கேடிஸ் போராளிகள் பாரிய ஆயுதங்களைக் கொண்டிருக்கும் இஸ்லாமிய இராட்சியம் படையினரை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகவும், இதனை தடுத்து நிறுத்தக் கூடியவர்கள் யார் எனக் கேள்வி எழுப்பினார். தமிழர்களின் தேசியத் தலைமையை குறிவைத்து அழித்தவர்களே இன்றைக்கு கேடிஸ் மக்களின் தலைமையினை அழிக்க முனைகிறார்கள் என அவர் குற்றம் சாட்டினார். சிங்கள பௌத்த அடிப்படைவாதக் கொள்கையை கொண்டிருக்கும் இராஜபக்ச அரசாங்கத்திற்கும், இஸ்லாமிய இராட்சியம் அமைப்பினருக்கும் இடையில் வேறுபாடுகளைக் காணமுடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

### பாரதி இராஜநாயகம்

ஞாயிறு தினக்குரல் பத்திரிகையின் முதன்மை ஆசிரியர் பாரதி இராஜநாயகம் இம்மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்த போதிலும் அவரது விசா மறுக்கப்பட்டிருந்ததால் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை. இருப்பினும் அவரது உரை மாநாட்டில் வாசிக்கப்பட்டது. தாயகத்தில் தமிழ் ஊடகத்துறை எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றியதாக அமைந்த அவரது உரையின் முழுமையும் கடந்த ***ஒரு பேப்பர்*** ல் பிரசுரிக்கப்பட்டது.

### திருமுருகன் காந்தி

மே பதினேழு இயக்கத்தின் இணைப்பாளர் திருமுருகன் காந்தி அவர்களது உரை காணொளி வாயிலாக ஒளிபரப்பப்பட்டது. திருமுருகன் தனதுரையில் Econamic and Political Weekly, The Hindu, காலச்சுவடு போன்ற ஊடகங்கள் இந்திய அதிகாரவர்க்கத்தை நலனை முன்னிறுத்திச்செயற்படுவதனைவெளிப்படுத்தினார். குறிப்பாகதமிழகமீனவர்கள்பிரச்சனையைஇவை கையாளும் விதம் பற்றியும் அவர் விளக்கினார்.

### விேனாதினி கணபதிப்பிள்ளை

லண்டன் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவராகவும், விரிவுரையாளராகவும் உள்ள வினோதினி தமிழ் கார்டியன் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். இறுதிக் கட்டப் போரை ‘சாட்சியமற்ற போர்’ (war without witness) என விபரிப்பது தொடர்பில் உள்ள அரசியல் பற்றிய ஆய்வினை வெளிப்படுத்தவதாக அவரது உரை அமைந்திருந்தது. வெளிநாட்டு உதவி நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் போன்றோர் போர் நடந்த பகுதியில் இருக்கவில்லை என்பதை வைத்தே இவ்வாறு கூறப்படுவதாகவும், வன்னியில் சாட்சியமாகவிருந்த உள்ளூர் உதவி நிறுவனங்களைச் சேர்ந்த தொண்டர்களினதும், ஊடகவியலாளரகளினதும் சாட்சியங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை, அவர்களது பின்புலம் பற்றி ஆராயாமலே அவர்கள் தகுதியான சாட்சியங்கள் இல்லை என நிராகரிக்கப்படுகிறார்கள் எனக் குறிப்பிட்டார். செப்ரெம்பர் 2008ம் ஆண்டிலிருந்து ஏப்பிரல் 2009ம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் நெற் இணையத்தளம் போர் தொடர்பாக 300 செய்தியறிக்கைகளை வெளியிட்டிருந்தது. ஆயினும் இந்தப் போர் சாட்சியமற்ற போர் என அழைக்கப்படுகிறது எனக்குறிப்பிட்டார்.

### நிர்மானுசன் பாலசுந்தரம்

சுயாதீன ஊடகவியலாளரும் மனிதவுரிமைச் செயற்பாட்டாளருமான நிர்மானுசன் பாலசுந்தரம் போர் தீவிரமடைந்த காலகட்டத்தில் 2009 இல் நாட்டைவிட்டு தான் வெளியேறியதாகத் தெரிவித்து தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். போர் இறுதிக் கட்டத்தை அடைவதற்கு முன்பதாகவே தமிழ் ஊடகவியலாளர்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட அவர் எல்லா இன ஊடகவியலாளர்கள் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டது என்பதனை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டார். இலங்கைத் தீவில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களில் 86 விழுக்காட்டினர் தமிழ் ஊடகவியலாளர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

> “2009 இல் தமிழ் ஊடகங்களின் நிலையை காசா தாக்குதல்கள், மற்றும் சிரியாவின் கிளர்ச்சியாளர்கள் அசாத் அரசாங்கத்தின் கொடுமைகள் பற்றி வெளியிடும் செய்திகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். 2009 இல் வன்னியிலிருந்து செய்தி வெளியிட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் நம்பகத்தன்மையுடையவர்களாக சர்வதேச ஊடகங்களால் பார்க்கப்படவில்லை”.

### மரியோ அருள்தாஸ்

இறுதிப் பேச்சாளராக தமிழ் கார்டியன் பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவரும் இளம் செயற்பாட்டாளருமான மரியோ அருள்தாஸ் போர்ச்சூழலில் ஊடகங்களின் நிலை வேறுபட்டுக் காணப்படுவதாகவும், பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற அணுகுமுறை செய்தி வெளியிடுவதனை எவ்வாறு பாதித்து என்பது பற்றியும் உரையாற்றினார்.

2009 இல் தமிழ் ஊடகங்களின் நிலையை காசா தாக்குதல்கள், மற்றும் சிரியாவின் கிளர்ச்சியாளர்கள் அசாத் அரசாங்கத்தின் கொடுமைகள் பற்றி வெளியிடும் செய்திகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். 2009 இல் வன்னியிலிருந்து செய்தி வெளியிட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் நம்பகத்தன்மையுடையவர்களாக சர்வதேச ஊடகங்களால் பாரக்கப்படவில்லை. அவர்களது செய்திகளை உறுதி செய்ய முடியவில்லை என்றே குறிப்பிட்டார்கள். முன்னர் புலிகளின் ஆதரவு ஊடகங்கள் என அழைக்கப்பட்ட தமிழ் ஊடகங்கள் இன்று தமிழ் ஊடகங்கள் என அழைக்கப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இம்மாநாட்டில் இடம் பெற்ற உரைகள் அடங்கிய காணொளிகளை ***ஒரு பேப்பர்*** இணையதளத்தில் http://www.orupaper.com/the-media-in-post-war-sri-lanka/ இணைப்பில் பார்வையிடலாம்)

Kayaal IT Solution Ltd
CCTV Camera Installation & Maintenance



Special Offers !!

- PC, LAPTOP MAINTAINECE, SHOP TILL POS SYSTEM,SHOP TILL SOFTWARE INSTALLMENT
- HOME SECURITY ALARM,SHOPS ALARM ALL WIRELESS THIS SYSTEM WORKING IN GSM,PSTN WE CAN CONNECT 5 MOBILE NUMBERS.
- CCTV SYSTEM INSTALLATION INCLUDING ONLINE SETUP ALL SPEACIAL PRICES IF ALARM ,CCTV INSTALL, WE WILL GIVE GOOD DEAL
- ALL SERVICES IN UK.[OVER 15MILES WE WILL CHARGES FOR MILEGE FOR 50 PENCE

- SPECIAL OFFER HOME SECURITY ALARM SYSTEM 3-ROOM SENSOR[PIR] 3- DOOR & WINDOW SENSOR -3,1- PANIC, 3-KEY MAIN SYSTEM WORK GSM/PSTN BOTH [TOUCH PANNEL ], SIREN6-NUMERS AUTOMATIC DIAL INCLUDING VAT £ 300,NO CONTRACT

**Please Contact : Jothy** REG COMPANY :8193915 FROM AUGUST 2012, FRIENDLY AND QUALIFIED ENGINEER Paying Method : By PayPal or Cash


*Electrical & Electronic Engineer, Beng Hons*
*Microsoft certified for MCTC, MCP 2.0 & Guilds*
*Certified for PAT test*

83, Roberts Bridge Road,
Carshalton,
SM5 1AH

Tel : 07859892657 (Jothy), 02034416364
E-Mail : kayaalitsolutions@hotmail.com
Web : www.kayaalitsolutionlimited.com

# நாம் வாழும் உலகம்






**மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

நாம் வாழும் பூமியும் மற்றைய கோள்களைப் போல் பந்து போன்ற வடிவுடைய ஒரு கோளம் தான். ஆனால் அதுதட்டையானதுஎன்றஉணர்வு தானே எமக்கு ஏற்படுகிறது. அதற்கான காரணம் அதன் பாரிய உருவமான 25 ஆயிரம் மைல் சுற்றளவுடைய கோள அமைப்புத்தான். எடுத்துக்காட்டிற்கு 360 அங்குல சுற்றளவுள்ள அதாவது 10 அடி விட்டம் கொண்ட ஒரு வட்டத் தைத் தரையில் வரையுங்கள். சுற்றளவின் ஒவ் வொரு அங்குல நீளத்திற்கும் ஒரு பாகை வளைவு ஏற்படுவதை அவதானிப்பீர்கள். அப்படிப் பார்க் கும் போது 130 மில்லியன் அடி சுற்றளவுடைய பூமியின் ஒரு பாகை வளைவுக்கு கிட்டத்தட்ட மூன்று இலட்சம் அடிகள் தேவைப் படுகிறது. அதை நேர் கோட்டிலிருந்து வேறுபடுத்துமள விற்கு எம் புலன்களுக்கான ஆற்றலின் கூர்மை போதாது. ஆகையால் எம் புலன்பளைப் பொறுத்த மட்டில் பூமி எப்பவுமே தட்டைதான்.

இவ் ஆழி சூழ் உலகு 72 சத வீதம் நீரால் நிரம்பியுள்ளது. எம்மைச் சூழ்ந்துள்ள ஆழிகள் ஓரிரு இடங்களில் ஏழு மைல் ஆழம் கொண் டவை. ஆனாலும் அவற்றின் சராசரி ஆழம் ஒன் றரை மைலுக்கு சற்றுக் கூடுதலாய் இருக்கும். அது மட்டுமல்ல, மலைகள் பள்ளத்தாக்குகள் அற்ற ஒரு சீரான உருண்டைக் கோளமாகப் பூமி இருந்திருந்தால் இந்த ஆழிகளின் நீர் பூமியை ஒட்டு மொத்தமாக ஒன்றரை மைல் ஆழத் திற்கு மூழ்கடிக்கப் போதுமானது. இதனால் பூமியின் எடையின் பெரும்பகுதி நீராகத்தான் இருக்கும் என்று தப்புக் கணக்குப் போடக் கூடாது. பூமியின் மொத்த எடையின் .02 சதவீதம் தான் நீர். அதாவது அதன் எடையின் நாலாயி ரத்து நானூற்றில் ஒரு பகுதிதான் மொத்த நீரின் எடை.

25,000 மைல் சுற்றளவு கொண்ட கோளம் என்பதால் அதன் பரப்பளவு பற்றிய தகவல் களே எமக்கு முக்கியமானவை. பாரிய நிலப் பரப்பைக் கொண்டுள்ளதாகவும் இமயமலை, கங்கை ஆகியவற்றுடன் எம் செந்தமிழ் நாட்டை யும் உள்ளடக்கிய புனித நாடாக எம் உள்ளங்க ளில் பதிவாகியுள்ள இந்திய நாடு 12 இலட்சம் சதுரமைல் பரப்பளவு கொண்டது. உலகின் மொத்தப் பரப்பளவு 1970 இலட்சம் சதுரமைல். அதாவது இந்தியாபோல் 164 மடங்கு பெரியது. அதில் பசுபிக் சமுத்திரம் மட்டும் இந்தியா போல் 53 மடங்கு பரப்பளவு கொண்டது. அத்தி லாந்திக் சமுத்திரம் 34 மடங்கு, இந்து சமுத்திரம் 23 மடங்கு என்று மூன்று சமுத்திரங்களின் மொத் தப் பரப்பளவு இந்தியபோல் 110 மடங்காகிறது. அதாவது அவை மூன்றுமே உலகின் மூன்றில் இரண்டு பகுதியை உள்ளடக்குகின்றன.

நாடுகளின் பரப்பளவைப் பொறுத்தமட்டில் இந்தியா ஏழாவது பெரிய நாடு. முதலாவதாக ருஷ்சியா, இது இந்தியாபோல் ஐந்தரை மடங்கு. அடுத்து வரும் ஐந்து நாடுகளில் கனடா, சீனா, அமெரிக்கா (யுஎஸ்ஏ) ஆகியவை மூன்று மடங்கும் பிரேசிலும் அவுஸ்திரேலியாவும் இரண் டரை மடங்கும் பெரியவை. இந்த ஏழு நாடுக ளுடன் உலகின் பத்தில் ஒரு பங்கு பரப்பளவான 54 இலட்சம் சதுரமைல் கொண்ட பனி வன ாந்தரமான அன்ராற்ரிக்காவையும் சேர்த்தால் அது 300 இலட்சத்தை நெருங்விடும். இது மொத்த நிலப் பரப்பான 575 இலட்சம் சதுர மைலின் அரைவாசியை விடக் கூடியது.

பூமியின் முக்கால் பங்கு சமுத்திரங்கள் என்ற தும் அவற்றின் தரை ஏதோ சமமான தரையாக இருக்குமென்று நாம் எண்ணக் கூடாது. அவற்றின் தரையை நாம் அடைவது இயலாத செயலாக இருந்தாலும் ஆழி வல்லுனர்கள் ஒலி அலை சாதனங்கள் மூலம் தந்துள்ள வரை படங்களை நோக்குவோமானால் பூமியின் மேற் பரப்பில் உள்ளதுபோல் ஆழித் தரைகளிலி ருந்து பல உயர்ந்த மலைகள் எழுந்திருப்பதை அவதானிக்கலாம். பல மலைகளுக்கு பெய ரும் இடப்பட்டுள்ளது.

330 மில்லியன் கன மைல் நீர் கொண்ட இவ் வுலகின் 97 சதவீத நீரை ஆழிகள் தம்முள் உவர் நீராக வைத்துக்கொண்டு மிகுதி 3 சதவீதத் தையே வெளியே விட்டுள்ளன. அந்த 3 சதவீதத் தில் 2 சதவீதம் பனிக் கட்டியாகவும் நிலத்தின் அடி நீராகவும் போக ஒரு சதவீதமான நீரே நன் நீராகத் தரையில் எஞ்சி எமது அத்தியாவசிய தேவைகளுக்குப் பயன் படுகிறது. பனிக்கட்டி யாக உறைந்துள்ள நீரின் பெரும்பகுதி அதி வரண்ட பகுதியான அன்ராட்ரிக்காக் கண்டத்துள் ளேயே உறைந்துள்ளது. உலகின் நன்நீரின் மூன்றிலொரு பகுதி இங்குதான் உள்ளது. ஒரு மைல் ஆழத்திற்கு மேல் உறைந்து பனிக் கட்டி யாக உள்ளது. சில இடங்களில் 3 மைல் ஆழம் வரை உறைந்த பனிக் கட்டியும் உண்டு. அவ் வளவு பனிக் கட்டியும் உருகினால் உலகத்தின் கடல் மட்டம் 200 அடி வரை உயரும். இவ்வளவு நீர் கொண்ட பகுதிக்கு வாய் கூசாது அதி வரண்ட என்ற அடைமொழியை எப்படிச் சொல் வது என்று யோசிக்காதீர்கள். அங்கு எப்பவுமே சுளியத்திற்கு கீழ் நிலவும் வெப்ப நிலையில் உள்ள பனிக் கட்டியை கற்பாறையுடன் ஒப்பிட லாமே அன்றி நீர் என்று சொல்ல முடியாது.

நிலம், நீர் பற்றிப் பேசும் நாங்கள் வளி மண்டலம் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது. வளிமண்டலத்தின் ஐந்தில் ஒரு பங்கான உயிர் வளி (oxygen) இல்லாமல் நாம் எத்தனை மணித் துளிகள் உயிர் வாழமுடியும் என்பதை நாம் எல்லாம் அறிவோம். தரையிலிருந்து நானூற்றி நாற்பது மைல்கள் உயரம் வரை வியாபித்து உலகம் முழுவதையும் ஒரு உருவமில்லாத இராட்சதப் போர்வையாக மூடியிருப்பதுதான் இந்த வளிமண்டலம். இதன் பண்புகளான நிற மின்மை, மணமின்மை, சுவையின்மை ஆகி யவை காரணமாக நாம் அப்படி ஒன்று இருப் பதையே உணருவதில்லை.

வளி மண்டத்தின் 99 சத வீதம், உயிர்வளியும் நைதரசனும் (nitrogen). எந்த ஒழுங்கில் என்றால் 21 சதவீதம் உயிர்வளி. மிகுதி 78. சதவீதம் நைத ரசன். இவை இரண்டுடன் 0.93 சதவீதமான ஆர்கோன் வளிமமும் சேர்கிறது. இவை மூன்றையும் விட மிகுதியாக உள்ள 0.07 சத வீதம் தான் மற்றைய வாயுக்கள் எல்லாம். இதில் 0.03 சதவீதம் கரியமில வாயு. இதன் அளவு கூடு வது பற்றியும் அதன் விளைவாய் பூகோள வெப்ப ஏற்றம் உயர்வது பற்றியும் பல செய்திகள் வரு வதை நாம் எல்லாம் அறிவோம்.

ஏழரை மைல்கள் உயரம் வரையுள்ளதும் அமுக்கம் கூடியதுமான வளிமண்டலத்தின் முதல் அடுக்கில்தான் மொத்த வளிமங்களின் 75 சதவீதமானவை அடங்குகின்றன. இது வெப்ப வளிமண்டலம் (troposphere) என்று அழைக்கப் படுகிறது. அடுத்த அடுக்கான அடுக்கு மண்ட லத்துள் (stratosphere) மேலும் 19 சதவீதமான வளிமங்கள் அடங்குகின்றன இந்த அடுக்கின் அடித்தளத்தில் ஓசோன் வளிமங்கள் அடங்கிய ஓசோன் அடுக்கு என்னும் மெல்லிய உப அடுக்கு உள்ளது. இது உயிர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய புறஊதாக் கதிர்களை உள் நுழையவிடாது தவிர்க்கிறது. இப்போது நாம் உற்பத்தியாக்கிய சிஎவ்சீஸ் (chloroflurocarbons) என்னும் வளிமங்கள் ஓசோனை நீக்கி ஓட்டை கள் ஏற்படுத்திக்கொண்டிருகின்றன. பூகோள வெப்ப ஏற்றம் பற்றிய செய்திக்கு அடுத்ததாக ஓசோன் ஓடடை பற்றிய செய்தியும் அடி படுகிறது.

இந்த இரண்டு அடுக்குகளும் போக மிகுதி யாக உள்ள நாநூற்றிற்கு மேற்பட்ட மைல்கள் உயரம்கொண்ட மூன்று அடுக்குகளினுள்ளும் ஆக 6 சதவீதமான வளிமங்களே அடங்கி உள் ளன. இருந்தும் இந்த அடுக்குகளும் புறஊதாக் கதிர்களை உள் நுழையவிடாது தவிர்த்தல் எம்மை நோக்கி வரும் எரி கற்களின் வேகத்தைக் குறைத்தல் போன்ற பணிகளைச் செய்கின்றன.

## கார்த்திகை ஒளிர்கிறது....!

கொர்த்திகை ஒளிர்கிறது
மலரும் மலர்கிறது
கண்ணீர் அரும்பிட
கண்களில் படர்ந்தவர்
நினைவுகள் மனதில் பெருகிட..

மரணம் மண்டியிட
மண்ணில் வீழ்ந்தோம்
அன்னை மடிமீது
அந்நிய ஆதிக்கம்..
உயிர் மூச்சு நெருப்பாக்கி
உற்ற கடமை செய்தோம்..!

உறவுகள் எமக்கு
உலகெங்கும்..
உணர்வுகள் எமக்குள்ளும்
உயிர் வாழ
உங்கள் உரிமைக்காய்
உயிர் கொடுத்தோம்..!

உறங்கும் நாள் குறித்தோம்
எங்கள் வாழ்வுக்காய் அல்ல..
உங்கள் பிஞ்சுகள்
உரிமை கொண்டாட
தமிழன் நான்
"தனித்துவமானவன்"
எண்ணங்கள் காத்திடுங்கள்..!

இன்னும்...
உற்ற அன்னை
உள்ளுக்குள் அழுகிறாள்...
உருவில்லை என்றாலும்
எங்கள் மூச்சுகள் உணருது..!
உங்கள் மூச்சொடு
இறுதி இலட்சியம் வென்றிடுங்கள்
வீணடிக்காது விரைந்து
வீர வரலாறு
இறுதி அத்தியாயம் எழுதிடுங்கள்..!

மாவீரனை வணங்குதல்
"இலட்சியம் காத்தல்"
அர்த்தப்படுத்தி
உயிர் விதைகள் ஊன்றிய இடத்தில்
சத்தியம் செய்யுங்கள்..!
உரிமைகள் வென்று
விடுதலை வாங்கி
உதாரணமாகி நில்லுங்கள்..!

எமக்காய்..
கார்த்திகை ஒளிர்கிறது
மலரும் மலர்கிறதுஞ்
கண்களில் படர்ந்தவர்
நினைவுகள் சுமக்கின்றார்
வீழ்ந்தும் வாழ்கிறோம்
நினைவுகளாய் விதை நிலங்களில்..!
என்றும் வீரராய் வாழ்வோம்
சுதந்திர தேசத்தில்..!

நெடுக்காலபோவான் (யாழில்)



# ஆரவாரம் நிறைந்த ஐப்பசி மாதம்

ஊரில் ஆரவாரம் நிறைந்த மாதங்களில் ஒன்று ஐப்பசி. குளிருடன் கூடிய மழைத் தொடர் தொடக்கம் காணும் மாதம் இது. மண்ணுக்குக் கீழே இருந்த பழைய பயிர்கள் புல்லுக்களுடைய விதைகள் தளிர்களாகக் காட்சியளிக்கும். அடர்ந்த பசும் தளிர்கள் பூமியெங்கும் நிறைந்து மண் மாதாவை பசுமைப் போர்வையால், போர்த்தியிருக்கும் காட்சி ஐப்பசி மாத அழகுகளில் ஒன்று. கமக்காரர்கள் உழவு மாடுகளும், கலப்பைகளுமாக வயல்கள், தோட்டங்கள் என்று உழவு வேலையைத் தொடங்க பெரும் வயல் பரப்புகளில் உழவு இயந்திரங்கள், இராப் பகலாக மண்ணை உழுது பதப்படுத்தும் வேலையை ஆரம்பிக்கும்.

புரட்டாதி மாத புழுதி விதைக்கு தேறிய நெல் பயிர்கள் பசளை காணும் மாதம் இது எனலாம். புரட்டாசி மாத புழுதி விதைப்பு, மழை வெள்ளம் தேங்கி அழுகிப் போனால், மீள் விதைப்புக்குரிய மாதமும் ஐப்பசி தான். ஐப்பசி தொடர் மழையை காணும் மாதம் என்பதால் புழுதி விதைப்பு சரிப்படாது. கமக்காரர்கள் வரம்புகளுக்குள், பாத்திக்குள் நீரை நிரப்பி வீல் பூட்டிய உழவு இயந்திரத்தால் சேற்றை நன்கு கலக்கி ஏற்கனவே, ஊற வைத்து முளைக்க வைத்த ஐந்தாம் நாள் முளை நெல்லை, பாத்திகளுக்குள் வீசி பின்னர், பலகையால் தரையை சமப்படுத்தி முளை முளைப்பதற்கான ஆயத்தங்களைச் செய்வார்கள். தரை சமப்படுத்தப்பட்டு நெல் விதைக்கப்படுமானால் சேற்று நீருக்குள் அது மூழ்கி மண்ணில் பதிவிடும்.

வாய்க்கால் வரம்புக்குள் முளை நெல்லோடு நிற்கின்ற நீர் அன்றிரவு அல்லது அடுத்த நாள் காலை வெளியே கடத்தப்படும். மழை தொடருமானால் முளை நெல் பழுதாகாமல் இருக்க வயல்களில் சால் வெட்டி வடிக்கின்ற நீரை கடத்துவதும் கமக்காரருக்கான முக்கியமான வேலை. இவ்வாறாக சேற்று அடிப்பு முளைக்கு உணவு தேடுகின்ற சிறகை போன்ற பறவைகளின் அட்டகாசமும் அதிகம். விதைப்பு முடிந்தாலும் இரவிரவாக வயல் வரம்புகளின் சூழ் கொளுத்தி வைத்து கமக்காரர்கள் காவல் இருப்பார்கள், சேமக்கலம், சங்கு என்று ஊதி படை, படையாக வருகின்ற சிறகைக் கூட்டங்களைக் கலைப்பார்கள். இந்த சிறகை என்கின்ற பறவை வந்து வயல்களில் அமருமானால் தன்னுடைய அகல அலகால் உறிஞ்சி முளைகளை அப்படியே உள்வாங்கி உண்டுவிடும். வெறும் தறை தான் கமக்காரருக்கு மிஞ்சும். ஆபத்தான இந்தப் பறவைக் கூட்டங்களிலிருந்து பயிர்களைக் காப்பது பெரும் வயல் பரப்பில் நெல் செய்கை செய்வோருடைய சவாலாக வன்னி நிலப்பரப்பில் இன்றும் இருந்து வருகின்றது. இவ்வாறாக விதை முளை என்று காணுகின்ற நெல் பயிர்களுக்கு அடிப் பசளை முதலான பசளைகளையும், வளர் நிலைக்குத் தேவையான யூரியா பசளைகளையும் விசுறுவதும் கூட இந்த ஐப்பசி மாதங்களில் வயல் தோறும் நடக்கின்ற அழகுக் காட்சிகள்.

நெல் விதைப்புக்கு மட்டுமல்ல, விரதங்களுக்குள்ளும் முக்கியமான விரதங்களைக் கொண்ட பக்தர்களுக்கு அவசியமான மாதமாக ஐப்பசி திகழுகின்றது. ஐப்பசி முக்கிய விரதங்கள் கௌரி நோன்பு என்பது அம்மனுக்கான விரதம், பெண்கள் நினைத்ததை அடைய இந்த விரதத்தை அடைய இந்த விரதம் அனுட்ஷ்டிப்பார்கள். 21ஆம் நாள் காப்புக் கட்டல் நினைவோடு இந்த விரதம் நிறைவுபெறும். இதற்காக பல பணியாரங்கள் பூசைச்சாமான்களோடு பெண்கள் வலம் வருகின்ற காட்சிகளும் ஐப்பசி அலங்குகளில் ஒன்று. திருகோணமலை காளி அம்பாள் கோவில் இந்த விரதத்திற்கு பெயர் பெற்றது. வடபகுதியிலிருந்தும் கூட அம்மன் காப்புக்காக முற்பதிவு செய்து பணம் கட்டி 21 நாட்கள் பூசையிலிருந்த அந்தக் காப்பை தபாலில் பெற்றுக் கட்டுகின்ற பக்தர்கள் கூட இன்றும் எங்கும் ஊரில் நிறைந்திருக்கின்றார்கள். இவ்வாறாக பக்தர்களுடைய நம்பிக்கையைப் பெற்ற இந்த விரத முடிவில் தீபாவளி ஆரம்பமாகும். தீபாவளியை தொடர்வது கந்தசட்டி, முருகனுக்கான கடும் நோன்பு இருக்கின்ற 7 நாள் விரதம் இது. ஆறுமுகப்பெருமானுடைய அவதாரத்தையும் அவர் சூரபத்மனை போரில் வென்று தேவர்களுக்கு அருள் செய்ததை நினைவுபடுத்துவதற்கான விரதம் இது என்று கூறுவார்கள். 7 நாட்களும் மிளகு, சுக்கு என்று தண்ணீரோடு மாலை நேரத்தில் மட்டும் அருந்தி கடும் விரதம் இருக்கின்ற பலரும் உள்ளார்கள். வயது வேறுபாடின்றி இந்த விரதம் எல்லோராலும் கடைப்பிடிக்கப்படும். 7 நாட்களும் மாலை நேரம் மட்டும் பால், பழம் அருந்தி இந்த விரதத்தை பிடிப்போரும் பலர். தத்தமது வசதிக்கேற்ப ஒரு நேரப் பலகாரத்தோடு, ஒரு நேர சோறோடு இந்த விரதத்தைப் பிடிப்போரும் உள்ளார்கள். சன்னதி முருகன் ஆலயம் கந்தசஷ்டிக்குப் பெயர் போனது. 7 நாட்களும் கோவிலை அண்டியுள்ள மடங்களில் தங்கி மாலைப் பூசை முடிய கோவில் தீர்த்தத்தை மட்டும் வாங்கி அருந்தி, பயபக்தியோடு இந்த விரதத்தை பிடிக்கும் ஆயிரக்கணக்கானவர்கள் இந்த ஆலயத்திற்கு வருடாந்தம் கூடுவது வழக்கம்.

7 நாளும் வீட்டுக் கோடிக்குள் வைத்திருந்த மச்சச் சட்டிகள் 8ஆம், 9ஆம் நாள் குசினிக்குள் பழையபடி வந்து விடும். எது எவ்வாறானாலும் கந்தசட்டி 7 நாட்களும் கடுமையான சைவ ஆச்சாரத்தை கடைப்பிடிப்பது ஊரின் பாரம்பரியங்களில் ஒன்றாக தொடர்கின்றது. கந்தசட்டி விரதம் கடைப்பிடிக்கப்படுகின்ற காலத்தில் தீபாவளிக் கொண்டாட்டமும் இடம்பெறும். தீபாவளிக் கொண்டாட்டம் ஐப்பசி விசேஷங்களில் ஒன்று. ஒரு புறம் விரதகாரர் சைவர்களாக இருக்க, இன்னொரு புறம் ஆடு அடித்து சாராயத்தோடு மகிழ்ச்சியாக இந்த தீபாவளியைக் கொண்டாடும் குடும்பங்களும் இருக்கத்தான் செய்தன.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

இந்த தீபாவளிப் பெருநாளன்று அதிகாலையிலே முழுகி எங்களுக்கென இருக்கின்ற புத்தாடைகளில் ஒரு முனையில் மஞ்சள் பூசி அணிந்து கொள்வதில் சிறுவயதுக் காலங்களில் எங்களுக்கு மகிழ்ச்சி. கொழும்பு உட்பட வெளியூர்களில் உத்தியோகம் பார்க்கும் மாமாக்கள், சித்தப்பாமார் என்று எல்லோரும் விடுமுறையில் தீபாவளிக்கு வருவார்கள். வருகின்ற போது, புது உடுப்பு, பரிசுப் பொதிகளும் கொண்டு வருவார்கள். வீடுகள் தோறும் பல பணியாரங்கள் சுட்டு வைக்கப்பட்டிருக்கும். தீபாவளி முழு நாளும் உறவினர் வீடுகளுக்குச் செல்வதும், உண்டு மகிழ்வதுமாக தீபாவளி முழுநாளும் உறவினர் வீடுகளுக்குச் செல்வதும், உண்டு மகிழ்வதுமாக பொழுது போகும். இவ்வாறாக வீட்டுக்கு வீடு பூரிப்போடு கொண்டாடப்படுகின்ற விழாவான இந்த தீபாவளிப் பெருநாள் அமையும். ஐப்பசி மாதம், தீபாவளியாலும், கந்தசட்டியாலும், விவசாயிகளுக்குரிய நெல் விதைப்புக்குரிய காலம் என்பதால் வடபகுதி ஆரவாரம் நிறைந்த காலமாக அமையும்.

வழமையாகவே வெள்ளி தோறும் விரதம் இருக்கின்றவர்கள், ஐப்பசி வெள்ளி என்றால் பயபக்தியோடு விரதம் இருப்பார்கள். ஐப்பசி வெள்ளியின் ஐந்து நாட்களும், முருகன் ஆலயங்கள் எல்லாவற்றிலுமே அதிகாலை பூசைகளைகட்டும். அதிகாலையிலேயே அந்தக் குளிர் நீரில் குளித்த உற்சாகத்தோடு கோவிலுக்குச் சென்று வருவதில் சிறுபராயத்திலே எங்களுக்கொரு மகிழ்ச்சி. இவ்வாறாக பக்தி சொட்டுகின்ற உழைப்புக்குரிய ஐப்பசி மாதம் நினைவுகளில் வரும்போதெல்லாம் நெஞ்சில் மகிழ்வைத் தந்து கொண்டிருக்கின்றது.

# கோர்த்து விடும் செய்திகள்

## ■ பாக்கு நீரிணை சிங்கள நீரிணையாகும்

எப்படியாவது தமிழ் மீனவர்களை பாக்கு நீரிணையில் மீன் பிடிக்காமல் செய்து அங்கு சிங்கள மீனவர்களை தொழிலில் ஈடுபடச் செய்யும் சதித் திட்டம் தான் போதைப் பொருள் இறப்புத் தண்டனையாம். இதற்கு ஆரிய அங்கீகாரமும் கிடைத்துள்ளது போல் தெரிகின்றது. இலங்கையின் விமானநிலையத்தில் 1.5மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள 30கிலோ போதை மருந்து வைத்திருந்த நபருக்கு இதுவரை எந்த தண்டனையும் கொடுக்கவில்லை. அதே 36கிலோ போதை பொருட்களுடன் கைது செய்யப்பட்ட பாகிஸ்தானியருக்கும் என்ன தண்டனை வழங்கப்பட்டது என்று இலங்கை தெரிவிக்கவில்லை.

## ■ கொஞ்சம் மாத்தி யோசிச்சுப் பார்ப்போமா?

எம் மீது 13வது திருத்தம் திணிக்கப்படும் போது மாகாண முதலமைச்சருக்கு தமிழ்நாடு முதலமைச்சருக்கு இருக்கும் அதிகாரம் உண்டு எனப் போதிக்கப்பட்டது. இப்போது முதலமைச்சராக இருக்கும் விக்கி ஐயா தமிழ் நாட்டு மீனவர்களைப் பாதுகாக்க என்ன செய்ய முடியும்? அதையே கொஞ்சம் மாத்திப் போட்டால் தெரியும் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஈழத் தமிழரை எப்படிப் பாதுகாக்க முடியும்? யோசிக்காமல் இருக்கும் வரைக்கும்தான் நாம் தமிழர்களாக இருக்க முடியும். கத்தி படத்தை எதிர்த்த மாணவர்களுக்கு செய்யப்பட்ட சித்திரவதையைப் பார்க்கும்போது தமிழ்நாட்டில் தமிழர் ஆட்சி நடக்க வில்லை எனத் தெரிகின்றது.

## ■ புலத்திற்கு வந்த இனக்கொலை

நிலத்தில் இனக்கொலையாளிகள் மாவீரர் கல்லறைகளைச் சிதைத்தார்கள். இப்போது பிரான்சில் கேணல் பருதியின் நினைவுச் சின்னம் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளது. இனக்கொலையாளிகள் இனி எங்கள் வீடுகளைத் தேடியும் வருவார்கள் !

## ■ இந்தத் தடவையும் 'கள்வரைத்' தேடி வருவார்களா?

உவங்கள் கள்ளங்கள் கணக்குக் காட்டவில்லை உவங்கட மாவீரர் தினத்துக்கு போகாதையுங்கோ எங்கடைக்கு வாங்கோ என்று இரண்டு ஆண்டுகளாக வானொலிகளிலும் தொலைக்காட்சிகளிலும் அழுது கொண்டு அலைந்தவர்கள் பின்னர் எல்லாவற்றையும் விட்டிட்டினம். கொழும்பில் இருந்து வரவேண்டியது வராததால். பிறகு 2013 நவம்பர் 27ம் திகதி எக்ஸெல் மண்டபத்தில் இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது போல் வந்து நின்றார்கள். இந்த முறையும் வாருங்கோ.

## ■ சுத்துறமணிய சுவாமிக்கு என்ன ஆச்சு?

இலண்டனுக்கு ஒரு மாநாட்டுக்கு சூனா சுத்துறமணிய சுவாமி வருவதாக ஏற்பாடாகி இருந்தது. பின்னர் அவர் வரவில்லை. தமிழர்களை எலிகள் என்றும் பொறுக்கிகள் என்றும் தொடர்ந்து எழுதிவரும் இந்த பூநூல்காரனுக்கு என்ன நடந்தது. இங்கு கறுப்புப் பூனைப்படைக் காவல் இல்லையோ? ஏதோ ஒரு நாள் விடுமுறை பல ஆயிரம் இலண்டன் தமிழர்களுக்கு மிச்சம்.

## ■ போலிச் செய்திகளுக்கும் கைதுகளுக்கும் குறைச்சல் இல்லை!

மாயன் கலண்டரின்படி உலகம் அழியப் போகுது என்றார்கள். ஒன்றும் நடக்க வில்லை. ஆறு நாட்கள் உலகம் இருளில் மூழ்கப் போகிறது என்று ஒரு போலிச் செய்தி. அது போதாது என்று லைக்காகாரனை கொழும்பில் கைது செய்துவிட்டாங்கள் என்று ஒரு போலி நாடகம் ஆடி அதுவும் ஒரு செய்தி. அடுத்த படம் தயாரிக்க முன்னர் உண்மையாகவே ஒரு கைதைச் செய்து ஒரு உல்லாச விடுதியில் ஒளிச்சு வைச்சாவது ஓட்டவாயவிற்கு நண்பர்கள் தாம் இல்லை என்பதை நிரூபிக்கட்டும். சில பேர் இதை வாசிக்க முடியாமல் போகலாம். ***ஒரு பேப்பர்*** ரை இங்கிலாந்தில் உள்ள கடைகடையா வெள்ளை வானில் போய் அள்ளிக் கொண்டு போய் விடுவாங்கள். ***ஒரு பேப்பர்*** இணையத் தளத்தை முடக்குவாங்கள்.

- *ஊருளவாளி*

**மாவீரர்களே! உங்கள் தியாகத்தால் தேசியம் உருவாக்கம் பெறுகிறது**
**உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி வைரம் பெறுகிறது....**

TrainingConnect
For British Citizenship and Indefinite Leave to Remain (ILR) | All Applicants after 28th October 2013
Home Office Approved Test | City & Guilds Approved Centre
Life in the UK Course B1 Speaking & Listening
- Settlement
- Indefinite Leave to Remain (ILR)
- British Passport/Naturalisation
IESOL Diploma (A1, A2, B1, B2, C1)
- Spouse Visa English Test
- Student Visa English Test
- Work Permit English Test

City & Guilds Approved Centre
OUR 100% COMMITMENT
We Train You until You Pass | FREE INITIAL ASSESSMENT
0207 099 2400
694-712 London Road, Hounslow, TW3 1PG
contact@trainingconnect.co.uk | www.TrainingConnect.co.uk

# புதைந்த மனிதர்களும் மௌனமாக இருக்கும் நாமும்



எங்கள் உறவுகள் மண்ணுக்குள் புதைந்த பொழுதில் தான்பலருக்குதெரிகிறதுஇன்னமும்அவர்கள்அந்தலயன் என்ற கூண்டுகளுக்குள் வாழ்ந்திருக்கிறார்கள் என்று.

அந்த கூண்டுகளே அவர்களின் கல்லறைகளாகவும் ஆகிவிட்ட பெருங்கொடுமை இப்போது.

பெருமழையும் அதனை தொடர்ந்து மண்சரிவும் வெறுமனே இயற்கை அனர்த்தம் என்ற சொற்பதத்துடன் முடித்துவிட கூடியது அல்லவே. எந்த நேரத்திலும் மண்மூடிவிடும் என்ற அச்சத்துடனேயே வாழ்வதுபோன்ற ஒரு வாழ்வு அவர்களது.

இப்போது மண்மூடியேவிட்டது. அரசாங்கம் எப்போதும் போலவே அதே சிங்கள பேரினவாத மனப்பான்மையுடனேயே அசமந்தமாக தனது நிவாரணத்தை தொடங்கியுள்ளது.

எஞ்சியுள்ளவர்களின் கட்டை பெருவிரல்களை வெட்டி எடுத்தேனும் வாக்குகளாக மாற்றும் அவசரத்தில் மந்திரிகள் மண்சரிவை பார்க்க படையெடுக்கிறார்கள்.

மண் மூடியவர்களின் எண்ணிக்கையில்கூட அரசியலை புகுத்தி அசிங்க அரசியல் நடாத்துகிறது அரசியல். அதற்கு உடந்தையாக மலையக அரசியல்வாதிகளில் ஒருசிலரும்..

மகிந்த அரசாங்கம் எல்லாம் வடிவாக செய்துள்ளது என்று இங்கிருந்து விடுமுறைக்காக சென்று திரும்பும் போது சான்றிதழ் கொடுத்தவர்களுக்கு தெரிந்திருந்ததா மலையகத்தில் மனிதர்கள் இன்னமும் அதே லயன்களுக்குள்ளேயே வாழ்ந்து மடிகிறார்கள் என்று..

இப்போது இவற்றை எல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்க நேரமில்லை.

உதவிக்கரம் நீட்ட வேண்டிய அவசரநிலை இப்போது. அங்கே மண்ணுக்குள் புதையுண்டுபோனவர்களும் அவர்களை இழந்து நிர்க்கதியாக நிற்பவர்களும் வேறு யாருமல்லர். எமது உறவுகள். எமது சொந்தங்கள்.

எமது இனத்தின் மனிதர்கள்.. இது நடந்து இன்றுடன் மூன்று நாட்கள் முழுதாக முடிந்த பின்பும் இன்னும் நாம் இதனை முதன்மை செய்தியாக எமது மக்களுக்குள் சென்றடைய வைத்து அதற்கு ஊடாக உதவி செய்ய வேண்டும் என்ற உணர்வை தூண்டவில்லை- அல்லது தூண்டியது போதவில்லை என்றே தெரிகிறது..

இங்கிருக்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை அங்கு உடனடியாக சென்று உதவ வேண்டும் என்ற அவசர கோரிக்கைகள் இங்கிருக்கும் நம் எல்லோராலும் விடப்பட வேண்டும்.

தமிழ் அமைப்புகள் தமது நிகழ்ச்சிநிரல்களுக்கிடையில் இந்த மக்களுக்கான உதவி வழங்கலையும் இப்போதே சேர்த்து செயற்பட வேண்டும்.

நாம் அவர்களுடன் நிற்கின்றோம் என்ற சேதிகூட அவர்களுக்கு பெரும்பலமாகவும் நம்பிக்கையாகவும் அமையும். பேரனர்த்தம் ஒன்றினுள் அமிழ்ந்து அல்லலுறும் எமது சகோதரர்களுடன் நாம் தோளோடு தோள் நின்று அணைக்க வேண்டிய பெரும் நேரம் இது. முக்கியமான பொழுது.

தாயகத்தில் பல்கலைகழக மாணவர்களில் இருந்து ஆரம்பித்து இப்போது தமிழ் கட்சிகளும் இதில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளது நல்ல ஒரு குறியீடுதான்.

நாமும் புலம்பெயர் தேசங்களில் இருந்து எமது கரத்தை நீட்டியே ஆகவேண்டும். இங்கிருக்கும் கிராமிய- ஊர் அமைப்புகள், பாடசாலை சங்கங்கள், மத நிறுவனங்கள், விடுதலைக்கான அமைப்புகள் அனைத்துமே இதில் தமது கவனத்தை குவிக்க வேண்டிய நேரத்தில் நிற்கின்றோம் நாமனைவரும்.

## மகிந்த அரசாங்கம் எல்லாம் வடிவாக செய்துள்ளது என்று இங்கிருந்து விடுமுறைக்காக சென்று திரும்பும் போது சான்றிதழ் கொடுத்தவர்களுக்கு தெரிந்திருந்ததா மலையகத்தில் மனிதர்கள் இன்னமும் அதே லயன்களுக்குள்ளேயே வாழ்ந்து மடிகிறார்கள் என்று..

இந்த மக்களின் விடுதலைக்காகவும் சேர்த்தே நாற்பதினாயிரத்துக்கும் அதிகமான மாவீரர்கள் தம் இன்னுயிர்களை வழங்கினார்கள். இன்று மண்மூடிக்கிடக்கும் இந்த மண்ணில் இருந்து வந்த எத்தனையோ மகத்தான போராளிகள்- தளபதிகள் தமிழீழ விடுதலைக்காக ஆகுதி ஆகி இருக்கிறார்கள்.

இவர்கள் என்பதும் நாம் என்பதும் வேறுவேறு அல்ல. உதிரத்தால்- நெஞ்சிருந்து எழும் உயிர் மொழியால்- உணர்வுகளால் ஒரே இனமாகிய எமது மக்களுக்கு இப்போது உதவாதுவிட்டால் இனி எப்போது.?

நமது மக்கள் எல்லோரும் இணையும் ஒரு உதவும் நிகழ்வு நிரலை நடைமுறைப்படுத்துவது என்பது எல்லா விதமான அரசியல் வேலையையும்விட அதி சிறப்பானது- வீரியமானதும்கூட. அதனை நாம் இன்றே செய்திட திட சங்கல்பம் கொள்வோம்.

உறைந்து போயிருக்கும் மௌனத்தை விடவும் ஒரு ஆறுதல் வார்த்தை அதிக கனமானது. அதனைவிட இந்த நேரத்தில் அளிக்கும் உதவி என்பது ஆயிரம் மடங்கு கனமானது - நிறைவானது.

*- ச.ச.முத்து*

# இப்பிடியும் ஒரு தலைவன் இருந்தான்...



கப்டன் தோமஸ் சங்கரா

ஆபிரிக்காவின் சே குவாரா

(டிசம்பர் 21, 1949 – அக்டோபர் 15, 1987)

ஒகஸ்ட் 4 , 1983 ஒரு இராணுவ புரட்சியின் மூலம் தனது 33 வது வயதில் மேற்கு ஆபிரிக்க நாடான அப்பர் வோல்டாவின் ஆட்சியை கைபற்றினார். பதவிக்காக, எதிர்காலத்தில் தேசத்தை காட்டிக்கொடுக்கபோகும் தனது நண்பர்களினாலேயே சுட்டுகொல்லப்படும் வரை (அக்டோபர் 15 , 1987 ) 4 ஆண்டுகள் 2 மாதம் 12 நாட்கள் ஆட்சிப்பொறுப்பில் இருந்தார். இந்தக் குறுகிய காலத்தில் அவர் செய்தவை

• அப்பர் வோல்டா என்று அழைக்க பட்ட தன்னாட்சி அதிகாரம் பெற்ற பிரெஞ்சு காலனியான தங்கள் தேசத்துக்கு புர்கினபாசோ (Burkina Faso) என்று பெயர் மாற்றினார் - பொருள்: தலை நிமிர்ந்து வாழ்பவர்களின் தேசம்.

• பெண் சிசுக்கொலை , பெண்களுக்கு கட்டாய திருமணம் மற்றும் ஆண்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களை மணம் புரிவதற்கு தடை விதித்தார்.

• உயர் அரச பதவிகளில் இருப்பவர்களுக்கு வழங்கப்படும் மெர்செடீஸ் வகை கார்களை விற்றுவிட்டு இருப்பதிலேயே விலை குறைந்த ரெனால்ட் 5 வகை கார்களை வழங்கினார்.

• அவரது ஊதியம் உட்பட உயர் அரச பதவியில் இருக்கும் அனைவரது மாத ஊதியங்களும் குறைக்கப்பட்டன. உயர் பதவிகளில் உள்ள அரசாங்க ஊழியர்கள் அனைவரும் தங்கள் ஒரு மாத ஊதியத்தை மக்கள் பணிகளுக்கு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார்

• எந்த அரசாங்க அமைச்சரோ அதிகாரியோ விமானத்தில் முதல் வகுப்பில் பயணம் செய்யக்கூடாது. அரசாங்கத்தால் வழங்கப்படும் கார்களுக்கு வாகன வோட்டிகளை அரசு வழங்காது.

• பெரும் நிலக்கிழார்களின் அளவுக்கு அதிகமான நிலங்கள் அதில் வேலை செய்த விவசாய கூலிகளுக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் 3 ஆண்டுகளில் ஹெக்டேருக்கு 1700 கிலோவாக இருந்த கோதுமை உற்பத்தி 3800 கிலோவாக உயர்ந்தது.

• அதுவரை பெற்றுவந்த எல்லா வெளிநாட்டு உதவிகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. உனக்கு உணவிடுகிறவன் உன்னை கட்டுப்படுத்துகிறான் - எங்கள் மக்களுக்கு நீங்கள் உதவவும் வேண்டாம் எங்களை சுரண்டவும் வேண்டாம் என்பது அவரின் கொள்கை.

• ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமைக்கு குரல் கொடுத்தார். ஆபிரிக்க நாடுகளை ஆக்கிரமித்திருந்த காலனிய ஆதிக்க சக்திகளுக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றினார்.

• ஆபிரிக்க நாடுகளுக்கு காலனிய சக்திகள் வழங்கிய கடனை திருப்பி தரவேண்டியதில்லை என்றும். முறைப்படி அவர்கள் தான் சுரண்டப்படும் ஆபிரிக்க நாடுகளுக்கு பணம் தரவேண்டும் என்றும் பரப்புரை மேற்கொண்டார்.

• தனது அலுவலகத்திலோ வீட்டிலோ காற்றுச்சீரமைப்பிகளை (Air conditioner) பயன் படுத்த மறுத்துவிட்டார்.

• அவர் சுட்டுக்கொல்லப்படும் போது அவரிடமிருந்த மொத்த சொத்து - ஒரு பழைய கார், 4 மோட்டார் சைகிள்கள், 3 கிட்டார், 1 குளிர் சாதனப்பெட்டி (Refrigirator)

• இவை அனைத்தையும் விட முக்கியம் எந்த அரசாங்க அலுவலகத்திலோ பொது இடங்களிலோ தன் புகைப்படத்தை வைக்ககூடாது என உத்தரவிட்டிருந்தார் ....

